லண்டனில் அதிக வாசகர்களை கொண்ட ஒரே ஒரு மாத சஞ்சிகை


Best Foods
5வது கிளை
புரட்டாசி மாதம் 23ஆம் தேதி
(9.10.2008) வியாழக்கிழமை
விஜயதசமி அன்று
லண்டன் ஈஸ்ட்ஹாமில்
திறக்கப்பட உள்ளது
414-416 High Street North
Eastham, London E12

FREE ISSUE
October 2008



# லண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information



## அறிஞர் அண்ணா 100

மாதாந்திர செய்திச் சஞ்சிகை
A monthly information digest


Lakshmis Jewellers
276 High Street North
London E12 6SA UK
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448
ஏழை இதயத்தின்
மகிழ்ச்சியே
இறைவனுக்கு
தேர்த்திருவிழா
-அறிஞர் அண்ணா
ஆயிரங்காலத்துப்
பயிருக்கு
ஆண்டாண்டு
பாரம்பரியம்
உள்ள
தங்க நகைகள்

# Best Foods

**Best Foods**

259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269 Fax : 684 4677

**Best Foods**

364 - 366, Bath Road, Hounslow, Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002 Fax : 020 8570 2323

**Best Foods**

249 Northolt Road Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

**Best Foods**

11-13 Ealing Road
Wembley
Middlesex HAO 4AA

**Eastham** தமிழ் மக்கள் அதிர்ஷ்டசாலிகள்,
(9.10.2008) வியாழக்கிழமை விஜயதசமி அன்று

## மாபெரும் 5-வது கிளை

## திறப்பு விழா

# உள்ளே...



# தமிழர் தகவல்
## Tamil Information

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"- குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2039
சர்வதாரி — ஐப்பசி
மலர் : 06
இதழ் : 64
அக்டோபர் 2008



முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :

Email : **jothy5@yahoo.co.uk**



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் : அரவிந்தன்

Editor : Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
கமலா ஆர்ட்ஸ்

Computer Layout :
Kamala Artz



படைப்புகள்
ஆக்கியோரின்உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே ! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்



விடுதலைப் பெற
ஒரே வழிதான் உண்டு
வீரத்தியாகம் !
— அண்ணா



பக்கம் 6 – அண்ணாவோடு போயிற்றோ அனைத்தும்.

பக்கம் 30 – அண்ணாவைப் பற்றிய சில சுவையான செய்திகள்

பக்கம் 42 – சைவநீதியில் திருமுறை

பக்கம் 44 – 8ஆம் தேதி பிறந்தவர் பலன்







வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !

# அன்பார்ந்த வாசகர்களே...



**அறிவாலும் ஆற்றலாலும்**
**ஆகாத காரியம் இல்லை.**
**அறிவும் ஆற்றலும் சேர்ந்து**
**உழைத்தால் வெற்றி நிச்சயம்!**
**– அறிஞர் அண்ணா**

## நகல் எடுக்க முடியாத நாகரிகம்

“வெற்றிக் கொடியோடு வெளிநாடு சென்ற தமிழர்கள், இன்று வெற்றுப் பாத்திரத்தோடு ஊர் திருப்பிக் கொண்டிருக்கின்றனர்” என்று தன் வேதனையை வெளிப்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா. உலகத் தமிழர் அனைவரின் மீதும் உயர்ந்த பார்வையும், உன்னதப் பரிவும் அவருக்கு இருந்தது.

1956ஆம் ஆண்டே, ஈழத்தமிழர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று தி.மு. கழகத்தின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கலைஞர் முன்மொழிந்த அந்தத் தீர்மானம், அண்ணா பொதுச் செயலாளராக இருந்தபோது நிறைவேறியது.

அண்ணாவின் எழுத்தும், பேச்சும் கடல் கடந்தும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்ப மொழியும் பேராற்றல் அவரிடம் இருந்தது. எதிர்க்கட்சியினரைக் கூட, மிக நாகரிகமாக உயர்த்திப் பேசும் பண்பாட்டுக்கு அவரே சொந்தக்காரராக இருந்தார். ‘மாற்றான் தோட்டத்து மல்லிக்கைக்கும் மணம் உண்டு’ என்று எத்தனை தலைவர்களால் எளிதில் ஏற்றுக் கொண்டுவிட முடியும்?

1957ஆம் ஆண்டு, அண்ணா சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள தண்டலம் என்னும் சிற்றூருக்கு, அன்றைய முதலமைச்சர் காமராசரை அழைத்து வந்தார். ஊரே கூடி நின்று இருவரையும் வரவேற்றது.

அக்கூட்டத்தில் வரவேற்புரை ஆற்றிய அண்ணா, “வழி கண்டுபிடிக்க முடியாத சிற்றூருக்கு, ஒரு முதலமைச்சரை அழைத்து வருவதா என்று கேட்டனர். ஒரு நாட்டுக்கே வழிகாட்ட வேண்டிய, காட்டக் கூடிய ஒரு தலைவரைத்தானே அழைத்து வந்திருக்கிறேன் என்று விடை சொன்னேன்” எனப் பேசியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரையும் இப்படிப் புகழ்ந்து பேசும் பண்பு, அண்ணாவிடம் அன்றி, வேறு யாரிடம் இருந்தது?

அறிஞர் அண்ணாவிடம் நாம் கற்றுக் கொள்ள இன்னும் ஆயிரம் செய்திகள் உள்ளன. கவிஞர் அப்துல் காதரின் கவிதை சொல்வது போல், “நகல் எடுக்க முடியாத நாகரிகம் அண்ணா”.

## கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் கவிதை

நீ தமிழில் பேசினாய்
தன் வேலை அனைத்தையும் விட்டுவிட்டுத்
தமிழ்த்தாய் வந்து
முன்வரிசை அமர்ந்து
முனைப்போடு குறிப்பெடுத்தாள்

நீ ஆங்கிலத்தில் பேசினாய் –
அயல் மொழி வல்லுநர் கூட வியக்கின்ற
இதயத்தின் மொழியாய் இருந்தது அது!

நீ நாடாளுமன்றத்தில் முழங்கினாய் –
தென்கோடித் தமிழனும் தலை நிமிர்ந்திருந்த
தங்கத் தருணமாய் இருந்தது அது!

நீ எழுதுகோலை எடுத்தாய் – மையல் கொண்டு,
தமிழ்மை வந்து தானாய் நிரம்பியது
செல்லமாய் அதை நீ
சில சமயம் தட்டும்பொழுது,
சிதறும் துளிக்காய்
அங்கே,
ஆங்கிலம் வந்து கையேந்தி நின்றது!

மூடி வைக்காத உன்மேல்
கோபம் எனக்கு என்று
ஊடிக்கொண்டிருக்கையில் மட்டுமே
உன் சட்டைப்பையில் வைத்து
அதனை சமாதானப் படுத்தி இருக்கிறாய்!

நீ
இப்பூவுலகில் தங்காது
எமைப் பிரிந்தாலும்
பிரியாது, அணைந்திருக்கிறாய்
என்
தலைவரெனும் தனி உருவில் இன்று!



**அண்ணா நூற்றாண்டையொட்டி அணையா விளக்கு அண்ணா எனும் தலைப்பில் கலைஞர் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்களின் கவிதை**

## கவிஞர் வைரமுத்துவின் கவிதை

அமுதது...?
தொலைக்காட்சி தொடர்போல்
ஈழத்தமிழர் இன்னல் நீளும்போது

நீ விரும்புவது?

திராவிட இயக்கம்
விஞ்ஞானப்படுத்தப்படுவது

வெறுப்பது...?

தடியெடுத்த சிலர்
தண்டல் செய்வது
செல்போன் வைத்தவரெல்லாம்
செயலாளர் கேட்பது
உன் அணையா விளக்கு
என்ன சொல்கிறது?


தன் கல்யாணப் பத்திரிகையை தவிர
இன்னொன்று படிக்காத
இளைய தலைமுறையைப்
படி படி என்கிறது

உன் நூற்றாண்டில் நீ
பெருமைகொள்ளும் கூறு ஒன்று கூறு...?

என் நூற்றாண்டுக்குத் தலைமை கொள்ள
என் தம்பியே வாய்த்தது

உன் நூற்றாண்டுக்கு கலைஞர்
தலைமை ஏற்றார்
கலைஞர் நூற்றாண்டுக்கு...?

அய்யமென்ன தம்பி
கலைஞர் நூற்றாண்டுக்கு
கலைஞரே தலைமை ஏற்பார்



**மாதமிரு திருக்குறள் கற்போம்**

## மக்கட்பேறு

*தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மண்ணுயிர்க் கெல்லாம் இனிது.* *(குறள் 68)*

தம் பிள்ளைகளின் அறிவுடைமை, தமக்கு இன்பம் கொடுப்பதை விட உலகத்து உயிர்கட்கு மிகுந்த இன்பத்தைக் கொடுப்பதாகும்.

*ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்.* *(குறள் 69)*


தன் மகனைப்பிறர் சான்றோன் என்று சொல்லக் கேட்ட தாய், தான் அவனைப் பெற்ற காலத்துக் கொண்ட மகிழ்வைவிட மிகுதியாக மகிழ்வாள்.




லண்டன் சைவ கோயில் ஒன்றியத்தினால் நடத்தப்படும் சைவ மாநாடு இம்முறை 11ஆவது மாநாடாக நடைப்பெற்று முடிந்தது. இந்த மாநாட்டினால் சைவ மக்களுக்கு ஏதாவது பெரிய நன்மை ஏற்படாவிட்டால் கூட பல சமய மடாதிபதிகள் லண்டனுக்கு வருகை புரிந்தது குறிப்பிடத்தக்கது. இதற்கு காரணமாய் இருந்த ந. சச்சிதானந்தம் அவர்கள் பாராட்டுதலுக்குரியவர். தமிழ்நாட்டின் தலைசிறந்த ஆதீனம் மதுரை ஆதீனம் அவர்கள், தருமபுர ஆதீன கட்டளைக் குரு, குன்றக்குடி அடிகளார், பேரூர் ஆதீனம் அவர்கள், மருதாசலம் அடிகள் அவர்கள், இவர்கள் எல்லோரும் லண்டனுக்கு வருகை தந்து சிறப்பித்துள்ளார்கள்.

மாநாட்டுக்கு வருகை தந்த மதுரை ஆதீனம் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் அவர்களை அவரது ஆதீனத்தில் தரிசிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. என்னை இன்முகத்துடன் வரவேற்று லண்டன் தமிழர் தகவலை தான் அக்கறையுடன் வாசித்த விடயத்தைச் சொன்னார். தமிழ் நாட்டில் உள்ள ஆதீனங்களில் எதையும் எதிர்பார்க்காமால் தனது சொந்த செலவில் அழைப்புகளை ஏற்று அந்த இடங்களுக்கு சென்று அருள்பாலிக்கும் ஒரே ஆதீனம் இவராகத்தான் இருக்க முடியும். ஈழத்துப் பிரச்சினையில் கடந்த 25 வருடங்களாக தனி ஈழம்தான் சரியான தீர்வு என்று சொல்லி வருபவரும் இவர் ஒருவரே. இவர் தமிழ் ஈழத்துக்கு ஆதரவானவர் என்று தமிழர் தகவல் இவர் வருமுன்னமே செய்தி வெளியிட்டது. அந்தச் செய்தியை அக்கறையுடன் வாசிக்கும் காட்சியை இங்கு காண்கிறீர்கள். லண்டன் மக்களுக்கு என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டபோது அவர் லண்டன் சைவ மக்கள் சமயத்தின் மீது ஆர்வமாகத்தான் இருக்கிறார்கள். அது பாராட்டப்பட வேண்டிய விடயம். ஆனாலும் அவர்களை கொஞ்சம் ஒற்றுமையாக இருக்கும்படி கூறுங்கள் என்று சொன்னார். சமயத்தைப் பற்றிச் சொல்லும்போது சிவன் ஒருவரே முழுமுதற் கடவுள். சிவனை வைத்துதான் வழிபட வேண்டும். சிறுதெய்வ வழிபாட்டுக் கோயில்களில் சிவனை பரிவார மூர்த்தியாக வைத்திருப்பது மிகப் பெரிய பாவம், இதையும் அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கூறினார். மிகுந்த மகிழ்ச்சியுடன் விடைப்பெற்றேன்.

பதிப்பாசிரியர்



மதுரை ஆதீனம் அவர்களுடன், லண்டன் ஊடகவியலாளர், செய்தி வாசிப்பாளர், விமர்சகர் ச. சிறீரங்கன் அவர்கள்.

படப்பிடிப்பு. கருணைலிங்கம்
(தென்றல் தொலைக்காட்சி)



# அண்ணாவோடு போயிற்றோ அனைத்தும்!



இரா. உமா

தமிழ்த்தாயின் தவப்புதல்வனுக்கு இது நூற்றாண்டு. தன்னிகரில்லா அத்தலைவனின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் தமிழ்நாடே மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிறது.

பள்ளிகளில் பேச்சுப்போட்டிகள், பல்கலைக்கழகங்களில் கருத்தரங்குகள், திராவிடக்கட்சிகளின் பொதுக்கூட்டங்கள், திராவிட இயக்கங்களின் ஆய்வரங்கங்கள், பத்திரிகைகளில் கட்டுரைகள் எனத் திரும்புகின்ற திசைகளில் எல்லாம் அண்ணா காட்சியளிக்கிறார். ஓராண்டு முழுவதும் அண்ணாவின் நூற்றாண்டு கடைபிடிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

பெரியாரின் அன்புக்குரிய தொண்டர், சிறந்த தமிழறிஞர், சொற்பொழிவாளர், நாடக ஆசிரியர், நாடக நடிகர், அப்பழுக்கற்ற அரசியல்வாதி, மனித நேய சிந்தனையாளர் இப்படி இன்னும் பல பரிமாணங்களில் மிளிர்ந்து கொண்டிருப்பவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.


சில மனிதர்களின் வாழ்க்கையில் ஏதேனும் ஓரிரு பக்கங்கள் மட்டுமே மற்றவர்களுக்கு பயன்படக்கூடியதாக, வழிகாட்டக்கூடியதாக, பின்பற்றக்கூடியதாக அமைந்திருக்கும். அண்ணாவின் வாழ்க்கையிலோ அவர் பிறந்த செப்டம்பர் 15, 1909 முதல் மறைந்த பிப்ரவரி 3, 1969 வரையிலுள்ள பக்கங்கள் அத்தனையுமே அனைவரும் பின்பற்றக்கூடிய பாடங்கள் ஆகும்.

அண்ணாவைப் பற்றி எழுத ஆயிரம் உண்டு. அவற்றில் சிலவற்றை அவருடைய நூற்றாண்டு தொடக்கமாகத் தொட்டுச் செல்வோம்.

மாணவர்கள் அரசியலைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். ஆனால் படிக்கின்ற காலத்தில் அரசியலில் ஈடுபடுவது கூடாது என்ற கருத்துடையவர் அண்ணா. அவரது கல்லூரி நாட்களே அதற்குச் சான்று. கல்லூரிப் படிப்பு முடியும் வரையில் அரசியலின் பக்கம் வரவில்லை. உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது கலைஞர் கருணாநிதி ''திராவிட நாடு'' இதழுக்கு ''இளமை பலி'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அனுப்பினார். அக் கட்டுரையை அண்ணா தனது திராவிட நாடு இதழில் வெளியிட்டார். பிறிதொரு சமயம் திருவாரூர் சென்றிருந்தபோது சிறுவனாயிருந்த கருணாநிதியை அழைத்து வரச் சொல்லி பாராட்டினார். அதோடு ''படிப்பில் கவனம் செலுத்து, படித்து முடித்த பிறகு இது போன்று கட்டுரைகள் எழுதலாம்'' என்றும் அறிவுரை கூறினார்.

கிடைத்தால் போதுமென்று கருவிலேயே தங்கள் கட்சியின் உறுப்பினராக்கி விட அலையும் அரசியல்வாதிகளுக்கிடையில் வலிய வந்தவரை ஏற்ற பருவம் இதுவன்று என்றுணர்த்தி கல்வியின் பால் கவனத்தை செலுத்திய கண்ணியம் மிக்க தலைவர் அவர்.

1935இல் பகுத்தறிவு பகலவன் தந்தை, பெரியாரின் கரங்களோடு


Ayngaran
International
AYNGARAN
30 High Street, Collierswood
London SW 19 2AB
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 540 1500
Fax : 00 44 (0) 208 543 8400
Email : shop@ayngaran.com
Unit 19, Riverside Business Park
Lyon Road, Wimbledn
London SW19 2RL
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 543 4477
Fax : 00 44 (0) 208 543 4466
Email : sales@ayngaran.com
367 High Street North
East Ham
London E12 6PG
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 471 3111
00 44 (0) 208 471 3133
ஐங்கரன்
தொலைக்காட்சியில்
கலைஞர்
தொலைக்காட்சி
தற்போது
இலவசமாக
காண்பிக்கப்படுகிறது
Ayngaran நான்காவது கிளை
11-13 Ealing Road Wembley Middlesex HAO 4AA

இணைந்தன பேரறிஞர் அண்ணாவின் கரங்கள். படித்துக் கொண்டிருக்கும்போதே வேலைக்கு விண்ணப்பிக்கும் இளைஞர்களுக்கு மத்தியில் ''பொது வாழ்வில் ஈடுபடவே விரும்புகிறேன்'' என்று சொன்ன அண்ணாவின் கரங்களை மேலும் இறுகப் பற்றிக் கொண்டன பெரியாரின் கரங்கள். பெரியாரின் பெருமதிப்புக்கும், பேரன்பிற்கும் உரிமையாளரானார் அண்ணா. பெரியாரின் நிழலாகத் தொடர்ந்தார். பெரியார் – மணியம்மையார் திருமணத்தை முன்னிட்டு எழுந்த கருத்து வேறுபாடுகளால் 1949இல் பெரியாரை விட்டு பிரிந்தார்.

அதே ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பெயரில் புது கழகம் கண்டார் அண்ணா. பெரியார் அண்ணாவை நோக்கி கடுமையான விமர்சனங்களை அள்ளி வீசினார். அத்தனையையும், ஒரு தாய் தன் பிள்ளைக்குச் சொல்லுகின்ற அறிவுரைகளாகக் கருதி இன்முகத்தோடு எதிர்கொண்டார் அண்ணா.

''நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர்தான். அந்தத் தலைவர் பெரியார் ஒருவர்தான். திமுகவின் தலைவர் நாற்காலியை பெரியாருக்காக காலியாகவே வைத்திருக்கிறோம்.'' அண்ணாவின் இதயத்தை வெளிகாட்டிய பேச்சு அது. பெரியாரோடு இருந்த

பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சராக வீற்றிருந்த பொற்காலம் அது. அந்த நேரத்தில் பள்ளி மாணவனாக இருந்த நான் இளமைப் பருவத்தில் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க. என்ற அமைப்பைத் தொடங்கி, நடத்தி வந்தேன். அன்றைய காலத்தில் இளைஞரணி என்ற இப்போதைய அமைப்பு உருவாக்கப்படவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 60 வயதை அடைந்து மணி விழா கொண்டாடுகின்ற காலம் அது. இளைஞர் தி.மு.க.வின் சார்பில் அண்ணாவை அழைத்து மணி விழா கொண்டாடிட திட்டமிட்டு, அண்ணா அவர்களை சந்திக்க, நுங்கம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்திற்குச் சென்றேன். அந்த நேரம் அங்கே குழுமியிருந்த என்.வி.என். நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க. ராஜாராம் மற்றும் சிலர் என்னிடத்தில் என்ன விவரம் என்று விசாரித்துவிட்டு, அண்ணாவுக்கு உடல் நலமில்லை சந்திக்க இயலாது எனக் கூறி, என்னைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.



தம்பி இருக்கிறான். என் வேலையை
அவன் தொடர்ந்து செய்து வருவான்
உங்களை வீழ்த்த வீரன் இருக்கிறான்.
நான் கடைசி அல்ல, நான் துவக்கம்!
-அண்ணா

வருந்திய முகத்தோடு வீடு வந்து சேர்ந்தேன். நான் வந்து சென்ற செய்தி அண்ணா அவர்களுக்கு தெரிந்தவுடன், என்னை அழைத்து வரச்சொல்லி அவரது காரையே கோபாலபுரத்துக்கு அனுப்பி வைத்தார்.

அண்ணா என்னை அழைத்தார் என்ற செய்தி கேட்டு அவரது பரந்து விரிந்த விசாலமான இதயத்தில் இந்தச் சிறுவனுக்கும் ஓர் இடம் இருக்கிறதே என எண்ணி மகிழ்ச்சியில் திளைத்தேன். அந்தக் காரில் நான் அண்ணாவின் வீடு சென்று அவரைச் சந்திந்தபோது, ஏன்? வந்து விட்டு பார்க்காமல் சென்றுவிட்டாய்? எனக் கேட்டார். தாங்கள் உடல் நலமில்லாததால் பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டனர்: என்றேன்.

அவர்கள் சொன்னால் நீ சென்று விடுவதா? எனக்கேட்டு மேலும் வந்த விசயம் என்ன? எனக் கேட்டார். கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. சார்பில் தங்களுக்கு மணிவிழா கொண்டாட வேண்டும். அதற்குத் தாங்கள் நாள் ஒதுக்கித் தர வேண்டும். அதற்காகத்தான் வந்தேன் என்றேன். சரி. தேதி பின்னர் தருகிறேன், போய்விட்டு பிறகு வா என்றார். இல்லை, இல்லை இப்போதே தேதி கொடுங்கள், மணிவிழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றேன். என்ன? உன் அப்பனைப் போலவே பிடிவாதமாக இருக்கிறாய்? என அன்போடு கேட்டுவிட்டு தேதியும் ஒதுக்கித் தந்தார்.

இந்த விழாவில் பங்கேற்று அண்ணாவுக்கு பொன்னாடைப் போர்த்த வேண்டுமென சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்களையும் அழைத்தேன். ஒப்புதல் அளித்தார்கள். விழா ஏற்பாடுகளை இளைஞர் தி.மு.க சார்பில் தீவிரமாகவும். ஆர்வமாகவும் செய்துகொண்டிருந்தோம்.

நான் சந்திந்து வந்த சில நாட்களுக்குப் பிறது அண்ணா நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றுவிட்டதால் அந்த விழா நடத்த இயலாமலே போய்விட்டது. என் ஆசை நிராசையாகிவிட்டது.

அந்த விழா நடத்த இயலாமல் போய்விட்டதே என்ற ஏக்கமும், வருத்தமும்தான் என்னால் இன்னும் மறக்க முடியவில்லை – எனினும் ஓராண்டு முழுவதும் அண்ணாவின் நூற்றாண்டு விழாவை கொண்டாடி நெல்லையில் நடைபெற்ற இளைஞரணி மாநாட்டில், ஆலோசனையை முன்மொழிகின்ற வாய்ப்பைப் பெற்றேன் என்பதை எண்ணிப் பூரிப்பும், பெருமையும் அடைகிறேன்.

திரு. மு.க. ஸ்டாலின்

– நன்றி அறிஞர் அண்ணா நூற்றாண்டு சிறப்பு மலர்

மீண்டும் Tamil House-இல்
மார்க்கண்டன் Solicitors

**MARKENDAN &**
**UDDIN SOLICITORS**

Solicitors & Administrators for Oaths

We Specialise in
For all your needs in immigration
(All aspects upto house of lords)
Commercial & Residential
Conveyancing, Employment,
Civil Litigation, Consumer Problems,
Lastwill, Power of Attorney,
Sponsorship Declaration
HSMP, Workpermits

**Tamil House, 720 Romford Road**
**London E12 6BT**
**Tel : 020 8514 8300, 07830 285 634**
**Fax : 020 8514 8381**
**Email : info@msssolicitors.com**

Mr. Markandan : 07956 386 578
Mr. Uddin : 07957 455 670

எவரெஸ்ட்
Curry King

**24 Loampit Hall**
**Lewisham SE13 7SW**
**Tel : 020 8691 2233**



அசத்தலான
அசைவ
சுவைக்கு

Breakfast Lunch Dinner

வெம்பிளியில் இன உணர்வான மளிகை கடை

MALAR
Supermarket

543- High Road
Wembley Middlesex, Hao 2 DJ
**Tel : 020 8795 5797**

உங்கள் சகல தேவைகளையும்
பூர்த்தி செய்கிறது

24 மணி நேர சேவையில் ஒரு மளிகை கடை

**மலர்**
**சூப்பர் மார்க்கெட்**



லண்டனில்
பொற்கை
வண்ணர்களின்
நிர்வாகத்தில்
இயங்கும்
ஒரே நகை மாடம்



**mierra**
Jewellery Mart
*Gems & Jewellery*
34 London Road, Tooting
London SW 17 9HP
**Tel : 020 8648 7750**
Mobile : 07958948685
www.meera_jewellery.com

## மாமனிதர் மனிதநேயர்



அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் அமெரிக்கா பயணத்திற்கு ஏற்பாடு ஆகியிருந்தது. அமெரிக்கா செல்லும் வழியில் இத்தாலி சென்றார் அண்ணா. அது 1968ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17ஆம் நாள். ரோமில் உள்ள வாடிகன் நகரை ஆளும் கத்தோலிக்க கிறித்துவ மக்களின் உலகத் தலைவர் போப் அவர்களை சந்திக்கிறார் அண்ணா. அப்போது போப்புக்கு உலகப் பொதுமறையாம் திருக்குறளை பரிசளித்தார். போப்பை சந்திக்க வந்தவர்களிடம் தங்களுக்குப் பிடித்ததை கேளுங்கள் என்று கேட்பது வாடிகன் அரண்மனையின் வழக்கம். அந்தக் கேள்வி அண்ணாவிடமும் கேட்கப்பட்டது. அண்ணாவுக்கு முன்புவரை போப்பைச் சந்தித்தவர்கள் ஏதேனும் ஒரு பொருளைக் கேட்டுப் பெற்று சென்றிருக்கிறார்கள். ஆனாம் நம் அண்ணா அப்படி எந்த ஒரு பொருளையும் கேட்கவில்லை. மாறாக என்ன கேட்டார் தெரியுமா? ஒரு விடுதலை வீரனை விடுவிக்கும்படி கேட்டார். வியந்து போனார் போப். போப் அவர்களே, கோவா விடுதலைக்குப் போராடிய வீரன் ரானடே இன்னும் சிறையில் வாடுகிறார். அந்த விடுதலை வீரனை விடுதலை செய்ய போர்ச்சுகல் நாட்டுக்குப் பரிந்துரை செய்யுங்கள் இதுதான் அண்ணாவின் வேண்டுகோள்.

அண்ணாவுக்கும் ரானடேக்கும் ஒரு தொடர்பும் இல்லை. முன்பின் பார்த்ததுகூட இல்லை. செய்திகளின் வழியே என்றோ ஒருநாள் அறிந்து வைத்திருந்தது. அவ்வளவுதான். ஆனால் எதேச்சையாக போப்பை சந்திக்கும் வாய்ப்பில், அந்த விடுதலை வீரன் நினைவுக்கு வரவே அவனது விடுதலைக்கு வேண்டுகோள் வைக்கிறார் என்றால் அண்ணாவின் மனிதநேயம் எத்தகையது என்பதற்கு இந்த ஒரு நிகழ்ச்சியே உச்சமல்லமா?

சரி அந்த ரானடே என்ன ஆனார்? போப்பும் அண்ணாவின் ஆசையை நிறைவேற்ற முடிவு செய்து போர்ச்சுகல் அரசுக்கு பரிந்தரைத்தார். ரானடே விடுதலை பெற்றார். அந்த விடுதலை வீரர் உள்ளம் மகிழ்ந்தார். நன்றி உணர்வை வெளிப்படுத்த இந்தியா வர முடிவு செய்து தமிழ்நாட்டிற்கு வந்த பின்னர்தான் தெரிந்தது அண்ணா மறைந்து ஒரு மாதமாகிறது என்ற செய்தி. நன்றியை நேரில் செலுத்த முடியவில்லையே என்று உள்ளம் பதைத்தது ரானடேவுக்கு. என்ன செய்வது. கடற்கரையில் உறங்கும் அண்ணாவின் நினைவிடம் சென்றார். மண்டியிட்டு அழுதார். பார்த்தோர் மனம் உருக எதையும் தாங்கும் இதயத்திற்கு நன்றியைக் காணிக்கை ஆக்கினார். நீண்டநேரம் அழுது புலம்பினார். நெற்றி நிலத்தில் முட்ட நெற்றியிலிருந்து குருதி கொட்ட ரானடேயை சுற்றி இருந்தவர்கள் அவரைத் தேற்றினார்கள்.

நாட்கள்தான் என் வாழ்வின் வசந்த காலம் என்றார். ஆத்மார்த்தமான உறவு இருந்தால் மட்டுமே இப்படிப் பேசுவது சாத்தியமாகும்.


திமுக தொடங்கிய நாள் முதல் 1977 தேர்தல் வரை அதற்கு எதிரான பிரச்சாரங்களைச் செய்து வந்த, பெரியாருக்குத் தி.மு.க.வின் வெற்றியை காணிக்கையாக்கினார். 1967இல் முதல்வரான அண்ணா நாட்டிற்கு மட்டுமல்ல நன்றி காட்டுவதிலும் அவர் முதல்வனாகவே இருந்தார்.

தந்தை மகனுக்காற்றும் நன்றி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்

என்ற குறளுக்கேற்ப, தந்தை பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களுக்குச் சட்ட வடிவம் தந்து, பெருமை தேடிக் கொண்டார் பேறறிஞர் அண்ணா.

கண்ணால் கூட காண முடியாதபடி காரின் கண்ணாடிகளை ஏற்றிவிட்டுக் கொண்டு பவனி வந்த கனவான்களையே அரசியல்வாதிகளாகப் பார்த்துப் பழக்கப்பட்ட மக்களுக்கு அண்ணா முற்றிலும் வேறுபட்டவராகத் தோன்றினார். அவரது சீவாத தலையும், காவிப் பற்களும், கைத்தறி உடைகளும், எளிய தோற்றமும் தங்களில் ஒருவராக எண்ணி நெருங்கிவரச் செய்தன. தங்களுக்கான தலைவனைக் கண்டு கொண்ட மக்கள் முதல்வராக்கி அடையாளம் காட்டினர்.

கடந்த 40 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் LKS Jewellers கொடிக்கட்டி பறந்து கொண்டிருந்த காலம். கண்ணாதிட்டி வீதியில் உள்ள இந்த கடையில் ஒவ்வொரு தை வருட பிறப்பின் போதும் மக்களுக்கு நாட்காட்டி கொடுப்பது வழக்கம். அந்த நாட்காட்டியின் முகப்பில் அவர்களுடைய கடை அச்சிடப்பட்டிருக்கும். வழமையாக அந்தக் கடையில் வருடம் முழுவதும் நகை வாங்கும் வாடிக்கையாளருக்கு தவறாமல் கடிதம் அனுப்புவார்கள் இந்த வருட அன்பளிப்பை பெற்றுக் கொள்ளும்படி. யாழ்ப்பாணம் வரும் வாடிக்கையாளர்கள் அந்த சீட்டைக் கொடுத்து நாட்காட்டியை வாங்கி செல்வார்கள். ஒருமுறை நாட்காட்டி வாங்கியவர்களுக்கு அடுத்த முறையும் நாட்காட்டி கிடைப்பது உறுதி. அது எப்படி என்றார் பழைய நாட்காட்டி அட்டையை கொண்டுவந்து கையளித்தால் புதிய நாட்காட்டி கொடுக்கப்படும். இந்த விஷயம் இந்த LKS Jewellers கடையின் மதிப்பை பெரிய அளவில் உயர்த்தியது. இந்த நாட்காட்டியில் அவர்கள் முகப்புப் படத்தை மட்டும் போட்டுக் கொடுத்த ரகசியம் இப்போதுதான் எனக்குப் புரிந்தது. அவர்கள் காயல்பட்டினத்தை சேர்ந்த முஸ்லீம்கள். ஆகவே எந்த மதசார்பான நாட்காட்டியையும் கொடுக்காமல் பொதுவாக கடைமுகப்பை அடித்துக் கொடுத்தார்கள். நல்ல வருடம் முழுவதும் பார்க்கக்கூடிய அன்பளிப்பு அது. அப்படி ஒரு அன்பளிப்பை லண்டன் ஈஸ்ட்ஹேமில் லஷ்மி ஜுவலர்ஸ் உரிமையாளர் திருநீலகண்டன் அவர்கள் மக்களுக்கு கொடுக்கிறார்கள். இந்த வருடம் பெருமளவில் நல்ல அழகான முகப்பு கொண்ட படங்களையும், அதற்கேற்ற நாட்காட்டியையும் கொடுக்க எண்ணியுள்ளார்கள். லண்டன் மக்கள் வாங்கி பயனடையலாம்.













தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்

லக்சுமிஸ் ஜூவலர்ஸ்

LAKSHMIS JEWELLERS

*House of Fine Jewellery*

276 High Street North London E12 6SA U.K.
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448


**2009 Public Holidays & Bank Holidays**

| | |
|---|---|
| New Year's Day | January 1 |
| Good Friday | April 10 |
| Easter Monday | April 13 |
| Early May Bank Holiday | May 4 |
| Spring Bank Holiday | May 25 |
| Summer Bank Holiday | August 31 |
| Christmas Day | December 25 |
| Boxing Day Holiday | December 28 |



### தமிழிலேயே கையெழுத்து

திராவிட நாடு, ஹோம்ரூல் பத்திரிகைகளில் அவர் எழுதிக் கொண்டிருந்தார். திராவிட நாடு பதினாறு பக்கங்களில் வெளிவந்தது. பதினாறு பக்கங்களையும் அவரே எழுதுவார். பேனாவைத் திறந்து முதல் பக்கத்தில் எழுதத் தொடங்கினார் என்றால், 16 பக்கங்களையும் முடித்துவிட்டுத்தான் நிமிர்வார். ஒரு அடித்தல் திருத்தல் இருக்காது. வந்த வார்த்தையே திரும்ப வராது. ஒரு வாரத்தில் எழுதிய விஷயத்தை அடுத்த வாரத்தில் பார்க்க முடியாது. எங்கு கையெழுத்துப் போட்டாலும் தமிழிலேயே கையெழுத்துப் போடுவார்.

அறிஞர் அண்ணா காலத்தில் யாழ்ப்பாண மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எங்களது கழகம் என்று பற்று வைத்த காலம். அப்போது முரசொலி பத்திரிகை கிழமை பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்து. யாழ்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள தமிழ்ப்பண்ணைக் கடைக்குத்தான் இந்திய பத்திரிகைகள் வரும். தமிழ் ஆர்வலர்கள் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு பத்திரிகைகளை வாங்கச்செல்வது வழக்கம். அந்த நாளில் அண்ணா 50 மலர் வாங்கி படித்தேன். முரசொலியின் அண்ணா 100ஆவது மலரையும் வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. காலம் கரையும் வேகம் சொல்ல முடியவில்லை.

தனது கட்சி, தன்னுடைய ஆதரவாளர்கள் என்ற கடுகு மனம் கொண்டவரல்லர். ''என்னுடைய இதயம் விசாலமானது அதில் அனைவருக்கும் இடம் உண்டு'' என்று சொன்ன அன்னை மனம் கொண்டவர் அண்ணா. ''தலைவா'' என்று தள்ளி நின்று வேடிக்கை முழக்கமிட்ட தொண்டர்கள், உரிமையுடனும், அன்புடனும் தன்னை ''அண்ணா'' என்று அழைக்கும்படி அவர்களோடு இரண்டறக் கலந்து பழகியவர்.

தம்பி  
மக்களிடம் செல்,  
மக்களோடு வாழ் !  
மக்கள் மீது அன்பு காட்டு !  
மக்களுக்காகச் சேவை செய்  
மக்களிடமிருந்து கற்றுக் கொள்  
அவர்களோடு சேர்ந்து திட்டமிடு  
அவர்களுக்கு என்ன தெரியுமோ  
அங்கிருந்து பணி தொடங்கு  
அவர்களிடம் என்ன இருக்கிறதோ  
அதைக் கொண்டு படைத்திடு

தான் செய்வதைத்தான் தம்பிக்கும் சொன்னார் அண்ணா.

அரசியல் நாகரீகத்தின் சிகரம் தொட்டவர் அண்ணா. அனுதாப அலைகளின் அரசியல் வெற்றியைத் தேடியதையும், அற்பர்களுக்கு நடுவில் விருதுநகரில் தனது கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றதற்கு மகிழாமல் பெருந்தலைவர் காமராசரின் தோல்விக்குக் கண்ணீர் வடித்தார். அதோடு, காமராசரை விமர்சித்து யாரும் பேசக்கூடாது என்றும் கட்டளையிட்டார். அந்த இதயத்தோடு இன்றைய தலைவர்களின் நிழலைக்கூட ஒப்பிட முடியாது.

அவருடைய அடுக்கு மொழிச் சொற்களும், அருந்தமிழும் மாற்றுக் கருத்துடையோரையும் மயக்கின. ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு'' என்று அவர் சொன்னது வெறும் நடையழகுக்காக அல்ல.

அண்ணா எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் சரி, முதலமைச்சராக இருந்தபோதும் சரி, நன்று எனத் தெரிந்தால் மாற்றுக் கருத்துடையரோின் ஆலோசனை களை என்றுமே புறந்தள்ளியதில்லை.

1938–39களில் சென்னை மாகாண முதல்வராக இராஜாஜி ஆட்சிப் பொறுப்பில் இருந்தார். அவர் செய்த கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து பெரியார் தலைமையில் தீவிரமான போராட்டங்கள் நடை பெற்றன. ஒரு இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய அண்ணா அவர்கள் ''தமிழ்த்தாய்க்கு இந்தி இடையூராக அமையும்'' என்று குறிப்பிட்டார். அந்தக் கூட்டத்தில் இருந்த காங்கிரஸ்காரர் ஒருவர் எழுந்து, நீங்கள் சுயமரியாதைக்காரர் ஆயிற்றே. உங்கள் தமிழ்த்தாய் எங்கே இருக்கிறாள்'' என்று கேட்டார்.

உடனே அண்ணா, ''உங்கள் பாரதத்தாயின் வீட்டிற்கும் பக்கத்து வீட்டில்தான் எங்கள் தமிழ்த்தாய் வீற்றிருக்கிறாள்'' என்று பதில் சொன்னார். கைத்தட்டல் அடங்க வெகு நேரமாயிற்று.

# AMBAAL
Jewellers



176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097

784 London Road
Thornton Heath
Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323

# CHANDRA
Super Market &
Off Licence

## COST CUTTER

உங்களுக்குத் தேவையான சகல விதமான
மளிகைப் பொருட்கள், இலங்கையிலும்,
இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்டம
உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள்,
பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர்
வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள
ஒரே இடம். ஆடியோ, வீடியோ,
சீ.டி. வி.சீ.டி ஆகியவற்றை விற்பனைக்கும்
வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

**Tel : 020 8333 8680**
209 - 211 Bromley Road
Catford, London SE6 2PG

புதிய பொலிவுடன் லூசியத்தில்

# கற்பகம்

சகலவிதமான மரக்கறி வகைகள்,
பழவகைகள் உட்பட சகல
தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்



# KATPAGAM

**36, Loampit Hill Lewisham**
**London SE 13 7SW**
**Tel : 0795763 9738**
**Fax : 020 8311 9304**

துரித பணமாற்றுச் சேவை
ரஞ்சன் இலண்டன்

# Anthoorium
*World of Designs*
## Jewellery & Textiles

For your Jewels, Gems, Sarees,
Costumes, Musical Instruments & Gift Items
please visit us...

102, B Burlington Road
New Malden,
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk



வைரத்தாலிக்கொடி
அத்துடன்
பழைய தங்கத்தில்
புதிய டிசைன் நகைகள்
செய்து கொள்ள
நாடுங்கள்...
இத்துடன்
வாத்தியகருவிகளும்
விற்பனைக்கு
உண்டு

''எதிர்க்கட்சியிலிருந்தாலும் இவனே தமிழன் மாலுமி'' என்று தமிழ்க்கடல் திரு.வி.க எண்ணியது மிகையில்லை என்பதற்கு இதுபோல் இன்னும் பல நிகழ்வுகளைச் சான்று கூறலாம்.

நகைச்சுவையிலும் வல்லவர் அண்ணா. சென்னை ராணி மேரிக்கல்லூரியில் திருவள்ளுவர் விழா. முதலமைச்சர் அண்ணா அந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராகச் சென்றிருந்தார். மாணவியருக்குப் பரிசுகளை வழங்க அண்ணாவின் துணைவியார் இராணி அம்மையார் அழைக்கப்பட்டிருந்தார். விழா தொடங்கி அண்ணா பேசிக்கொண்டிருக்கும்போது இராணி அம்மையார் விழா அரங்கிற்குள் வந்தார். பேசிக் கொண்டிருந்த அண்ணா, தலைவன் வருகைக்காக தலைவி காத்திருப்பதை சங்கத் தமிழ் இலக்கியங்களில் படித்திருப்போம். ஆனால் இங்கே அதற்கு மாறாக தலைவியின் வருகைக்காகத் தலைவன் காத்திருக்க வேண்டியதாயிற்று என்றதும் அரங்கம் சிரிப்பலையால் நிறைந்தது.

சிக்கல்களும், பிரச்சினைகளும் சூழ்ந்துள்ள என்னுடைய பொது வாழ்க்கையில், சிரிக்கத் தெரியாமலிருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிட்டிருக்கும் என்கிறார் அண்ணா. அண்ணா கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சி எது தெரியுமா? தன்னுடைய சிறந்த நகைச்சுவையால் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் சிலை திறப்பு விழாதான் அண்ணா பேசிய கடைசி பொது நிகழ்ச்சி.

அவர் எண்ணியது ஏராளம். ஆனால் அவருக்கு இயற்கை கொடுத்த கால அவகாசமோ மிகவும் குறைவு. இக்குறைந்த காலத்திலும் தனது இதயக்கதவுகளை ஈழத் தமிழர்களுக்காகத் திறந்து வைத்தார். அவர் நிலை எண்ணிக் குமுறினார்.

கண்ணீரைத்தான் காண்கிறோம் இலங்கையில்,
இடர்ப்படும் திராவிடரிடம் – அதைக்காண வெட்கமும்
வேதனையும் அடைகிறோம்.

அவர்களுக்கென்று இங்கோர் தாயகம் இருக்கிறது.
எல்லா வளமும் கொஞ்சும் நாடு.
எனினும் அவர்களுக்கு ஒரு கவளம் சோறில்லை இங்கு.
அவர்கள் படும் அவதியைத் துடைத்திடும் ஆற்றல்
படைத்த சர்க்கார் இல்லை.
அவர்கள் சொந்த நாட்டிற்கே அகதிகளாக
வந்து சேரும்போது விதவை மகளைக் கட்டித்
தழுவி விம்மிடும் நலிவுற்றத் தாய் போலாகிறது நாடு.
இப்படி துடித்தது எதையும் தாங்கும் இதயம்.


தமிழுக்காகவும், தமிழருக்காகவும், தம்பிகளுக்காகவும் வேக வேகமாகத் துடித்ததனால் ஏற்பட்ட களைப்போ என்னவோ சீக்கிரமே கடற்கரை மணல் வெளியில் ஓய்வெடுக்கப் போய்விட்டது.

இரவெல்லாம் கண்விழித்து எழுதிக் குவித்த தன் மகனை அலைகளின் ஓசையால் தாலாட்டி தூங்கச் செய்யும் படி கடல் மங்கையை பணித்திருக்கிறாள் தமிழ்த்தாய்.

அண்ணாவின் இதயத்தை இரவல் வாங்கியவர்கள் அதை இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டனரோ என்று எண்ணும்படியாக உள்ளது இன்றைய அரசியல் களம்.

அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் 35 இலட்சம்பேர். இதுவரையிலும், இதற்கு முன்னரும் எந்த ஒரு தலைவருக்கும் இறுதி அஞ்சலி செலுத்த இவ்வளவு பேர் திரண்டதில்லை என்பது கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள குறிப்பு. சாவிலும் சாதனை படைத்தவர் அண்ணா. ஒருவரியில் சொல்வதானால்

"குறுகத் தரித்தக் குறள் போன்றது
அண்ணாவின் வாழ்வு"



ஊர்காவற்றுறை கரம்பன் ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா சிட்னியை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்த இ. தம்பித்துரை அவர்கள் 23.09.2008ல் சிட்னியில் சிவபதம் சேர்ந்தார். இவர் ஞானாம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், சிவநேசன், ஜெயலட்சுமி, திலகரமணி, செல்வராணி ஆகியோரின் தந்தையும், சிவகுமாரி, செல்வரத்தினம், சண்முகநாதன், விக்னேஸ்வரன் ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் இறுதி நிகழ்ச்சிகள் சிட்னியில் நடைப்பெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்

நா. சிவானந்த சோதி – பெறாமகன், லண்டன்

ESTD 1992

# SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

**Solicitors & Estate Agents**

**Property Sales, Letting & Conveyancing**

557 High Road, Wembley, Middlesex HA0 2DW

Tel : 020 8795 0648

Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Londlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

# Jk Gold House & Fashion House



314-316 London Road

Croydon Surrey CRO 2TJ

Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677

## லண்டனில் No 1 தமிழ் மொத்த வியாபாரக் கடை

# Vaani Foods

தயாரிப்பாளரிடம் இருந்து நேரடியாக

வாடிக்கையாளருக்கு

தொலைபேசி இலக்கம்

0208 668 7648





எங்கள் விளம்பரங்களை

ஐங்கரன் இலவச

தொலைக்காட்சியில்

காணத்தவறாதீர்கள்

# நெல்லியின் பயன்கள்

உண்ணும் உணவிற்கு உயர்வு தருவது – உடல் நலத்திற்கு உறுதுணை தருவது – மனதிற்கும் உடலுக்கும் வலிமை தருவது – எழில் மிகு தங்க மேனி தருவது – ஆரோக்கிய அஸ்திவாரம் தருவது – உருக்கு போல் தேகம் தருவது – நிலையான இளமை தருவது அனைத்தும் – நெல்லியால் இயலும்.

நீரிழிவை நசித்திடும் நல்ல பசியைத் தூண்டிடும் நெல்லி

உடல் இரத்த அமிலத்தைக் குறைத்திடும் – இரத்த சோகையை சீர்படுத்திடும்

உயர் இரத்த அழுத்தம் மாயமாய் மறைந்திடும்

கோல் ஊன்றிச் செல்லும் கிழவனும் ஒரு வருடம் தினம் நெல்லி தொடர்ந்து சாப்பிட துள்ளி நடக்கும் குமரனாகலாம். முகப் பொலிவிற்கும் இளமைக்கும் நெருங்கிய சொந்தக்காரர் நெல்லியார். நமது உடலில் நலிந்த, சிதைந்த, திசுக்களை உடனடியாய் புதுப்பிக்கும் பணியை நெல்லியார் தொடர்வதுடன் நிறைவும் செய்கிறார். விட்டமின் சிக்கு சொந்தக்காரர்.

சிறுநீர் எரிச்சல், காமாலை, வாந்தி, நெஞ்செரிச்சல், வயிற்றுவலி, அஜீரணம், மூலப்பிணிகள், அதிக கொலஸ்ட்ரால், மலச்சிக்கல் நீக்கும் மந்திரக்கனி நெல்லிக்கனியே.

ஆண்டி ஆக்ஸிடன்ட் நிறைந்த கனி – ஐம்பொறிகளுக்கான அற்புதமான மருந்து நெல்லி.

அன்பால் அவனியில் எதுவும் நடக்கும்
நெல்லியால் அனைவரும் ஆரோக்கியம் அடையலாம்
உள்ளத்தைக் காட்டும் உள்ளங்கை நெல்லிக்கனி
நாளும் உள்ளத்தை உண்மையாய் சீர்படுத்தும் கனி.

காயகல்ப தயாரிப்பில் நெல்லி அதிகம் பயன்படுத்தப்படுகிறது. உடல் இரத்த சுத்தி தரும் திரிபலாவில் நெல்லி மூன்றில் ஒரு பங்கு இடம் பெறுகிறது.

ஒரு நெல்லி கிடைத்தற்கரிது. எப்பிணியையும் நீக்கி நீண்ட இளமையுடன் வாழ உதவிடும். அப்படிப்பட்ட கனி அரசன் அதியமானுக்கு கிடைத்ததை தமிழ் புலமை வாழ ஔவையாருக்கு அதை ஈந்து அருந்தச் செய்து பெருமை அடைந்தார்.

சிறியலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந்தனையே

நெல்லியில் உள்ள டானின் என்ற சத்தால் விட்டமின் சி குறையாமல்
நெடுநாள் இருக்கிறது. நெல்லியை உலரவைத்தாலும்
விட்டமின் சி குறைவதில்லை.

நாளும் நெல்லி நம்பினோர் நல்ல நலம் பெறுவது உறுதி.



# நெல்லி லஸ்ஸி

### தேவையான பொருட்கள்

நெல்லிக்காய் – 5
தயிர் – 1 டம்ளர்
சர்க்கரை – 2 டேபிள் ஸ்பூன்
தண்ணீர் – தேவைக்கேற்ப

### செய்முறை

நெல்லிக்காயை 1 டம்ளர் தண்ணீர்விட்டு வேக வைத்து, அதன் கொட்டைகளை எடுத்து நீக்கி விட்டு சதைப்பகுதியை விழுதாக மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். அதிலேயே தயிர், சர்க்கரை எல்லாம் விட்டு நன்கு அடித்து எடுத்துக் கொள்ளவும். இது மிகவும் சத்து நிறைந்த ஆரோக்கிய பானம். உடல்சூடு, கண் எரிச்சலுக்கு மிகவும் சிறந்த நிவாரணம் அளிக்கும் பானம் இது. வெயிலால் உடலில் ஏற்படும் சோர்வையும் நீக்கி புத்துணர்ச்சி அளிக்கும்.



# ராஜா வளர்த்த பூனை

**தென்கச்சி சுவாமிநாதன்**

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார்.

அவர் ஒரு பூனை வளர்த்தார்.

மிகவும் செல்லமாக அந்தப் பூனையை வளர்த்து வந்தார்.

அவர் என்ன செய்வார் தெரியுமா?

இரவு நேரத்தில் அந்தப் பூனையின் தலையில் ஒரு விளக்கை வைத்து விடுவார்.

அந்தப் பூனை மிகவும் ஜாக்கிரதையாக விளக்கு தன் தலையிலிருந்து கீழே விழுந்து விடாமல் பார்த்துக் கொள்ளும். அது தன் தலையை ஆட்டாமல் ரொம்ப நிதானமாக ராஜாவின் பின்னால் நடந்து போகும்.

ராஜா அந்த விளக்கு வெளிச்சத்தில் எல்லா வேலைகளையும் செய்து விடுவார்.

ஆதலால் அவருக்குக் கையில் தனியாக ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு போக வேண்டிய அவசியம் இல்லை.

விளக்கைத் தூக்கிக் கொண்டு போகும் வேலையை அந்தப் பூனை பார்த்துக் கொண்டது.

அதனால் ராஜா அந்தப் பூனையின் மீது மிகவும் அன்பு செலுத்தினார்.

ராஜா தன் அமைச்சர்களைப் பார்த்து, "பார்த்தீர்களா? இந்தப் பூனை எவ்வளவு விசுவாசமாக நடந்து கொள்கிறது.! .. என் மீது இந்தப் பூனைக்குத் தான் எவ்வளவு மரியாதை பார்த்தீர்களா?" என்று சொல்வது வழக்கம்.

ஒரு சமயம் இதைக் கேட்ட அங்கிருந்த அமைச்சர்களில் ஒருவர், "மன்னா ! நீங்கள் சொல்வது சரிதான். இருந்தாலும் அந்தப் பூனையின் விசுவாசத்தை நான் கொஞ்சம் சோதித்துப் பார்க்க விரும்புகிறேன் !" என்றார்.

"சரி... உங்கள் ஆசையை நான் ஏன் கெடுக்க வேண்டும்? நன்றாக சோதித்துப் பாருங்களேன் !" என்று ராஜா கூறிவிட்டார்.

உடனே அந்த அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா?

அவர் எங்கேயோ புறப்பட்டுப் போனார்; ஒரு ஐந்தாறு எலிகளைப் பிடித்துக் கொண்டு வந்தார்.

அப்போது அரண்மனையில் ராஜா ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் அந்தப் பூனை ரொம்பவும் பணிவாக நின்று கொண்டிருந்தது. அதன் தலையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.



அமைச்சர் தான் பிடித்துக் கொண்டு வந்த எலிகளை அந்தப் பூனையின் பார்வையில் படும் வகையில் எதிரில் விட்டார்.

அந்த எலிகளெல்லாம் அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்தன.

அதை அந்தப் பூனை பார்த்தது! அவ்வளவுதான் ! அது தன் தலையில் இருக்கும் விளக்கைப் பற்றியும் கவலைப்படவில்லை... ராஜாவைப் பற்றியும் கவலைப்படவில்லை....

பூனை ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து எலிகளைத் துரத்த ஆரம்பித்தது... அதன் தலையில் இருந்த விளக்கு எங்கேயோ போய் விழுந்து அணைந்து போயிற்று.

இருட்டில் ராஜா தடுமாற ஆரம்பித்தார்.

இந்தச் சமயத்தில் அமைச்சர் மறுபடியும் விளக்கை ஏற்றினார். வெளிச்சம் வந்தது.

அதன் பிறகு அந்த அமைச்சர் பேசினார்.

"அரசே! இப்போது பூனையின் விசுவாசத்தைப் பார்த்தீர்களா? எலி அதன் கண்ணில் படாத வரையில்தான் அது விசுவாசமாக இருந்தது போல் தெரிந்தது! எலியைப் பார்த்ததும் அது எல்லாவற்றையும் விட்டு விட்டு எலியைத் துரத்த ஆரம்பித்து விட்டது !" என்று கூறினார்.

தான் அந்தப் பூனையைப் பற்றி நினைத்தது தவறு என்று ராஜா அதன் பிறகு புரிந்து கொண்டார்.

நமது மனமும் இந்தப் பூனை போன்றதுதான் !

மனதை எவ்வளவுதான் பயிற்சி கொடுத்து பக்குவமாக வைத்திருந்தாலும், பார்ப்பதற்கு பரம சாது மாதிரிதான் இருக்கும். பார்க்க வேண்டியதைப் பார்த்து விட்டால் உடனே இந்தப் பூனை மாதிரி பாய்ந்து விடும் !

புலனின்பப் பொருள்கள் கிடைக்காத வரையில் மனம் அடங்கியிருப்பது போன்று தெரியும். கொஞ்சம் வாய்ப்புக் கிடைத்தாலும் அது குதித்துக் கூத்தாடும் !

"புலன்களின் ஆற்றல் அதிகம். அதனால் மனக் கட்டுப்பாடு பயிற்சிகளில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று ரிஷிகேஷ் சுவாமி சிவானந்தர் கூறியிருக்கிறார். ●

## சிதம்பரம், காசி, இராமேஸ்வரம் ஆகிய மூன்று திருப்பதிகங்களின் மூர்த்திகள் ஒன்றாகி விளங்கும்

# ஆவரங்கால் சிவன்கோயில்

### தோற்றம்

எங்கள் ஈழநாடு பறங்கியர் கைபடுமுன்னமே, ஆவரங்கால்வேள் இராமநாத உடையாரால் காசியிலிருந்து கொண்டு வரப்பெற்று ஆலயம் அமைத்துத் தாபிக்கப் பெற்றவர் நடராஜலிங்க சுவாமி. அவரை அர்ச்சிப்பதற்குக் காசியிலிருந்தே அழைத்து வரப் பெற்ற அந்தணர் குடிகங்காபட்டர் குடி. பறங்கியராலே பாழ்படுத்தப்படாமல் அன்று முதல் இன்று வரை நிலவும் கோயில் இது. டச்சுக்காரர் தோம்பு எழுதிய காலத்திலேயே நடராஜ ராமலிங்க சுவாமி பேரில் ''பல்வினையான் கொய்வளை நெற்பரப்பு நூறு'' என்று சொல்லும் தோம்புக் காணியிலேயே ஆலயமும் அந்தணர் இருக்கையும் பிறவும் கூறப்பட்டிருக்கின்றன.

### காசியும் இராமேஸ்வரமும்

தென்னாட்டவர் வடதிசைக் கங்கையாடிக் காசி விசுவநாதரைக் கைதொழ யாத்திரை செல்வர். வட நாட்டவர் தென்திசைச் சேது தீர்த்தமாடி இராமேசுவரப் பெருமானைக் கைதொழ யாத்திரை வருவர். காசியிலே போய் இறப்பவர்களை எம்பிரான் தம்மடியிலே சாயவைத்துச் செவியிலே பஞ்சாட்சர மந்திரம் ஓதிச் சிவசாரூப்பிய பதஞ் சேர்ப்பிப்பர் என்னும் புராணம்.

இராமபிரான், இராவணனைக் கொன்றதாலே தம்மைத் தொடர்ந்த பிரம ஹத்திப் பழி தீர்க்க வேண்டித் திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், திருக்கேத்தீஸ்வரம் மூன்றிலும் சிவபூசை செய்தும் தீர்ந்திலது. பின் சேதுவைச் சேர்ந்த இராமேஸ்வரத்தில் அநுமான் கொண்டு வந்த காசிலிங்கத்தைத் தாபித்துப் பூசித்த பின்பே அப்பாதகம் தீர்ந்தது.

இக்காரணங்களாலேயே வடவர் தென்திசைச் சேதுவுக்கும், தென்னவர் வடதிசை காசிக்கும் யாத்திரை செய்து தீர்த்தமாடிச் சுவாமி தரிசனம் செய்து தென்புலத்தார் கடனையும் தீர்த்து வருகின்றனர்

### ஆவரங்கால் தெருவிலே காசி

இருபது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து சிவபதம் பெற்ற ஆச்சிமுத்து அம்மா என்ற சந்நியாசியம்மா துறவு பூண்டு காசியிலே போய்த் தரிசனஞ் செய்து கொண்டிருந்தபோது காசி நாதப் பெருமான் அவர் கனவிலே தோன்றி ''ஆவரங்காலிலே தெருவிற் காசியிருக்கிறது. அங்கே நாம் வீற்றிருக்கிறோம். அங்கே போய் எனக்கு தொண்டு புரிந்து வருக'' என்று கட்டளையிட்டாராம். அதனால் அம்மையார் இங்கு வந்து கோயிலுக்கணித்ததாகத் திருநந்தன வனமும் திருமடமும் திருக்கிணறும் அமைத்து நீண்டகாலம் தொண்டாற்றியிருந்தமையும் நாம் கண்கூடாகக் கண்ட காரியமாகும்.

### கொய்வளைத் தல மகிமை

இங்ஙனமிருத்தலால், காசி விசாலாட்சியம்மை சமேத விசுவநாதப் பெருமானும், பார்வதவர்த்தனியம்மை சமேத இராமலிங்கேஸ்வரப் பெருமானும் ஒருங் கிணைந்திருப்பது போன்ற சிறப்புடைய தலம் ஆவரங்காவிலுள்ள கொய்வளைத் தலம். இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமான் பர்வத வர்த்தனியம்மை சமேத நடராச ராமலிங்கப் பெருமான். இந்த நாம சம்பந்தத்தாலே தரிசிக்க முத்தி தரும் தலமாகிய சிதம்பரத்து நடராசப் பெருமானும் இம் மூர்த்திகளுடன் சேர்ந்து கொண்டார். ஆகவே தெற்கே இராமேஸ்வரம், மத்தியில் சிதம்பரம், வடக்கே காசி ஆகிய மூன்று சிறந்த தலங்களிலுள்ள மூர்த்திகள் மூவரும் சங்கமமாகிய ஒரு மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி விஷேடமும் தல விஷேடமும் பொருந்திய திருத்தலம் இது. மேலும் சூழலெங்கும் உவர் நீராயிருக்கவும், கோயிலை அடுத்தமைந்தத் தீர்த்தக் குளங்கள் கிணறுகள் அனைத்திலும் பெறும் நீர் அமிர்தம் போல அதிமதுரச் சுவை நீராக இருப்பதாலே இங்கு தீர்த்த விசேடமும் உண்டு. இங்ஙனம் அமைந்ததாலே திருவேணி சங்கமம் எனப்படும் புண்ணிய தீர்த்தத்துக்கிணையான மகத்துவம் இத்தலத்து மூர்த்திக்குண்டு.

### திருப்பணித் தொடக்கம்

இக்கோயிற் கட்டடங்கள் பலவும் பழையனவாய்ப் பழுதடைந்திருத்தல் கண்டு தர்மகர்த்தா சபையினரும் திருவிழா முதலிய உபயங்கள் செய்பவர்களும், ஊரவர்களும் சேர்ந்து ஆலோசித்து 1957ஆம் ஆண்டு ஆனி மாதம் பாலஸ்தானஞ் செய்து புனருத்தாரண

திருப்பணி வேலைகள் செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ஆயினும் இறைவனின் திருவருளின்படி திருப்பணி வேலைகள் காலதாமதமாகி 1978ஆம் ஆண்டு தை மாதத்திலேதான் ஆரம்பமாகி நடந்து வருகின்றன. இத்திருப்பணி வேலைகளை நிறைவாக்கும் பொருட்டு புனருத்தாரண திருப்பணிச் சபை என ஒன்றை அதைத்துள்ளனர். அச்சபையினரே திருப்பணி வேலைகளைத் திறம்பட நடத்தி வருகின்றனர்.

## செய்து முடித்த திருப்பணிகள்

திருப்பணி தொடங்கி நடந்து வருகின்ற இக்காலப் பகுதியில்,

1. விநாயகர் கோயில், 2. சிவன்கோயில், 3. அம்மன் கோயில், 4. நடேசர் கோயில், 5. கந்தசுவாமி கோயில் 6. மணிக்கூட்டுக் கோபுரம், 7.சண்டேசுரர் கோயில், 8. வசந்த மண்டபம், 9.மடைப்பள்ளி, 10. களஞ்சியங்கள், 11. சுற்று மதில் (முக்காற்பங்குயரம்) இவை முன்புள்ளவாறே புனருத்தாரணம் செய்யப் பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்குகின்றன.

12. தட்சணாமூர்த்தி கோயில், 13. வைரவர் கோயில், 14. சபை, 15. நவக்கிரகக் கோயில் என்பனவும் புதியனவாக அமைக்கப் பெற்றுவிட்டன.

அடுத்து உள்வீதிச்சுற்று மண்டபங்கள் அமைப்பதற்குத் தூண்கள் நிறுத்தப் பெறுகின்றன. புதிதாக ஒரு மணி வார்க்கும் வேலையும் ஆரம்பமாகியுள்ளது.

## திருவருள் கிட்டுக

ஸ்தம்ப மண்டபம் பூரணமாக்கிப் பண்டிகைக்கு முன் வர்ணந் தீட்டுதல் நிறைவேறியுள்ளது. இத்திருப்பணிக்குப் பண உதவி பொருளுதவி சரீர உதவிகளை மனமுவந்து புத்தூர், அச்சுவேலி ஆகிய இரு கோவிற் பற்றிலும் உள்ள எல்லா ஊரவர்களும் செய்து வருகிறார்கள். வேறு கிராமத்தவர் சிலரும் வேற்று மதத்தவர்களும் கூட உதவியிருக்கிறார்கள். இவருள் ஒரு சிலர் ஒவ்வொரு பகுதி வேலையை முற்றாகத் தாமே செய்திருக்கிறார்கள். இப்பகுதி இளைஞர்களும் மக்களும் இச்சிவப்பணி விரைவாக நிறைவு பெற இரவு பகலாகச் சிரமதானப் பணி புரிந்துள்ளனர். இத்தொடர்களுக்கு வீடுகள் தோறும் முறைக் கிரமப்படி அன்னதானப் பணி புரிந்துள்ளனர். எல்லோருக்கும் இறையருள் கிட்டுவதாக.

பண்டிதர்
ச. சுப்பிரமணியம்
திருப்பணிச்சபை வெளியீடு

ஒருவனுக்கு மூன்று வரங்கள் கொடுத்தார் கடவுள். மூன்று முறை அவன் எதை விரும்பினாலும் அது உடனே நடக்கும் என்பதுதான் அவன் பெற்ற வரம். ஒருநாள் அவனுக்கும், மனைவிக்கும் கடுமையான கருத்து வேற்றுமை உருவானது. அவள் இருப்பதைவிட இறப்பதே மேலானது என்ற தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான். உடனே அவன் மனைவி பிணமானாள். ஊர் கூடி அவள் நற்பண்புகளைச் சொல்லி சொல்லி நெகிழ்ந்தது.

ஆத்திரத்தில் அறிவிழந்ததாக வருந்தியவன் மனைவி உயிர் பிழைத்தால் போதும் என்றான். மறுகணம் மனைவி கண்விழித்தாள். இனி, ஒருமுறைதான் வரம் கேட்கமுடியும். எதைக் கேட்பது என்று புரியவில்லை. ஆண்டவா! எந்த வரத்தை கேட்டால் என் வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் கிடைக்குமோ அதை கேட்க விரும்புகிறேன். எதைக் கேட்பது? என்றான். ஆண்டவன் சொன்னான். இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழும் மனம் வேண்டும் என்று கேள்!



# ராமசாமி காவியம்

இந்த ராமசாமி மனிதனாகக் கருதப்பட்டதற்குச் சரித்திரமில்லை. தேயிலைச் செடிக்குள் 'எல்லாமிருக்கும்' என்று நம்பிக் கடல் கடந்த சீவராசிகளின் சந்ததியில் வந்தவன் மனிதனாக முடியுமா? காட்டையழித்துப் பச்சைக் கம்பளம் போர்த்து, அதைப் பேணி உணவுப் பிச்சையளித்தவன் மனிதனாக முடியுமா? இதெல்லாம் ராமசாமிக்குச் சம்பந்தமில்லாத விஷயங்கள். இன்று இந்த மாங்குளத்துச் சந்தியில் வெய்யில் நெருப்பில், அதை வெல்கின்ற வயிற்று வெக்கையுடன் 'மீனாச்சி' 'செவனு' 'மூக்கையா'வுடன் அலைந்து அவன் திரிவது ஒரு வெறும் பௌதிக நிலை. இதனால் இக்கணத்தில் இவன் மனிதனேயில்லை.

'கறுப்பையா இந்தப் பக்கம் வேலை கிடைக்கு மென்று சொன்னானே?'

மீனாச்சி கம்பமொன்றின் அடியில் குந்தி "இப்படியே கொஞ்சம் நில்லுங்க. இந்தப் பக்கிட்டுப்போய் விசாரிச்சுக்கிட்டு வாறேன்" என்று சொல்லிவிட்டு ராமசாமி போன திசையையே தனது சக்தியெல்லாந் திரட்டி, ஒரு சிறு கணப்பொழுது பார்த்து விட்டுக் கண்களை மூடுகிற சந்தர்ப்பத்தில், இவ்வளவு நேரமும் கடைகளையும் பஸ்சிற்காக நிற்கிற மனிதர்களையும், அவர்களில் சிலர் எறிகிறவற்றையும் பார்த்து வயிற்றின் வெறுமையும், வெக்கையும் மனத்திற்கு இட்ட புரியாத கட்டளைகளை மனம் திருப்பி உடலுக்கு அனுப்ப, உடலின் சக்தி வெறுமையில் இருந்து, கட்டளைகள் கரைந்து போய், தாயுக்கு அருகே செவனும், மூக்கையாவும் சரிந்த கணத்தில் நேரம் என்பது அதன் அர்த்தத்தில் ஒரு கூறை இழந்து போயிற்று. ராமசாமி திரும்பியபோது அவனோடு கூட இன்னொருத்தன் வந்து கொண்டிருந்தான்.

"பதினஞ்சு மைல்ன்னா சொன்னீங்க?"

"பஸ்சு, வானு எல்லாம் ஓடுதுங்க."

"சல்லி கொஞ்சமும் சரி இல்லீங்களே." ராமசாமியின் வெறுமை பொத்துச் சிதறி வந்தவனின் வெறுமைக்குள் புகுந்தது.

வந்தவன் யோசித்தான். அவன் சட்டைப் பைக்குள்ளிருந்து எடுக்கப்பட்ட குபேரனின் ஒரற்பத்தாளடிமை, தானொரு வல்லமை படைத்த பிரம்மமாக மாறியது தெரியாமல் ராமசாமியின் தேய்ந்த கரத்துள் அடங்கியது.

"இதை வச்சிக்கிட்டு என்னவாவது புள்ளைங் களுக்கு வாங்கிக் குடுங்க. மெசினு எதினாச்சும் வந்திச்சின்னா ஏத்திக்கிட்டுப் போவாங்க. ஒட்டுசுட்டானில் போயி முத்தையங்கட்டு எங்கயினா காட்டுவாங்க. அங்கின யாரையாச்சும் விசாரிச்சுக் கிட்டுப் போனாக் காட்டுவாங்க. காட்டுக்குள்ளாற கொஞ்சம் போவனும் தாரு போடாத பாதையிலே . . ." வந்தவனின் சொற்கள் திடீர் பிரம்மத்தின் சக்தியால் ராமசாமியின் காதுகளில் அதற்கு மேல் ஏறவில்லை. சுருண்டு கிடந்த மீனாச்சி, செவனு, மூக்கையாவிற் கருகில் சென்றடைந்து அவர்களை ராமசாமி எழுப்பினான்.

"இவுங்க நம்ம கருப்பையாவோட மச்சான் தோட்டத்துக்குப் போறதுக்கு நேரா இங்கனதான் ஏறணுமாம். கடவுள் புண்ணியமா ஏங்கண்ணில பட்டாரு . . . " ராமசாமியின் குரலிலிருந்து உற்சாகம் அவளைப் பற்றவில்லை. தூங்கிச் செருகிய கண்களில் சக்தியைப் பாய்ச்ச அவளால் முடியவில்லை.

"அட எதினாச்சும் மொதல்லே வாங்கிக் குடுங்கங்கிறேன் . . . " என்றான் வந்தவன். ராமசாமி ஒரு முடிச்சிலிருந்த தகரக்குவளையொன்றைக் கொண்டு தேநீர்க் கடையை நோக்கியோடினான். இரண்டு ரூபாய்க்கு என்ன வாங்கிவிட முடியும்? என்னத்தையோ வாங்கி, நீரைக் குவளையில் நிரப்பிக் கொண்டு திரும்பிவந்தபோது மீனாச்சி வந்தவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிள்ளைகளை எழுப்பிக் கொண்டுவந்ததை எல்லாருமாகப் பங்கிட்டு, யாகம் செய்யத் தொடங்குகையில், வந்தவனுக்கு அவி பாகம் கொடுக்க முயன்றபோது ராமசாமி தேவனாகிப் போனான். வயிற்றுனுள் சென்ற சொற்பம் பசிப்பூதத்தைச் சாடி எழுப்பியது.

"ஒரு கௌமியில நான் வந்திடுவேன். தோட்டத்தில இன்னும் பேரு இருக்குங்க. வேலை குடுத்தாங்கன்னா அங்கே இருக்கலாந்தான். புள்ளையொண்ணும் இருக்குதுங்களே" வந்தவன் காலத்தின் கூறுகளைப் பிரிக்க இயலாதவனாய்த் தோன்றியதெல்லாவற்றையும் கொட்டினான். செவனும், மூக்கையாவும் வந்தவனைப் பார்த்துக் கொண்டே சாப்பிட்டு முடித்து, மூட்டை முடிச்சுகளை இறுக்கியபோதும் வந்தவன் பேசிக் கொண்டேயிருந்தான்.

" . . . அங்ஙனே போயி நின்னீங்கனா மெசினு எதினாச்சும் வரும் ஏத்திக்கிட்டுப் போவாங்க" அவன் ஒரு இடத்தைக் காட்டினான். மௌன மேகம் ஒன்று கவிந்தது.

"அப்போ நாங்க வர்றமுங்க . . . " ராமசாமி பேச்சில் நன்றி கனிந்தது. மீனாச்சி, செவனு, மூக்கையா மூவரும் அவனைப் பார்த்து கொண்டு நிற்கையில், ராமசாமி மூட்டைகளைத் தன் தலையில் ஏற்றினான்.

சிறீதரன்

" – வர்றமுங்க" ஒரு கணத்தின் பின் மீனாச்சியும் சொல்லித் தன் மூட்டைகளை ஏற்றினாள். முல்லைத்தீவு றோட்டில் யாத்திரை திரும்பவும் தொடர்ந்தது.

மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு போகிற பாதை ஒரு வெறும் தார்ப் பாதை மட்டும் அல்ல. சரியான சந்தர்ப்பத்தில், நேரத்தில் – அது எப்பவுமாக இருக்கலாம். வந்தால் அது ஒரு காவியம்; சுய சரிதை.

'நான் இப்படிப் போய், அப்படிப் போய்' என்று ரசனைகளைக் காட்டும் ஓர் அழகான பாதை. இந்த ராமசாமி வந்த சந்தர்ப்பம் சரியில்லை என்று சொல்லிவிட முடியுமா? செவனு, மூக்கையா இவர்களுடைய கண்களின் தார்ப் பாதை யிலிருந்தான உயரங்கள் குறைவானபடியாலே அவர்களுக்கு அதன் வியாபகம் உலகளவு. நடக்க, நடக்க முடிவில்லாத ஒரு பைசாச நீளப் பரிமாணம். மேலும் ராமசாமிக்கு உலகம் என்பது காண்பது அல்ல. உருவங்களுக்குப் பின்னால், உள்ளே ஆழத்தில் மறைந்திருப்பது பைசாசம். தன்னை வாட்டி, மீனாச்சியை வாட்டி செவனு, மூக்கையா எல்லாரையும் வாட்டி எடுக்கும் பைசாசம். எனவே தலையின் மேலிருந்த மூட்டை முடிச்சுக்களோ அன்றி நீளும் தார்ப் பாதையோ –இல்லை மீனாச்சி, செவனு, மூக்கையாவோ ஒரு மனப்பாரமல்ல. 'மெசினு' ஒன்றையுங் காணோம். ஓலு மடுவைத் தாண்டி, கறுப்பட்ட முறிப்பு வரச் சூரியன் தன் அன்றைய கடமை முடித்ததையிட்டு மகிழ்பவன் போல் செம்முகங்காட்டிப் பதுங்கத் தொடங்கினான்.

சிறு கட்டிடமொன்று பாதையருகே ராமசாமி கோஷ்டியை வரவேற்றது. சாமான்களை இறக்கிவிட்டு ஆயாசத்துடன் பார்த்தவன், கண்களில் தென்பட்ட ஒருவனை நோக்கி நடந்தான். "இந்த முத்தயங்கட்டு எங்கயிங்க இருக்கு?" ராமசாமியின் நம்பிக்கை ஆயாசம் எல்லாம் அந்தக் கேள்விக்கூடாக வெளியே வந்தன. மனிதன் அவனளவிலேயே தனி. சுருட்டும் வாயிலிருந்தால் உலகமென்பது மாயை. அதாவது 'இல்லை.' ராமசாமி திரும்பவும் கேட்டான்.

"முத்தயங்கட்டு எங்கயிங்க இருக்கு?"

"உதால இன்னும் போகவேணும்" வாயிலிருந்த சுருட்டை ஒரு கையால் எடுத்து கேட்கப்பட்டவன் ராமசாமியுடன் வந்த பரிவாரங்களை ஒரு தரம் பார்த்துவிட்டு மோவாயைச் சொறிந்து கொண்டான்.

"எவ்வளவோ தூரங்க?"

சுருட்டு யதாஸ்தானத்திற்குத் திரும்பவும் போய்விட்டது. ஒரு 'தம்'மிற்குப் பின்னர் எச்சிலை சாவகாசமாகத் துப்பிக் கொண்டான்.

"அது பத்துப் பன்ரண்டு கட்டை வரும்"

ராமசாமி காதுகளில் அது ஏறியிருந் திருக்கலாம். அவனது நம்பிக்கையின் பூரணிகள் நாசகாரப் புள்ளிகள். அவன் நல்லதையுஞ் சந்தோஷமானதையுங் கேட்டு ஒரு யுகம் – யுகாந்தரமே – இருக்கும்.

"அங்ஙனே வேல எதினாச்சும் கெடைக்குங்களா?"

"ம் ம்"

ராமசாமி உயிர்த்துக் கொண்டான்.

"எங்கயிருந்து வாறாய்?"

"கம்பளையில் இருந்துங்க"

" . . . ம்ம்" அவன் போகத் தொடங்கினான். ராமசாமி இன்னும் பலகேள்விகள் கேட்க இருந்தான். "அட இவுரு போறாரே" என்று திரும்பவும் அந்தக் கட்டிடத்திற்குள்ளே போனான்.

"காலம்பற வாக்கிலே எந்திரிச்சுப் போவோம். இப்பிடிக் கெடவுங்க" என்று சொல்லி வாய் மூடுவதற்குள் ட்ராக்டர் ஒன்று ஆர்ப்பரித்துக் கொண்டு வந்து அருகில் நிற்க முயல்வதைக் கண்டான். "கேட்டுப் பார்ப்போம்" என்று விட்டுப் போனவன்,

"எல்லாத்தையும் கொண்டுக்கிட்டு வாங்க" என்று குளறியபடி ஓடிவந்தான்.

"முத்தயங்கட்டுக்குத்தான் போவுதாம்."

திரும்பவும் யாத்திரை தொடங்கிற்று. செவனுக்கும் மூக்கையாவுக்கும் இது புது அனுபவம். ட்ராக்டர் துள்ளத் துள்ளப் புளகாங்கிதம். ஒட்டுச்சுட்டான் சந்திவர ட்ராக்டர் நின்று சில பேர் இறங்க, ட்ராக்டர் ஓட்டி வந்தவன்– ஒரு இருபத்தைந்து வயதிருக்கலாம்– "எங்க இறங்கிறியள்?" என்று ராமசாமியை கேட்டான்.

"முத்தயங்கட்டுக்குப் போவணுங்க"

"முத்தயங்கட்டில எங்கை?" அவசரப்பட்டான் ட்ராக்டர்காரன். இன்னும் சில பேர் ஏறிக்கொண்டார்கள்.

"பஸ்சு நிப்பாட்டற இடத்துக்குங்க" கறுப்பையாவின் மச்சான் அங்கேதானே கறுப்பையா இருப்பதாகச் சொன்னான்? ட்ராக்டர்காரன் இதைக் கேட்டு முடிப்பதற்குள்ளே கடைக்கு சிகரெட் வாங்கப்போய் விட்டான். சிகரெட்டும் கையுமாக லாவகமாக ஏறி உட்கார்ந்தான். ட்ராக்டர் திரும்பவும் இயங்கத் தொடங்கியது.

"ஆ இறங்குங்கோ" இறங்கினார்கள்.

ஒரு மெல்லிய வளர்பிறையினொளியில் வாய்க்காலொன்று தெரிந்தது. எப்படிப் போவது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது "பத்து ரூபா தர்றம் அப்படீன்னுட்டு அஞ்சு ரூவாதான் குடுத்தாங்க" இருவர் பேசிக்கொண்டு வருவது கேட்டது. தோட்டத்துக்கே திரும்பவும் போய்விட்ட ஒரு மாய உணர்வு வந்தது.

ராமசாமி மறித்துக் கேட்டான். இங்கிட்டு கறுப்பையான்னு ஒராளு இருக்குதுங்களா? வந்தவர்கள் இந்தப் புதுத் தாக்கங்களுக்குத் தங்களின் சூழ் நிலையிலிருந்து வரக்கொஞ்ச நேரமெடுத்தது.

"எங்கிட்டு இருந்து வர்றீங்க" வந்தவர்களில் ஒருவன் கவனத்துடன் ராமசாமியின் சக பிரயாணிகளையும் நோட்டம் விட்டான்.

"கம்பளைங்க"

"அப்பிடியா, என்னா தோட்டம்?" தலையிலிருந்த சாமானை இறக்கிவிட்டான்.

ராமசாமி சொன்னான். வந்த இருவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

"இங்ஙன அப்பிடி ஒரு ஆளு இருக்குதான். போயில்ல வெசாரிக்கணும். அண்ணே இப்பிடியே நிக்கிறியா? இவங்களைக் கூட்டிக்கிட்டுப்போய் வுட்டிட்டு வந்திடறேன்.

"அட என்னாப்பா இதில, நானுந்தான் வர்றேனே"

"சரி வாங்க போய்ப் பார்ப்போம்"

ராமசாமி உற்சாகத்துடன் பின் தொடர்ந்தான். கானல் நீர் கடைசியில் நீரைத் தரத்தான் போகிறதோ? ராமசாமி, அவர்களின் பூர்வோத்திரங்களை விசாரித்தான்; தன்னுடையதைச் சொன்னான். ராமசாமியின் குரலில் தெரிந்த உற்சாகம் அவன் மனைவி, பிள்ளைகளையும் உற்சாகப்படுத்தியது.

குடிசை என்று கூடச் சொல்ல முடியாத குடிசை. உள்ளே விளக்கு ஒன்று எரிந்தது இதற்குக் காவலாய் ஒரு நாய் ஒரு கேடா? அதன் குரைப்பில் செவனு, மூக்கையா. மீனாச்சி நடுங்க, "கறுப்பையா அண்ணே!" என்று கூட்டிக்கொண்டு போனவன் குரலெடுத்து விளித்தான்.

"யாரு–?" என்றபடி ஒருத்தன் வந்தான். வேர்வையில் நிலவினொளி மின்னி அவன் அணிந்திருந்த அரைக்கால் சட்டையை எடுத்துக் காட்டியது.

"அது நானுங்க" என்று ராமசாமி முன்னுக்கு வந்தான். மீனாச்சி சிரித்துக் கொண்டாள்.

"அடே நம்ம ராமசாமி, எப்ப அல்லாரு வந்தீங்க?" என்று மீனாச்சி பரிவாரங்களைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"இவங்கதான் இடத்தைக் காட்டினாக" ராமசாமி தலையிலிருந்தவற்றை இறக்க, மற்றவர்களும் இறக்கிக் கொண்டார்கள். இப்போது கறுப்பையா வந்தவர்களை நெருங்கிப் பார்த்தான்.

"இவுங்களைக் கண்டிருக்கந்தான். ஆனா அவ்வளோ பளக்கம் இல்லை. நீங்க மொதலாங் கண்டத்தில இல்ல இருக்கிறீய?" கூட்டி வந்தவர்களைக் கேட்டான்.

"ஆமாம் இருட்டில வந்து உங்க பேரைச் சொல்லி எங்க இருக்கிறீங்கன்னு வெசாரிச்சாரு. நீங்களாத்தான் இருக்குன்னுட்டு நேரவே கூட்டியாந்துட்டோம்."

"நல்லதுங்க"

"நாங்க இன்னும் தொலவு போவ இருக்குதுங்க. வரட்டுங்களா? அப்பொறமா கண்டுக்கிறோம்."

"நல்லதுங்க . . . " கறுப்பையா குரலை உயர்த்திக் கூறிப் பின்னர் அவர்களை நெருங்கினான்.

"அங்ஙனே யாரும் வேலைக்கு ஆள் வேணுமின்னா இப்படியொரு ஆளு இருக்குதுன்னு சொல்லி, ஏங்கிட்டயும் வந்து சொன்னியனா இவுங்களைக் கொண்டு போய் சேத்துடலாங்க. சொல்றியளா?"

"அதுக்கென்னாங்க அன்னிக்கும் அங்ஙனே ஆளுங்க வெசாரிச்சாக. நல்லாக்கேட்டுக்கிட்டு வந்து சொல்றமுங்க" கூட்டிக்கொண்டு வந்தவர்களில் இளையவன் சொன்னான். போவதற்காகத் திரும்பினார்கள்.

"ஒங்க பேரைச் சொல்லலீங்களே"

மூத்தவன் வெற்றிலை எச்சிலைத் துப்பி நிதானித்து, "எம்பேரு நடராஜா. இவன் மாணிக்கமுங்க" என்றான்.


"நல்லதுங்க" ராமசாமியின் குரல் கறுப்பையா வினுடையதை விட ஓங்கியது.

"வர்றோங்க"

"நல்லதுங்க" இவர்கள் தலையில் சாமான்களைத் தூக்கி வைத்து நடந்து போவதைப் பார்த்துக் கொண்டே சில நேரம் நின்ற பின்னர்,

"உள்ள வாங்க" என்றபடி கறுப்பையா உள்ளே நுழைந்தான். இந்த 'உள்ள' என்பது, இந்த

## மாதமொரு சமையல் – சேமியாப் பிரிஞ்சி



**தேவையான பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| சேமியா | : 250 கிராம் | பட்டை | : 2 |
| வெங்காயம் | : 100 கிராம் | இலவங்கம் | : 2 |
| தக்காளி | : 2 | ஏலக்காய் | : 2 |
| இஞ்சி | : 1 துண்டு | மஞ்சள் பொடி | : சிட்டிகை |
| பூண்டு | : 5 பல்லு | கேசரிப்பவுடர் | : சிட்டிகை |
| புதினா, பச்சை மிளகாய் | : 4 | மிளகாய் தூள் | : தேவைக்கேற்ப |
| கொத்தமல்லி | : 1 கைப்பிடி | முந்திரிப் பருப்பு | : தேவைக்கேற்ப |
| உப்பு | : ருசிக்கேற்ப | எண்ணெய் (அ) நெய் | : தேவைக்கேற்ப |

நூற்றாண்டிற்கும், வேறு மனிதர்களுக்கு – பாக்கியவான்களுக்கு – மைந்த 'உள்ள'விற்கும் ஒவ்வாதவொன்று. உள்ளே ஒரு மூலையில் ஒரு தகரப் பெட்டி, வேறொரு மூலையில் சில கரிப்பானைகள். ஒன்றில் அன்று பின்னேரம் குளத்தில் பிடிக்கப்பட்ட மீன்களிரண்டு. வேறொரு பானை அடுப்பில் சிறிது சோற்றுடன் இறக்கப்படுகின்ற கட்டத்தை நெருங்கியபடி. ஒரு சாக்கொன்றை எடுத்துப்போட்டு உட்காரச் சொன்னான். எல்லாருங் குந்தினார்கள்.

"அப்பொறம் . . . எப்ப வந்திய?"

"அதையேன் கேக்கறீங்கண்ணே? கோச்சில ஒரு மாதிரி வவுனியா வரிக்கும் வந்தமா, அந்தப்பக்கிட்டு நல்லவேலை ஒண்ணும் கெடைக்கல, அப்பிடியே ஒரு மாதிரி நடந்தே வந்திட்டோம்"

"அட நடந்தா வந்தீங்க? புள்ளைங்க . . . ?"

"புள்ளைங்க சோந்து போயிருச்சிங்க . . . " மீனாச்சி பிள்ளைகளை பாத்துக் கொண்டாள். அவர்கள் அவள் மடியில் படுத்துக் கொண்டார்கள்.

"ஏய்ன் சம்சாரம் எதினாச்சும் சொல்லிச்சா?" கறுப்பையா தன்னையே இக்கேள்விக்குள் புகுத்திக் கேட்டான். கண நேரம் மனம் எரிந்தது.

"ஒரு பயணம் வந்திட்டுப் போகச் சொல்லிச்சுங்க" மீனாச்சிதான் சொன்னாள்.

கறுப்பையா ஒரு மௌனப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டான். தோட்டத்திற உடனேயே போய் விட வேண்டும் என்ற ஓர் உணர்வு அவனை ஆக்கிரமித்துக் கொண்டது.

"பேரு எங்கயிங்க ஒளுங்கா போடறாங்க? தெனப்பாட்டை ஒட்டறதே பெரிசாப் போயிருச்சிங்க " ராமசாமி தொடர்ந்தான். செவனு காலை விறைத்தபடி தாயின் மடியில் திரும்பவும் படுத்துக் கொண்டதைக் கறுப்பையா பார்த்துத் தன்னை சுதாரித்துக் கொண்டு எழுந்து அடுப்பினருகில் சென்று சோறை ஒரு தரம் கிளறி, அகப்பையால் பதம் பார்த்துக் கொண்டு "வெந்திரிச்சு" என்று இறக்கி விட்டான். நெளிந்த அலுமினியத் தட்டொன்றை தீராந்தியிலிருந்து எடுத்துக் கீழே வைத்தான். "புள்ளைங்களுக்கு மொதல்ல இந்தக் கஞ்சியக் குடுங்க" என்றவன் இவர்களுக்கு என்னத்தைக் கொடுக்கலாம் என்ற யோசனை யிலாழ்ந்தான். ஒரு கணந்தான். "தங்கச்சி, இதா அந்த மூலயில கொஞ்சம் தேங்காண்ண கெடக்குது. இந்த மீனை வெட்டிப் பொரிச்சிக்க, இதா வந்திடறன்" என்று தீராந்தியின் இன்னொரு மூலையிலிருந்த ஒரு துண்டிலை எடுத்து, "நானும் வர்றதா?" என்ற ராமசாமியைப் புறக்கணித்தபடி நடந்தான். நிலவு மிகச் சரிந்து விட்டது.

"கொளக்கட்டுக்கு போவமா? இல்லை வாய்க்கால்ல பாப்பமா?" என்று தனக்குத் தானே கேட்டவன் "அட புளு இல்லியே" என்று திரும்ப குடிசைக்கு நடந்தான்.

"அண்ணே இதிலியே எல்லாம் பாத்துக்குவம் இப்பிடியே குந்துங்க சொல்றேன்" ராமசாமி கையைப் பிடித்து இழுந்தான்.

"யெனக்கே பத்தாதுப்பா இது. கொஞ்சம் பேசாம இரு இதா வந்திடறேன்" என்று கத்தியொன்றை எடுத்துக் கொண்டு நடந்தான். கூடப்புறப்பட்ட நாயை அதட்டி நிற்பாட்டினான். நிலவுக்குத் தெரியுமா கறுப்பையா அவசரம்? தன் பாட்டிற்கு 'இதோ சரிகிறேன்' என்று போக முயற்சித்துக் கொண்டிருந்தது என்றாலும் கறுப்பையா தன் கண்களின் சக்தியை இருட்டின் வலுவுடன் போராடுவதற்காய் இடுக்கிக் கொண்டான். சொற்ப நேரத்தில் அதுவும் தேவையில்லாது போயிற்று.

"ஐயாமாரக் கேப்பமா? இவ்வளோ நாள் எதினாச்சும் கேட்டிருக்கனா? குடுப்பாங்க" என்று சொல்லிக் கொண்டான்.

கால்கள் தாமாகவே ஐயாவிடம் கொண்டு போய்விட்டன. நாய் முதலில் குரைத்து மோப்பமிட்டு இறுதியில் வாலாட்ட ஐயா இல்லை, அம்மாதான் கையில் லாந்தருடன் வெளியே வந்தாள். "அது நானுங்க" என்று குரல் கொடுத்தான்.

"கறுப்பையாவே?" என்று உறுதிப் படுத்திக்கொண்டு, "என்ன இந்த நேரத்தில என்று குரல்கொடுத்தாள், "நம்ம பக்கிட்டு ஆளுங்க கொஞ்சம் வந்திருக்குங்க . . ."

**செய்முறை :**

- இஞ்சி, பூண்டு, கொத்தமல்லி, புதினா, பச்சைமிளகாய் இவற்றை தனித்தனியாக அரைத்துக் கொள்ளவும்.
- வாணலியில் நெய் சிறிதளவு எடுத்துக் கொண்டு முந்திரியை வறுத்துக் கொள்ளவும்.
- சேமியாவையும் நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.
- எண்ணெய் காய்ந்தவுடன் பட்டை, இலவங்கம், ஏலக்காய் போட்டவுடன் வெங்காயம், தக்காளிப் போட்டு வதக்கவும்.
- பிறகு அரைத்த விழுதுகளை ஒன்றாகச் சேர்த்து வதக்கவும். 2 டம்ளர் தண்ணீர் விடவும்
- அதில் மஞ்சள் தூள், மிளகாய் தூள், கேசரிப் பவுடர், உப்பு போடவும்.
- தண்ணீர் கொதித்தவுடன் சேமியா போடவும். சேமியா வெந்தவுடன் முந்திரி, கொத்தமல்லி போட்டு கிளறி இறக்கவும். சூடாகப் பரிமாறவும்.



## 02.10.2008 காந்தி ஜெயந்தி.

இறைவன் திருநாமத்தை என்றென்றும் எப்போதும் ஜபித்துக் கொண்டே இருக்க வேண்டும். இறக்கும் தருவாயிலும் அதனை மறக்கக்கூடாது என்பது ஆன்றோர்களின் வாக்கு. இதற்கு உதாரண புருஷராக திகழ்ந்தவர் மகாத்மா காந்தியடிகள். எதிலும் நல்லனவற்றை மட்டுமே காணும் அவருடைய அற்புதமான குணத்தை நம் வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொள்வதுதான் நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலி. ஹே ராம்.

இருட்டில் லாந்தருடன் நிற்கின்ற அந்த மனுஷியின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கின்ற உணவுப் பொருள் வகையறாக்களன் பட்டியல் கறுப்பையாவிற்கு முழு முற்றாகத் தெரியாது. அவன் நரைத்த தலைக்கூடாய் விரல்களைக் கோதி என்னத்தைக் கேட்போமென்று மனம் நினைத்து வாய்க்குக் கட்டளையிடுமுன் வாய் தன்னாலேயே அசைகிறது.

ஐயாவுக்கும் அம்மாவுக்கும் கலண்டர் முள்ளுவேலி, மாதத் தொடக்கங்கள், முடிவுகள் இந்த எல்லைக்குள் வருவன், வந்து போவன போய்விட வேண்டும்.

"இங்க பார் கறுப்பையா, இண்டைக்குத் தேதியென்ன தெரியுமே? அரைமாசம் முடியிறத்துக்குள்ள மாதச் சம்பளத்தில முக்காவாசி அரிசி, அது, இதெண்டு வேண்டிப் போடிறாய். எல்லாத்தையும் என்ன செய்யிறனி. அவருமில்லை. யாழ்ப்பாணம் போய்விட்டார். எல்லாம் பேந்து வா பாப்பம்." அம்மா லாந்தருடன் உள்ளே போய்விட்டாள்.

கறுப்பையா கொஞ்ச நேரம் நின்ற இடத்திலேயே நின்று பார்த்துவிட்டுத் திரும்ப நடக்கத் தொடங்கினான். பிறகு கொஞ்ச நேரம் நின்று ஐயாவின் குடிசையை ஒட்டியிருந்த வாழைத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டான். மெல்ல அதை நோக்கிச் சென்று மிகுந்த வாத்ஸல்யத்துடன் வாழை மரங்களைப் பார்த்துத் திரும்பவும், நாய் அவனை நோக்கி ஓடிவரவும் சரியாக இருந்தது. செல்லத்துடன் அது தாவுவதை வரவேற்கின்ற மனநிலையில் அவன் இல்லை.

"அடச்சீ . . . " என்று நடந்தான். பின்னாலேயே வந்தது.

'வள்' என்று இன்னொரு நாய்ச் சத்தம் கேட்கத் திரும்பிக் கொண்டது.

நாய் திரும்பிப் போனது அவனுக்கு தெரியாது. திரும்பவும் 'சம்சாரம்' நினைவு வந்துவிட்டது கறுப்பையாவுக்கு. தேயிலைச் செடிகளின் குளுமையும், குளிரும், மழையும், பனியும் சம்சாரத்தையொத்த பின்னணிகள். "ஏங்க" என்று கூவி ஏங்க வைக்கின்றவள் அவள். குளுமையும், குளிரும் பனியும் மழையும், கரைந்து கரைந்து வெக்கயாக உருமாறுகின்றன. வயிற்றால் தலையில் நெருப்பு எரிகிறது. சிலிர்த்துக்கொண்டான்.

"வந்தாங்களே அவங்ககிட்ட ஏதினாச்சும் கேட்டிருக்கலாம். குடுப்பாங்க. இவுங்க குடுக்கிறாங்க இல்லியே. என்னா ஆளுங்கப்பா அடச்சே" உதடுகள் கொஞ்சம் அசைந்தன. நடை வரவரத் தொய்ந்தது. இரண்டாவது காணி எல்லை.

"கெகக்கெக் கெக்கக்கே . . . " என்று கோழியொன்று பாய்வது சரிகின்ற நிலவில் ஒளிக்கீறொன்றில் புலனாகியது. நேரத்தை – சிந்திக்கின்ற மனித நேரத்தை சய( – )வாக்கிக் கொண்டு கறுப்பையாவின் கைகளும் கால்களும் கோழிக்குப் பின்னால் பாவ ஆரம்பித்தன, துரிதநடையில் இடைக்கிடை 'கண்டம்' 'திஸ்ரம்' 'மிஸ்ரம்' என்ற நடை பேதங்கள். வீச்சில் கோழி கையில் 'கெக்கெக்கே' என்று செற்பமாகத் தன் பிரலாபங்களை உலகுக்கு ஒப்பிக்க முயன்ற கோழிக்கு, பின்னால் அது தேவையில்லாமல் போய்விட்டது. கறுப்பையா ஓட்டமும் நடையுமாக . . .

"கேட்டிருக்குமோ?" உண்மையில் அது கேட்கவில்லை. கேட்டிருந்தால் ராசா (பக்கத்துக் காணிக்காரன்) எழுந்து வந்திருப்பானே? நன்றாக இன்னும் வெட்டப்படாத காட்டின் மூலையில் சென்று தானே அதை திருத்தஞ் செய்தான்.

"கீரி கொண்டு போயிருச்சுன்னு நெனச்சிக்கு வாங்க" என்று சொல்லிக் கொண்டான்.

குடிசைக்குள் செவனும், மூக்கையாவும் சமாதி. ராமசாமியும் மீனாச்சியும் மெல்லிய குரலில் அரைக்கண்களை மூடியபடி சம்பாஷணை. விளக்கு எரிந்து முடிகிற கட்டம் கறுப்பையா நுழைகிறான். "என்னாங் கண்ணே?" ராமசாமி விழித்துக் கொண்டான்.

"இத வாட்டணும்" என்று சுருக்கமாக நெருப்பை வளர்க்கத் தொடங்கினான். ராமசாமிக்குக் கேள்விகள் கேட்க வேண்டும் போலவும் இருந்தது. கேட்கமுடியாமலுமிருந்தது.

"கால்ல வந்து எடறிக்கிச்சி" என்றான் கறுப்பையா ஒரு சமாதானமாக. நெருப்பு வளர்ந்து, சிறிது நேரத்துக்கு முன் உலகத்தைப் பார்த்து, உலாவித் திரிந்த ஒரு கோழியின் உள்ளை அணைத்து, நெடியைப் பரப்பிப்

பசியைக் கிளப்பி விட்டது. ராமசாமிக்குச் சில தீர்மானங்களும் பல சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் எனின், ஒரு மௌனம் மூலம் தன் இந்தச் சூழ்நிலை தீர்மானத்தை நசுக்குவதைக் காட்டிக் கொண்டான்.

"புள்ளைங்களையும் எழுப்புவமா?"

இந்த நெடி காற்றில் அலைந்து போய் ராசாவின் நாசியில் படாமல் இருக்க வேண்டுமென்ற பிரச்னைக்கு கறுப்பையாவின் தீர்வு இதுதான்.

சோத்துப் பானையைக் கண்கள் எட்டிப் பார்க்காமலேயே . . . ?

"அப்பொறம் சொல்லுங்க" என்றான்.

விடிகிறது சில பேருக்கு நஷ்டத்தில்; சில பேருக்கு லாபத்தில் பல பேருக்கு சும்மா விடிகிறது. ராசாவுக்கு முதல் வகை. ராசா வளர்ந்து வருகிற ஒரு ஸ்தாபனம். அதன் அக்கவுண்டன்ட் – அவன் மனைவி. தண்ணியில்லாத பிதேசமானபடியால் எல்லாவற்றிலும் கவனம். ஒரு கோழியைக் காணவில்லையென்பது நேற்று அடைப்புக்குள் விடும்போதே தெரிந்த சம்சாரம். கீரி கொண்டுபோயிருக்குமென்பது ஜீரணிக்க முடியாததென்று. எனவே அக்கவுண்டன்ட் கிட்டடியிலும், ராசா 'உலகம் முழுவதும்' தெடுவதென்று தீர்மானம் செய்து திக்குகள் பிரித்துக்கொண்டு போக . . .

கறுப்பையாவிற்கு மூன்றாவது வகை. ராமசாமிக்கு உலகம் இனித்தான் தோன்ற வேண்டும். லாபநட்டங்கள் அல்லது சும்மா அதாவது இவை இரண்டுமற்ற சமநிலைப்புள்ளி இவையெல்லாம் விபரணைகளாகத்தான் இருக்க வேண்டும். இவைகளுக்கு ஒரு காலத்தில் விபரணைகள் இருக்குமென்றால் அந்த உலகத்தில் ராமசாமி இல்லை.

"மொதல்ல நீ மாத்திரம் வந்து வேல விசாரி. அப்பொறமா மத்ததுகளைப் பாத்துக்கிருவம்" என்று கறுப்பையா தீர்மானத்தை எடுத்தான். காலை மிகுந்த அழகுடன் விழித்துக் கொண்டது. சூரியக் கதிர்கள் பனியுடன் ஊடல், தயாராக இருக்கின்ற பாத்திகளின் பொலிவு. மனத்துக்குத் தெம்பை அளித்தன.

"ஐயாகிட்ட போவம்" என்று போகும்போது சொல்லிக் கொண்டான்.

"அட ஐயாதான் யாழ்ப்பாணம் போயிட்டாராமே. அம்மாகிட்ட கேப்பம்" அம்மாதான் தீர்மானங்கள் எடுப்பதென்பதைக் கறுப்பையா கண்டிருக்கிறான். அம்மாவின் தீர்மானங்களெல்லாம் ஐயாவினதுக் கெதிர் என்பது வீட்டு நிலைமை. ஆனால் அம்மா தீர்மானம் செய்ய அதுக்கெதிரான ஐயாவின் தீர்மான மில்லாதபடியால், ராமசாமி திரும்ப வேண்டியதாயிற்று.

"அவர் வரக் கேப்பம்" என்று அம்மா ஒரே வசனத்தில் திருப்பி விட்டாள். தர்க்கரீதியான இரண்டாவது இடம் ராசாவின் தோட்டம். எனினும் இறந்து போன கோழியின் ஆவியை விட, ராசாவின் தெரிந்த கடூரப் போக்கு கறுப்பையாவை அந்தப் பக்கமே போகாமல் விரட்டியிருக்க வேண்டும். கறுப்பையா "எடதுகரையல வெசாரிப்பமா? மொதல்ல இந்தப் பக்கிட்டுப் பாத்துக்கிட்டு அப்பொறமா அங்கிட்டுப் பாப்பம்" என்று பெலத்தே யோசித்தான் நேர்த்தியான குடிசைக்குள் ஒவ்வொன்றாகப் போய் வந்து . . .

யோகுவுக்கு இந்தமுறை ஆட்கள் தேவை. தான் விற்ற மிளகாய் எண்ணிக்கையை விட மற்றவர் விற்ற மிளகாய் எண்ணிக்கை அவனுக்கெப்போதும் துல்லியமான பாடம். வித்தியாசம் மனத்தைக் குத்துகிறது. "வாய்க்கால் எங்க திருத்துறாங்கள் வேச மக்கள்" என்பது முழுச்சமா தானமில்லை. இந்த முறை பலவாறாகவும் முயல்வது என்பது பிரதிக்ஞை 'பத்தாயிரங்கண்டு மிளகாய் வைப்பதென்ற இலக்குத் தப்பாமல் அடைய வேண்டுமென்ற கட்டத்தில் ராமசாமியைக் கண்டு கொண்டான். "வேலை செய்வன் போலான் கிடக்கு சாப்பாடுந் தந்து ஆறு ரூபா தருவன்" என்று நியமனம்.

ராமசாமி இரண்டையுங் கண்டு பலயுகம் "சரிங்க" என்றான்.

"நம்ம சம்சாரம் ஒண்ணும் இருக்குதுங்க நல்லா வேல செய்யும்" ஒரு நிமிட இடைவெளிக்குப் பிறகு இதையும் சேர்த்துக் கொண்டான்.

"அதெல்லாம் அப்பொறமா பாத்துக்குவம், மொதல்ல நீ வேலைக்கு வர்றதைப் பாரு" என்ற கருப்பையாவை யோகு மறித்தான். "ஆ வரச்சொல்லு பாப்பம்" விடிகிறது.

ராமசாமியை விட்டு விட்டு கறுப்பையா திரும்பும்போது, கோழியின் ஆவி அவனைச் சூழ்ந்து கொண்டது. தோட்டத்துக்குள் நுழைந்து கொத்தத் தொடங்கி ராசாவின் தோட்டப் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டான். தேடுவது போல் தெரிந்த உருவங்கள் மனத்தில் வேறு பதிகிறார்களே! ஓங்கிக் கொத்தினால் போகிறார்களா?

ராசாவுக்கு ஐம்புலன்களும் கூரான கூர். கறுப்பையாவின் நாய் கோழிக் காலைக் கொறிப்பதைத் தூரத்திலேயே கண்டு கொண்டு சிலிர்த்துக் கொண்டான். "இந்த வேச மகன்ர வேல" என்று தீர்ப்பை வழங்கியவன் நேரே கறுப்பையாவிடம் ஓடி, பலவாறாக அவனை அழைத்து – "என்னடா சொல்லடா என்னெய்தனீயெண்டு" என்று விசாரிக்க, அம்மா முதலில் தன் தலையை வெளியே நீட்டினாள். பிறகு வெளியே வந்தாள்.

"இங்கே ராசா, பொறு, பொறு. என்ன நடந்தது?"

மரண விசாரணையில் இது கொலைதானென்பது ராசாவின் தீர்ப்பு.

கறுப்பையா, "கீரி கொத்திப் போட்டதை, கீரியைத் தொரத்திப்பிட்டு எடுத்துக்கிட்டுப் போனதாம்" சாதித்துக் கொண்டான். "இருட்டில் கோழி யாருதுன்னு

தெரியல்லீங்க" தருக்க பூர்வமான ஒரு கோட்டையை எழுப்பினான். இதற்கு மறு மொழி சொல்வது ராசாவுக்குக் கஷ்டம். ராசாவுக்கு வாயால் கோபம் வரமுடியாத போது, கைகளினாலும் கால்களினாலும் வரப் பண்ணிக் கொள்ளுவான். "இல்லீங்க ஐயா! அடிக்காதீங்க!" கறுப்பையாவின் ஓலம் வானை எட்டுகிறது. கூட்டமும் சேர்கிறது.

"அவனை விடப்பா ராசா" அம்மா தீர்மானமாகச் சொல்ல ஒருவாறு நிற்கிறது. இப்போது தான் சனக்கூட்டமும் என்ன நடந்தது என்று விசாரித்துக் கொள்கிறது. "கள்ளப்படைகள்" என்பது இறுதித் தீர்ப்பு. ஒரு சோறு பதமானால் ஒரு பானை சோத்துக்குத்தான் பானைகளுக்கல்ல. இதிலும் ஒரு சிக்கலிருக்கிறது. பானைக்குள் பானைகள் இருக்க முடியுமா?

கறுப்பையா புழுதியைத் துடைத்து விட்டுச் சிராய்ப்புகளில் அப்பிக்கொண்டிருந்த மண்ணின் துகள்களை, உலகத்துத் துன்பமெல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வந்தவன் ஒருவனின் உறுதியோடு துடைத்துக் கொண்டான். துகள்கள் மனத்தின் துகள்களின் புறத் தோற்றப்பாடு. சிதறவுஞ் செய்கின்றன. ரத்தமுஞ் சிந்துகின்றன.

ராமசாமிக்கு வேலை செய்வதென்பது, அதிலும் தோட்டம் கொத்துவதென்பது கஷ்டமானதல்ல வென்றாலும், 'வெத்தலை' இல்லாதபடியால் மந்த சுதியிலேயே இயங்கிக் கொண்டிருந்தான். சாப்பாடு என்பது கடந்த ஒரு வருஷமாக மாரீசமானாகப் போய்விட்ட நிலையில் உயிருக்கும், உடலுக்கும் உள்ள பந்தம் மிக இறுக்கமாக இல்லாதுபோனால் இந்த வெய்யிலில் இப்படிக் கொத்த முடியுமா? சூரியன் வானில் ஏறி, ஏறி இறங்கவுந் தொடங்கியபோது யோகு அவனைக் கூப்பிட்டான். "இந்தா சாப்பிடு" "சோறு" என்று ராமசாமி சொல்லிக் கொண்டான். திரும்பவும் 'சோறு' 'சோறு' தனியே அவனால் சாப்பிட முடியுமா?

"அன்னன்னிக்கே சம்பளங் குடுத்தீங்கன்னா நல்லதுங்க. சம்சாரம் ஒண்ணும், ரெண்டு புள்ளைங்களும் இருக்குதுங்க . . . "

"அதெல்லாம் பாப்பம் பிறகு. முதல்ல வேலையைச் செய்." ராமசாமி அரைவாசிச் சோறைக் கட்டிக் கொண்டான். யோகுவுக்கு இந்த நிலவரங்களெல்லாம் தெரியும். அரைக்கண்ணால் பார்த்துக் கொள்ளுவான்.

ராமசாமி 'வெத்திலை'யுங் கிடைத்த புளுகில் மண்கெதியில் சீர்ப்பட்டுக் கொள்ளத் தொடங்கியது. நிற்பாட்டுகிற நேரத்துக்கு இங்கே சங்கு இருக்கிறதா? ராமசாமி நிற்பது சம்பளத்துக் கென்பது மட்டுமல்ல, பேசியதில் எவ்வளவு கொடுத்தால்தான் நாளை திரும்பவும் வருவான் என்பதுவும் யோகுவுக்குத் தெரியும். பிழையில்லை ஆள். "இந்தா மூண்டு ரூவா இருக்கு, மிச்சத்தை நாளைக்கு வேண்டு."

ராமசாமி முதலில் அதை வாங்கிக் கொண்டுதான் தொடர்ந்தான். "ரெண்டு புள்ளைங்க இருக்குங்க. பாத்துக் குடுங்க ஐயா"

"இங்கோ நாளைக்கு வா எண்டிரன். பேந்தென்ன. போயிட்டு வா"

ராமசாமிக்கு நம்பிக்கை மிகவுண்டு. இல்லாது போனால், அவனுயிர் உடலில் நிலைத்திருக்குமா?

மீனாச்சிக்குக் கறுப்பையாவும், ராமசாமியும் வருவது தெரிந்தது. செவனும் மூககையாவும் சுருண்டு கிடந்தார்கள். மீனாச்சி சோர்வின் எல்லையில் அவளும் சுருண்டு சரியக்கூடும். கறுப்பையா கோபங் கொள்ளக் கூடிய சீவன். "சே, அறிவு கெட்ட நாயி" என்று ஒரு கல்லைத் தூக்கி எறிந்தான். நிச்சயம் அதுதான் இல்லாவிட்டால் கறுப்பையா தன்னோடு விளையாடு கிறான் என்று ஒரு கணம் பதுங்கி விட்டுத் திரும்பவும் வருமா?

"அடிச்சிப்புட்டானுங்க கீரி இழுத்துக்கிட்டு போயிருந்திச்சின்னா யாரை அடிப்பாங்க? நாசமாப் போவ" கறுப்பையா திட்டத்திட்ட ராமசாமிக்கு மெல்ல மெல்ல இதுவரை தெரியாமலிருக்க இந்த வயிற்று நெருப்பை வளர்க்கிற அசுரனின் உருவம் புரிவது போல இருந்தது.

"ஆறு ரூபாயில்ல தர்ரோன்னாங்க? மூணு ரூபாதான் குடுத்தாங்க. மிச்சம் நாளைக்குத் தர்றாங்களாம்."

"சில ஆளுங்க குடுக்காமலேயே வுட்டுருவாங்க"

"அதெப்படிங்க?" ராமசாமி வியர்வையை வழித்துக் கொண்டான். வயிறு இன்னும் எரியத் தொடங்கியது. "அநியாயமல்ல இருக்கிது."

ராமசாமி – சரித்திரத்துக்குத் தெரியாத இந்த ராமசாமி – தான் கொண்டு வந்த சோத்து மூட்டையை மீனாச்சி பக்கம் எறிந்து "அப்பாடி" என்று நிலத்தில் குந்த, மீனாச்சி, செவனு, மூக்கையா இவர்களை எழுப்ப, கறுப்பையா தன் மனைவியை நினைத்துக் கொண்டே தூண்டிலை எடுத்துக் கொண்டு வெளியே போக, சரித்திரம் தேங்கியே நிற்கிறது. ●


---

பணக்கார உலகம் இருக்கிறதே அது மிகவும் விசித்திரமானது. பணம் மட்டும் இருந்துவிட்டால் அங்கே முட்டாள்களும் புத்திசாலிகளாகப் போற்றப்படுவர். கோழையும் வீரன் பட்டம் பெறுவான். ஆனால் இது முறையா? சரியா? நாமும் இதை ஏற்கத்தான் வேண்டுமா?

– அண்ணா

மானம் பெரியது; உயிரல்ல.
மக்கள் பெரியவர்; மதமல்ல.
விடுதலை வேண்டும்; எவருக்கும்
நாம் அடிமையல்ல. நமக்கு யாரும்
அடிமையாக இருக்க வேண்டா.
இதுவே நமக்குக் கீதை

– அண்ணா



# உயர்வான வாழ்க்கை

மனிதவாழ்க்கையில் இன்பம், துன்பம், உயர்வு, தாழ்வு, மகிழ்ச்சி, சந்தோஷம், கஷ்டம், சிரமம் என கலந்து இருக்கும். இதில் நாம் அனைவரும் விரும்புவது இன்பம், மகிழ்ச்சி, சந்தோஷம், உயர்வு, முன்னேற்றம், வெற்றி, மன அமைதி ஆகும். இவை எத்தனை பேருக்கு கிடைக்கிறது என்று பார்த்தால் மிகக் குறைவுதான். ஒருவர் மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்து போவதுதான் மிச்சம். தன்னுடைய வாழ்வில் கடைசி காலம் வரை உழைத்துக்கொண்டே இருக்க வேண்டியது தான். வாழ்வில் முன்னேற்றம் என்பது இல்லாமல் கஷ்டமான நிலை உண்டாகிறது.

சிலருக்கு வேலை எதுவும் இருக்காது. வருமானம் என்பதும் இருக்காது. ஆனால் திடீர் என்று புது வீடு, புது வாகனம், புது மனைவி என்று ஆளே மாறி இருப்பார்கள். ஒருவர்க்கு யோக காலம் ஆரம்பிக்கிறது என்றால் இப்படித்தான் வாழ்க்கை நிலைமையே அப்படியே தலைகீழ் என மாறிவிடும். எந்த நேரமும் பணம் இருக்கும். மனதில் மகிழ்ச்சி துள்ளும். உடம்பு பெருக்கும், முகம் பொலிவு அடையும். பெரிய இடத்து நண்பர்கள் கிடைக்கக் கூடும். பணம் மேலும் பணமாக மாறும். வாழ்க்கைப் படிப்படியாக உயர்ந்த நிலைக்குச் செல்லும்.

ஒருவரது ஜாதகத்தில் நல்ல யோகமான இடங்களில் கிரகங்கள் நின்றுவிட்டால் அந்த ஜாதகரை மிஞ்ச யாராலும் முடியாது. எந்த இடத்திலும் இவரது வெற்றிக் கொடிதான் பறக்கும். நல்ல கல்வி, உயர்ந்த உத்தியோகம், நல்ல மனைவி பெற்று இனிமையாக வாழ்வர். சிலர் படிப்பின்றி தன்னுடைய சொந்த புத்தியால் உழைத்து முன்னேற்றம் அடைந்து உயர்ந்த நிலையை அடைவார்கள். சமூகத்தில் பலரும் மதிக்கும்படியாக வாழவும், உயர்ந்த வாழ்க்கை அமையவும் ஜாதகத்தில் கிரகங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் பார்ப்போம்.

## உயர்ந்த வாழ்க்கையை தரும் குரு

பொதுவாக ஒருவருக்கு உயர்ந்த வாழ்க்கை அமைய வேண்டுமானால் குரு பகவான் நன்றாக இருக்க வேண்டும். ஒருவருக்கு குரு மட்டும் நல்ல நிலையில் இருந்து விட்டால் அவருக்கு வாழ்க்கை உயர்ந்ததாக அமைந்துவிடும். அதன்படி

1. ஜாதகத்தில் குரு வலிமையாக இருந்தால் எவ்வளவு கெட்ட திசை அல்லது கோட்சாரம் கெட்டு இருந்தாலும் வாழ்க்கை தாழ்வு என்பது இல்லாமல் இருக்கும்.

2. உழைத்த உழைப்பிற்குரிய வளர்ச்சி கை மேல் பலன் கிடைத்து படிப்படியாக உயர்ந்த நிலைக்கு போவதற்கு குரு நன்றாக இருக்க வேண்டும்.

3. முன்னோர்கள் சேர்த்து வைத்து விட்டுப் போன ஆஸ்தி, சொத்துக்கள் மூலம் தன்னுடைய வாழ்க்கையை வளமாக வைத்துக் கொள்வதற்கும் குருவே காரணமாக அமைகிறார்.

4. நண்பர்கள் மூலம் உறவினர் வழியில் சில உதவிகள் பெற்று வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்த நிலைக்கு உருவதற்கும் குருவே துணை புரிகிறார்.



5. நல்ல படிப்பும், உயர்ந்த பதவி வகித்து அதன் மூலம் வாழ்க்கையை வளமாக்கித் தருவதும் குருவே.

6. பொது மக்கள் இடத்தில் நற்பெயர் எடுத்து அரசியல் துறையில் ஈடுபட்டு எம்.எல்.ஏ. அல்லது எம்.பி முதல்வர் போன்ற பதவிகளை அடைந்து இதனால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு குருவின் கருணையே வேண்டும்.

7. வெளிநாடு சென்று அங்கு உழைத்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு வாழ்க்கையை உயர்த்திக் கொள்வதற்கும் குருவே அருள் புரிய வேண்டும்.

8. குறைந்த வருவாய் இருந்தாலும் அநியாய செலவுகள் செய்யாமல், சிக்கனமாக பணத்தைச் சேர்த்து கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்த நிலைக்கு வருவதற்கு குருவின் கருணை தேவை.

9. தான் கற்ற வித்தைகள் மூலம் அதாவது சுய தொழில் செய்வதும், நடிப்புக்கலை மூலம் பொது மக்களிடம் பிரபலம் ஆகி தன்னுடைய வித்தைகளால் ஒருவர் உயர்வு அடைவதற்கும் குருவே காரண கர்த்தாவாக அமைகிறார்.

மேற்கண்ட உயர்ந்த வாழ்க்கையை உண்டாக்கித் தரும் குரு, ஜாதகத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

## குருவின் நிலை :

1) ஆட்சி, உச்சம் பெறுவதும், 2) கேந்திரம், திருகோண ஸ்தானங்களில் இருப்பதும், 3) சுபர்களின் நட்சத்திர பாதத்தில் நிற்பதும் 4) கிரகங்களின் பகையோடு இருக்கக்கூடாது 5) 6, 8, 12க்கு உடைய நட்சத்திர சாரம் பெறக்கூடாது. 6) பாவிகளின் நட்சத்திர சாரம் பெறக்கூடாது. 7) சந்திரனுக்கு 6, 8, 12ல் இருக்கக்கூடாது. 8) குரு நீசம் பெற்று இருந்தாலும் நீசபங்க ராஜயோகமாக அமைய வேண்டும்.

இவ்வகை அமைப்பில் குரு இருந்தால் ஜாதகர் நிலை தாழ்வு என்பது இல்லாமல் உயர்ந்த வாழ்க்கை அமையக்கூடும். இனி ஒரு ஜாதகத்தில் யோகம் செய்யக்கூடிய யோகக்காரன் பற்றிப் பார்ப்போம்.

## உயர்ந்த யோகம் தரும் யோகக்காரன்.

ஒருவரது ஜாதகத்தில் உயர்ந்த யோகம் தரக்கூடிய யோகக்காரன் நல்ல நிலையில் இருக்க வேண்டும். குரு நன்றாக இருந்து யோகக்காரன் நிலை சரியில்லை என்றால் சாண் ஏறி, முழம் சறுக்கும் கதையாகத்தான் வாழ்க்கை அமையும். வாழ்வில் உயர்வு, தாழ்வு மாறி மாறி வராமல் இருக்க யோகக்காரகன் சிறப்பாக இருக்க வேண்டும். இவ்வாறு யோகக்காரன் கீழ்க்காணும் அமைப்புப்படி இருந்தால் நல்ல நிலையில் இருக்கிறார் என்பதை தெரிந்துகொள்ளலாம்.

1) யோகக்காரன் ஆட்சி, உச்சம், நட்பு, சமம் ஆகிய வீட்டில் நின்று இருப்பதும்

2) தனது சொந்த நட்சத்திர பாதத்தில் நிற்பதும்

3) திரிகோண, கேந்திர ஸ்தானத்தில் நின்று இருப்பதும், இந்த ஸ்தான அதிபதிகளின் நட்சத்திர சாரம் பெறுவதும்

4) யோகாதிபதி ராசிக்குரியவன் அல்லது லக்னாதிபதி உடன் சேர்ந்து இருப்பதும்

5) யோகாதிபதியை சுபர்கள் பார்ப்பதும் அல்லது சுபர்களுடன் சேர்ந்து சுப ஸ்தானங்களில் இருப்பதும்

6) யோகாதிபதி ஆட்சி, உச்சம் பெற்ற கிரகங்களுடன் இருப்பதும்.

7) யோகாதிபதி ராசி, அம்சம், பாவகம், திரிகோணம் ஆகிய மண்டலத்தில் ஒரே வீட்டில் நின்று இருப்பதும் நல்ல வலிமையை காட்டுகிறது.

8) ஜாதகர் யோகாதிபதியின் நட்சத்திரத்தில் பிறந்து தொடக்க திசையே யோகாதிபதியின் திசையாக அமைவதும்

மேற்கண்ட நிலையில் யோகாதிபதி இருந்து விட்டால் வாழ்க்கை மேடு, பள்ளம் என்று இருக்காமல் சம சீராக இருக்கும். சிலரை பார்த்து இருப்போம். ஒரு குறிப்பிட்ட காலம் நல்ல நிலைமையில் இருப்பார்கள். அந்த காலகட்டத்தில் அந்த நடப்பு திசை நல்ல யோகம் செய்து வந்தது என அறியலாம். அந்த யோக திசை முடிந்தபின் அந்த மனிதர் மீண்டும் பழைய நிலைமைக்கே வந்துவிடுவார். இதுபோன்ற திசைகள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை நல்ல யோகத்தை அனுபவிக்கும் ஜாதகர்கள் உண்டு. சிலருக்கு பிறந்தது முதலே இறக்கும்வரை யோகம் தரும் திசைகள் நடப்பதும் உண்டு.

உயர்ந்த வாழ்க்கைக்கு திசா புத்திநாதர்களின் அனுசரணை வேண்டும். திசா மட்டும் யோகம் செய்து தருவதும், யோககாரகன் குருவும் நல்ல நிலையில் இருந்தால் திசாநாதன் தரக்கூடிய யோக பலனை முழுமையாக ஜாதகர் அனுபவிக்கக் கூடும். யோகம் இருந்தால்தான் யோகமான வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்து உங்களது ஜாதகம் யோக ஜாதகமா? என்பதை பார்த்துக் கொள்ளுங்கள்

நன்றி – ஜோதிட அரசு

## ஓய்ந்தது வயலின்



புகழ்பெற்ற வயலின் இசைக் கலைஞரான குன்னக்குடி வைத்தியநாதன் செப்டம்பர் 8-ஆம் தேதி சென்னையில் காலமானார். இவருக்கு வயது 73. சிறுவயதிலேயே தனது தந்தையிடம் இசைப்பயிற்சிப் பெற்ற இவர் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், செம்மங்குடி சீனிவாச ஐயர், மகாராஜபுரம் சந்தானம் ஆகிய மேதைகளிடம் பயின்றார். கர்நாடக இசையில் சாதனைகள் படைத்த இவர் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளராகவும் பணியாற்றினார்.

அன்பார்ந்த வாசகர்களே!

தமிழர் தகவலில் பிரசுரிப்பதற்கு ஏற்ற தகவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நகைச்சுவை துணுக்குகள், கவிதைகள், சிவனைப் பற்றிய ஆன்மீக கட்டுரைகள், உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட ருசிகர தகவல்கள் வரவேற்கப்படுகின்றன. எங்கே உங்கள் கைவண்ணத்தை காட்டுங்கள் பார்க்கலாம்??????

-பதிப்பாசிரியர்



# அண்ணாவின் பொன்மொழிகள்...

தமிழே இசையுருவாக அந்த இசையே, தமிழில் முதன்முதலில் தோன்றியது.

வீடு எங்ஙனமோ அங்ஙனமே நாடும் இருக்கும்.

வீட்டுக்கோர் புத்தக சாலை அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும்.

இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது.

மக்களாட்சிக்கு வலிவு மாணவர்கள்தான்.

சமுதாயத்தை உணர்த்துவதற்குத்தான் கல்வி.

உழைப்புக்கு மதிப்பளித்து வந்தால்தான், உற்பத்தி பெருகும்.

நாட்டிற்கு ஏற்றம் தருவது பெண்களின் முன்னேற்றம்.

வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய ஆராய அதில் பல புதிய புதிய அருமையான கருத்துகள் புலப்படும்.

அறம் வெல்லும், நிச்சயமாக வெல்லும். அறம் ஆர்ப்பரிக்காது; அத்துமீறிய காரியத்துக்கு மக்களைச் செலுத்தாது. அதன் பயணம் துரிதமானதாக இராது. ஆனால் தூய்மையானதாக இருக்கும்.

நாம் என்பது வலுவும் பொலிவும் கொண்டதோர் தத்துவம். நாம் என்ற அந்தக் கூட்டுச் சக்தியைக் காட்டிடும் சொல்லினுள் பொதிந்துள்ள அரிய பாடம். ஜனநாயகப் பண்பாட்டுக்கே அடிமையாகிறது.

சமுதாயம் சமநிலை பெற்றால்தான்; சமாதான, நிம்மதியான நல்வாழ்வு கிடைக்கும். அதையே சான்றோர் விரும்புவர்.

விஞ்ஞான கருவிகளின் துணைகொண்டு, மனித உழைப்பைப் பயன்படுத்துவோமேயானால் நல்ல முறையிலே நாட்டினுடைய வறுமை நீங்கப் படுவதற்குத் தக்க வாய்ப்புகள் இருக்கின்றன.



### ஜி-ஜி- பொன்னம்பலம் பிரமித்த அண்ணா

யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர். ஜி.ஜி. பொன்னம்பலம் ஆங்கிலத்தில் விற்பன்னர். அவருடைய ஆங்கில ஆளுமை யாருக்கும் இருந்ததில்லை. நீதிமன்றத்தில் அவர் பேசும் போது நீதியரசர்களே அது புரியாமல் திணறியதுண்டு. அவர் சென்னையில் நடந்த 2ஆவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குச் சென்றிருந்தார். அவருடன் சிவநாயகம் (தினபதி ஆசிரியர்) அவர்களும் சென்றிருந்தார். நிகழ்ச்சி நிரலில் அறிஞர் அண்ணாவின் ஆங்கில சொற்பொழிவு இடம்பெற்றிருந்தது. இவர் என்ன ஆங்கிலம் பேசப் போகிறார் என்று இவர் சிவநாயத்திடம் பேசிக்கொண்டிருந்தார். அண்ணாவின் பேச்சு தொடங்கிவிட்டது. பொன்னம்பலம் அவர்கள் உண்மையில் பிரமித்துப்போனார். அண்ணாவின் ஆங்கிலத்துக்கு நிகராக யாருமே பேச முடியாது என்று மனம் திறந்து சிவநாயகத்திடம் கூறினார். இதை சிவநாயகம் தனது சிந்தாமணி பத்திரிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

**விடுதலை இயக்கம் இருட்டடிப்பினால் மாய்ந்து போகாது;**
**புகழ்பாடுவோர் கிடைக்காததால் புதைந்து விடாது!**

**- அறிஞர் அண்ணா**

# அறிஞர் அண்ணாவைப பற்றிய சில சுவையான செய்திகள்

### ஆடம்பரம் மறுத்த அண்ணா

அண்ணா நோய்வாய்ப்பட்டிருந்த நேரம். பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள், நல்ல வசதியான வீட்டில் தங்கி அண்ணா ஓய்வெடுக்க வேண்டும், அவர் நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என்று விரும்பினார். கிரீன்வேஸ் சாலையிலுள்ள மறைந்த முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமி வசித்த வீட்டை சீரமைத்து தந்தார்கள். ஆனால் அண்ணா அந்த வீட்டிற்குச் செல்ல மறுத்துவிட்டார். இப்படிப்பட்ட ஆடம்பரமான மாளிகையில் குடியிருக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். எனவே, தான் வசித்து வந்த நுங்கம்பாக்கம் இல்லத்திலேயே இறுதிநாள் வரை வாழ்ந்து வந்தார்.

### குடும்பத்துக்கு அனுமதி இல்லை

அண்ணா முதலமைச்சராக பதவியேற்ற விழா அன்று குடும்பத்தில் எல்லோருக்கும் அந்த விழாவைப் பார்க்கும் ஆசை இருந்தது. எப்போதுமே அரசியலுக்குள் குடும்பத்தைக் கொண்டு வராதவர் அண்ணா. விழாவை குடும்பத்தினர் பார்க்க வேண்டும் என்பதற்காக சிறப்புச் சலுகைகள், ஏற்பாடுகள் எதுவும் வழங்கப்படவில்லை. விழா முடியும்வரை சாலையில் கூட்டத்தில் நின்றுதான் பதவியேற்பு விழாவைப் பார்த்தார்கள். அதேபோல் தலைமைச் செயலகத்தில் அவரது அறைக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டும் குடும்பத்தாரை அவர் அனுமதித்தது கிடையாது.

### தாமதமும் காரணமும்

அவர் கூட்டங்களுக்கு தாமதமாகத்தான் செல்வார். அதற்கு அவர் இரண்டு காரணங்களைச் சொல்லுவார். 1. நான் முன்னாடியே சென்றுவிட்டால், என் முன் பேசுவதற்கு மற்றவர்கள் தயங்குவார்கள். 2. நான் முன்னாடியே சென்று விட்டால் மற்றவர்களைப் பேசவிடாமல், என்னை உடனே பேச அழைத்து விடுவார்கள்.

### புற்றுநோய் புத்தகங்கள்

அவருக்கு புற்றுநோய் இருக்கிறது என்று தெரிந்தவுடன் புற்றுநோய் குறித்த ஒரு புத்தகத்தை வாங்கித்தருமாறு இரா. செழியனிடம் அண்ணா கேட்டார். அது உங்களுக்கு எதுக்கு அண்ணா? என்று செழியன் கேட்டார். ஏன் புற்றுநோயைப் பற்றி மருத்துவர்தான் தெரிஞ்சுக்கணுமா? நான் தெரிஞ்சுக்கக் கூடாதா? என்று கேட்டார். புற்றுநோயின் விளைவு என்னவென்பது எனக்கு தெரியுமய்யா என்று அலட்டிக்கொள்ளாமல் சொல்வார்.

### பழைய கார்

அண்ணாவிடம் பழைய கார் ஒன்று இருந்தது. பலர் சொல்லியும் அந்த காரை அவர் மாற்றவே இல்லை. சென்னையில் இருந்து தூத்துக்குடி போகவேண்டு மென்றாலும்கூட அந்த காரிலேயே செல்வார். அவரின் சொந்தக்கார பையன் சுந்தர்தான் அவருக்கு கார் ஓட்டுவார். பல சமயங்களில் அந்த கார் இரவு நேரங்களில் சாலையிலேயே நின்று விடும். அப்போது அண்ணா முன்பக்க சீட்டில் படுத்துக்கொள்வார். அவருக்கு பாதுகாப்பாக அண்ணாவின் உதவியாளரும், ஓட்டுனரும் காரில் அருகில் படுத்துக்கொள்வார்கள்.

### கொள்கை

கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது பற்றி நமக்குத் தெரியாது. அதைப்பற்றி பேசக்கூடாது. படைத்தவன் அவன் என்றால் அவனுக்கு எல்லாம் தெரியும். அவனுக்கு நாம் ஏன்





கற்பூரம் கொளுத்த வேண்டும். இதுதான் கடவுளைப் பற்றிய அண்ணாவின் கொள்கை. சடங்குகளில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. அவருடைய அம்மா வீட்டில் உள்ளவர்கள் மத சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்குகொண்டால் ஒன்றும் சொல்லமாட்டார்.

### வங்கிக்கணக்கே இல்லை

அண்ணா முதலமைச்சராக ஆகும்வரை அவருக்கு வங்கிக் கணக்குக் கிடையாது. முதலமைச்சராக ஆனதும் அரசால் கொடுக்கப்படும் சம்பளம் மற்றும் பயணப்படி காசோலைகளை மாற்றுவதற்காகவே 10 ரூபாய் செலுத்தி வங்கிக்கணக்கை ஆரம்பித்தார்.

### வேகமாக எழுதுவார்

தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் சின்ன அடித்தல் திருத்தல் கூட இல்லாமல் எழுதுவார். அவர் எழுதும் வேகமும் அசாத்தியமாக இருக்கும். அவர் எழுதிப் போடும் காகிதங்களைப் பக்கவாரியாக எடுத்து வைப்பதுதான் குடும்பத்தினரின் வேலை. எந்த ஊருக்கு பிரச்சாரத்திற்கு சென்றாலும் அங்குள்ள விவசாய முறைகளை உன்னிப்பாக கேட்டு தெரிந்து கொள்வார். பிரச்சாரத்தின் போது இதுபோன்ற தகவல்களை அவர் பேசுவதைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

### கணையாழி

1959-ஆம் ஆண்டு நடைப்பெற்ற மாநகராட்சி தேர்தலில் கழக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்ற தருணத்தில் ஒரு விளையாட்டான வாக்குவாதம் அண்ணாவுக்கும் கலைஞருக்குமிடையே நேர்ந்தது. 90 இடங்களில் கழக வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டால் 40 பேராவது வெற்றிபெறுவார்கள் என்பது கலைஞரின் கணிப்பு. 20 அல்லது 25 பேருக்கு மேல் வெற்றி கிடைக்காது என்று அண்ணா வாதாடினார். 90 இடங்களில் கழகம் போட்டியிட்டே தீரவேண்டும் என்று விடாப்பிடியாக வாதிட்ட கலைஞரிடம், அப்படியானால் நீயே தேர்தல் பொறுப்பை ஏற்றுக்கொள். 40 இடங்களுக்கு மேல் வெற்றி கிடைக்குமானால் உனக்கு நான் ஒரு கணையாழி அளிக்கிறேன் என்று அண்ணா உறுதிமொழி வழங்கியிருந்தார்.

அந்த உறுதிமொழியை நிறைவேற்றுகிற வகையில் விழாவும் நடைபெற்றது. அதில் உரையாற்றிய அண்ணா, கீழ்க்கண்டவாறு கூறினார்.

நான் என் மனைவிக்குக் கூட நகை வாங்குவதற்கு கடைக்குப் போனதில்லை! ஆனால் இந்த 45 பொல்லாத தோழர்கள் பெற்ற வெற்றியினால், இந்த கட்டிளங் காளைக்கு நானே கடைக்குச் சென்று கணையாழி வாங்கி அளிக்க வேண்டியவனாகிவிட்டேன். இந்தத் தேர்தலில் மிக திறம்பட பணியாற்றிய கருணாநிதி என் பாராட்டுதலுக்கும் பெருமதிப்பிற்கும் இலக்காகக் கூடியவர். ஆகையினால் நீங்களெல்லாம் மகிழத்தக்க வகையிலும், நான் கொஞ்சம் வருத்தப்படத்தக்க அளவிலேயும் இந்த மோதிரத்தை அவருக்கு அளிக்கிறேன் என்றார்.

### விளக்கை தொங்கவிடுங்கள்

1957 தேர்தலில், எதிர்க்கட்சிகாரர்கள் அண்ணாவை கேவலமாக சித்தரித்து சுவரில் எழுதிவிட்டார்கள். அதைக் கண்ட கழகத்தோழர்கள் கோபத்துடன் அண்ணாவிடம் போய் அதைப்பற்றி சொன்னார்கள். எழுதியது அப்படியே இருக்கட்டும். அதில் ஒரு பெட்ரோமாக்ஸ் லைட்டைத் தொங்கவிட்டு, அதன்கீழே உபயம் அண்ணாதுரை என்று எழுதிவிட்டு வாருங்கள் என்று தொண்டர்களிடம் சொன்னார். அதே மாதிரி செய்தார்கள். அதைக் கண்ட பொதுமக்கள் இப்படி அண்ணாவை கண்டபடி எழுதியிருக்கிறார்களே என்று முகம் சுளித்தார்கள். அண்ணாவின் பண்பாட்டுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

### மதுவிலக்கில் உறுதி

அண்ணா மதுவிலக்கு கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டவர். மகாத்மா காந்தி இறந்தபோது, அண்ணா விடுத்த இரங்கல் செய்தியில் குடிப்பது சாதாரணம், சர்வ சகஜம் என்று கருதப்பட்ட காலம். அவர் (காந்தி) பிறந்த காலம், கள், சாராய கடைகள் மூடப்படுவதை தன் கண்ணாரக் கண்டபிறகே அவர் தன் கண்களை மூடினார். குடிப்பழக்கம் என்பதையே கண்டிராத ஒரு சகாப்தத்தை... தலைமுறையை உருவாக்கியவர் அவர். கள், சாராயக் கடைகளை திறந்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில்தான், நான் ஆட்சியில் தொடர வேண்டும் என்றால், துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு நடையைக் கட்டுவேன். எனவே கள், சாராயக் கடைகளை திறக்க வேண்டும் என்ற பேச்சுக்கு என்னுடைய ஆட்சியில் இடமேயில்லை என்று கூறினார். அதேபோல் கடைசிவரை மதுவிலக்கை ரத்து செய்யவில்லை.



# ஐப்பசி மாத பலன் (அக்டோபர் 15 - நவம்பர் 15)


கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்

37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465


**மேடம்** இனிமையானவர்களே! சுக்ரன் வலுப் பெற்றிருப்பதால் புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். தரவேண்டிய பணத்தை தந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். பெண்ணுக்கு எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். மறைமுகப்போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத்தீரும். போட்டியாளர்களை தவிடுபொடியாக்குவீர்கள். உத்யோகத்தில் வேலைபளு அதிகரிக்கும். திறமையால் வெற்றி பெறும் மாதமிது.

**இடபம்** திறமைசாலிகளே! இந்த மாதத்தின் முற்பகுதி கொஞ்சம் மந்தமாக இருந்தாலும் பிற்பகுதி பரபரப்பாக அமையும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கையில் காசுபணம் புரளும் என்றாலும் கொஞ்சம் செலவுகளை குறையுங்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலியுங்கள். உத்யோகத்தில் மேலதிகாரியுடன் சுமுகமான நட்புறவு ஏற்படும். தடைகளை தாண்டி வெற்றி பெறும் மாதமிது.

**மிதுனம்** கடின உழைப்பாளிகளே! இந்த மாதத்தில் கொஞ்சம் காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் முழுமூச்சுடன் முடித்துக் காட்டுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். விரையச் செலவுகளும், மன உளைச்சலும் வந்துபோகும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் பெருமையடைவீர்கள். சுபகாரிய பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் தரும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். உத்யோகத்தில் மறைமுகமாக செயல்பட்டவர்களை ஒதுக்குவீர்கள். பொறுத்திருந்து சாதிக்கும் மாதமிது.

**கடகம்** கற்பனைவாதிகளே! இந்த மாதத்தின் முற்பகுதியில் காரியங்கள் கைகூடும். வீட்டில் சுபகாரியங்கள் ஏற்பாடாகும். குடும்பத்தாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் கொஞ்சம் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு. மாதப் பிற்பகுதியில் உடல்நலம் பாதிக்கும். திடீர் பயணங்கள் வீண் செலவு வைக்கும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் சுமுகமான லாபம் உண்டு. போட்டிகள் இருக்கும். உத்யோகத்தில் தனிநபர் விமர்சனம் வேண்டாம். மிதமான மாதமிது.

**சிம்மம்** உற்சாகமானவர்களே! 28ந் தேதி முதல் உங்கள் ராசிநாதன் தன வீடான இரண்டாம் வீட்டிற்குள் நுழைவதால் தடைகள் நீங்கும். பணவரவு திருப்தி தரும். உங்களின் நெடுநாள் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். சுக்ரன் வலுவடைவதால் சோம்பல் விலகும். குழந்தைபாக்யம் உண்டாகும். கன்னிப் பெண்களுக்கு காதல் விவகாரம் சுமுகமாக முடியும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் வருகை தருவார்கள். மேலதிகாரியின் ஆதரவை பெறுவீர்கள். நல்லது கெட்டது நான்கையும் உணரும் மாதமிது.

**கன்னி** எதிரிக்கும் உதவுபவர்களே! இந்த மாதத்தில் கொஞ்சம் கவனமாக செயல்படப்பாருங்கள். உடல்நலம் பாதிக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன சண்டை சச்சரவுகள் வந்துபோகும். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற கையிருப்பை கரைப்பீர்கள். சகோதர வகையில் கொஞ்சம் அலைச்சல் இருக்கத்தான் செய்யும். வியாபரத்தில் மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள். பெரிய முதலீடுகள் வேண்டாம். உத்யோகத்தில் உங்களை குறைகூறுவார்கள். நாவடக்கம் தேவைப்படும் மாதமிது.

**துலாம்** எளிமையை விரும்புபவர்களே! இந்த மாதத்தில் வீண் அலைச்சலும், விரையச்செலவுகளும் இருக்கத்தான் செய்யும். சில காரியங்கள் முடிவதைப் போல இருந்தாலும் இழுபறியாகவே இருக்கும். குடும்பத்தாருடன் மனம் விட்டுப் பேசுங்கள். தலைவலி, நெஞ்சுவலி வரும். உறவினர்களிடையே மனக்கசப்பு வெடிக்கும். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்யோகத்தில் மேலதிகாரியை பகைத்துக் கொள்ள வேண்டாம். பொறுமை தேவைப்படும் மாதமிது.


**விருச்சிகம்** கூடிவாழும் குணமுடையவர்களே! ராசிக்குள் சுக்ரன் நிற்பதால் வி.ஐ.பிகளின் தொடர்பு கிடைக்கும். தாயாரின் உடல்நலம் சீராகும். வாகனச் சேர்க்கையுண்டு. ஆடம்பரச்செலவுகளை குறைப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கூடும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தள்ளிப்போன காரியங்கள் உடனே முடியும். தாராளமாக பணம் வரும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். உத்யோகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். தடைகள் உடைபடும் மாதமிது.

**தனுசு** கூடிவாழும் குணமுடையவர்களே! சுக்ரன் மறைந்திருப்பதால் எதிர்பாராத பணவரவு உண்டு. தாயாரின் உடல்நலம் சீராகும். வாகனச் சேர்க்கையுண்டு. ஆடம்பரச்செலவுகளை குறைப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கூடும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தள்ளிப்போன காரியங்கள் உடனே முடியும். தாராளமாக பணம் வரும். வி.ஐ.பிகள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். உத்யோகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை பிறக்கும் மாதமிது.

**மகரம்** அதிகம் யோசிப்பவர்களே! தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் உடல்நலத்தில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். வீட்டிற்குத் தேவையானப் பொருட்களை வாங்குவீர்கள். ஷேர், லாட்டரி மூலம் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள். உத்யோகத்தில் புது வேலை கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். மனநிம்மதி கிட்டும் மாதமிது.

**கும்பம்** வெள்ளையுள்ளம் கொண்டவர்களே! உடல்நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள் வந்தாலும் ஒற்றுமை பாதிக்காது. எதிர்பார்த்த பணம் கைக்கு வந்துசேரும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு உண்டு. வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். தாய்வழி உறவினர்களால் மனக்கசப்புகள் வரும். வியாபாரத்தில் பக்குவமாக செயல்படுங்கள். உத்யோகத்தில் வேலைசுமை அதிகரிக்கும். தாழ்வுமனப்பான்மை விலகும் மாதமிது.

**மீனம்** தைரியமானவர்களே! இந்த மாதத்தின் முற்பகுதியில் அலைச்சல் இருந்தாலும் அதற்கான பலனை பிற்பகுதியில் பெறுவீர்கள். குடும்பத்தாரின் ஆலோசனைகளை ஏற்பீர்கள். பணம் வரும். திடீர் செலவுகளும் இருக்கும். உறவினர்களைச் சந்தித்து உதவி கேட்பீர்கள். கன்னிப் பெண்களுக்கு சுபகாரியங்கள் ஏற்பாடாகும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பதில் கறாராக இருங்கள். உத்யோகத்தில் தேங்கிக் கிடந்த பணிகளை முடிப்பதில் ஆர்வம் காட்டுங்கள். முன்கோபம் வரும். சிந்தித்து செயல்படும் மாதமிது.



சிங்கம் தமிழ்க் கடை
RED LION WINE
184 Hithar Green Lane
Lewisham
London SW13 6QA
Tel: 020 8297 8778
இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் உடன் மரக்கறி
மீன் வகைகள் பல வகைகள் மற்றும் அனைத்து மளிகைப்
பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம் - சிங்கம் தமிழ்க் கடை
இது ஒரு புதிய உதயம் (வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு)
184 Hithar Green Lane, Lewisham, London, SE13 6QA




elSe properties ltd
U can Save More where else?
வீடு, கடைகள்,
வியாபார தலங்கள்
வாங்க, விற்க
வாடகைக்கு அணுகவும்
20 C LOAMPIT HILL
LEWISHAM
LONDON, SE13 7SW
T 020 8691 6878
F 020 8626 4575
info@elseproperties.com
www.elseproperties.com




உங்களுக்கு ஈடு இணையற்ற வைரத்தை பிளாட்டினத்திலும்,
தங்கத்திலும் மற்றும் வெள்ளைத் தங்கத்திலும்
மிக குறைந்த விலையில் அளிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடையும்
WHITE FIRE UK LTD
The Name of Diamond
WHITE FIRE UK LTD
63, Victoria Road Ruislip Manor
Middx HA4 9BH
Phone : 077 80975142 / 077 69714383




SANGAMAM
Jewellers
377-A Rayners Lane
Pinner, HA5 5EN
Tel : 208 429 7221
Mob : 07939813358
Workshop: 208 7955 749
£500க்கும் மேல்
வாங்குபவர்களுக்கு
ஒரு மூக்குத்தி
இலவசம்
பொன் உருக்கி
தாலி செய்து
தரப்படும்

# தலாய்லாமாவுக்கு ஒரு நீதி தமிழருக்கு ஒரு நீதியா?

சுப. வீரபாண்டியன்



தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் விடுதலை வரலாறு தான், இருபதாம் நூற்றாண்டின் வரலாறு ஆகும். தேசிய இன விடுதலைப் போராட்ட வரலாற்றில், திபெத்திற்கும் ஒரு குறிப்பிடத்தக்க இடம் உண்டு.

சியாங்கேஷேக் ஆட்சிக் காலத்திலிருந்தே, தலாய்லாமா தலைமையில் திபெத் மக்கள் போராடி வருகின்றனர். திபெத் இன்று வரை, சீனாவின் ஒரு பகுதியாகவே இருக்கின்ற தெனினும், அவர்கள் தங்களைத் தனி நாட்டினராகவே ஓங்கி ஒலிக்கின்றனர்.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற உலக நாடுகள் பலவும் கூட, திபெத் மக்களுக்கும், தலாய்லாமாவிற்கும் மறைமுகமான ஆதரவைப் பல ஆண்டுகளாகக் காட்டி வருகின்றன.

இரண்டாம் உலகப் போர் உச்சத்தில் இருந்த வேளையில், அமெரிக்க அதிபராக இருந்த பிராங்ளின் ரூஸ்வெல்ட், தங்களின் நேச நாடு களுக்குச் சில அதிகாரிகளை அனுப்பி, அரசையும், மக்களையும் சந்தித்து போர் பற்றிய கருத்துகளை அறிந்துவரப் பணித்திருந்தார். சீனாவிற்கு, இலியோ டால்ஸ்டாய், ப்ரூக் டோலன் ஆகிய இரு அதிகாரிகள் அனுப்பப்பட்டனர். அவர்கள் சீன அரசோடும், மக்களோடும் கலந்து உரையாடினர். எனினும், திபெத் பகுதிக்குள் அவர்களால் நுழைய முடியவில்லை.

இது குறித்து, சீன அதிபர் சியாங்கே ஷேக் அமெரிக்க அரசுக்கு எழுதும்போது, அப்பகுதிக்குள் நுழைவதற்குத் தலாய்லாமாவைத் தொடர்பு கொள்ளும்படி கூறிவிட்டார்கள். அதன்படி, அதிபர் ரூஸ்வெல்ட், 1942 ஜுலை 3ஆம் நாள், தலாய்லாமாவிற்குத் தனியே ஒரு மடல் எழுதினார். அதன்பின்பே அவர்கள், திபெத் பகுதிக்குள் நுழைய முடிந்தது.

இந்நிலை, திபெத்திற்கு அமெரிக்க அரசு அளித்த மறைமுக அங்கீகாரம் என்பதை மறுக்க முடியாது.

புரட்சிக்குப் பின்னர், மாவோ சீன அதிபர் ஆனார். அப்போது, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் திபெத்திற்கு மேலும் தங்கள் ஆதரவைக் காட்டினர். அதனை மாவோ விரும்பவில்லை. தங்கள் நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கவே, மேலை நாடுகள் இவ்விதம் செய்வதாக எண்ணினார்.

சிக்கல் வளர்ந்துகொண்டே இருந்தது. சீனத்தின் செம்படையை எதிர்கொள்ள இயலாமல், 1959ஆம் ஆண்டு, தலாய்லாமா தன் ஆதரவாளர்கள் சிலருடன் இந்தியாவிற்கு வந்துவிட்டார். இந்தியா அவரை விருந்தினராக (அகதியாக அன்று) வரவேற்றது. இமாசலப் பிரதேசத்தில், 'தருமசாலா' என்னும் இடத்தை ஒதுக்கிக் கொடுத்தது. இன்றுவரை தலாய்லாமா அங்குதான் உள்ளார். புலம்பெயர்ந்த அரசாகவே (Government in exile) அது கருதப்படுகிறது. அதன் விளைவாகவே, இந்தியாவிற்கும், சீனாவிற்கும் பகை முற்றி, 1960களின் தொடக்கத்தில் அது போராகவும் வெடித்தது.

மாவோ ஆட்சியின் போது இன்னொரு நிகழ்வும் நடந்தேறியது. திபெத்திலிருந்து ஒரு வணிகக் குழுவைத் தலாய்லாமா வெளிநாடுகளுக்கு அனுப்பினார். அவர்கள் கைகளில் வைத்திருந்தது, திபெத்திய கடவுச்சீட்டு (Tibetian Passport). திபெத் என்று ஒரு நாடு இன்றுவரை உருவாகவில்லை. ஆனால், 50 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் கடவுச் சீட்டை வழங்கினர்.

அவர்கள் அப்படி வழங்கியது கூட தவறு இல்லை. அதனைப் பிரிட்டன் அரசு ஏற்றுக் கொண்டதே, அதுதான் வியப்பு. அப்போது பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த ஆங்காங் நாட்டிற்கு, அந்தக் குழு பயணப்பட்டபோது,

அங்கிருந்த அதிகாரிகள் அதனை ஏற்று, மூன்று மாத கால அனுமதியும் (விசா) கொடுத்தனர்.

1998ஆம் ஆண்டு தலாய்லாமா ஒரு பேட்டியில், ஆண்டுதோறும் அமெரிக்கா பல ஆயிரம் டாலர்களைத் தருமசாலாவில் உள்ள அவர்களின் அலுவலகத்திற்குக் கொடுத்து உதவி வருவதாகக் கூறியுள்ளார்.

ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு உலக நாடுகள் உதவுவதில் நமக்கு ஒன்றும் வருத்தமில்லை, மகிழ்ச்சியே.

ஆனால், இந்தப் போக்கை தமிழ்ஈழ மக்களின் போராட்டத்தில் மட்டும் காட்ட மறுப்பது ஏன் என்ற கேள்விதான் நம் நெஞ்சை அறுக்கிறது.

இலங்கையின் முழுஅரசுரிமை (இறையாண்மை)யும், ஒருமைப்பாடும் சிதைந்துவிடக் கூடாது என்று கவலைப்படும் உலக நாடுகள், சீனாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு குறித்து ஏன் கவலைப்படவில்லை?

தலாய்லாமாவிற்கு ஒரு நீதி, தமிழர்களுக்கு ஒரு நீதி என்பது சரிதானா?

தலாய்லாமாவிற்கு ரூஸ்வெல்ட் எழுதிய மடலில், இரண்டாம் உலகப் போரில், தங்கள் கோட்பாட்டில் நியாயமும், திறமையில் நிறைவும், உறுதியில் அசைவின்மையும் இருப்பதால் வெற்றி நிச்சயம் ("We shall be victorious, because our cause is just, our capacity is adequate and our determination is unshakable") என்று எழுதியுள்ளார்.

இந்தக் கூற்று அமெரிக்கர்களுக்கு மட்டுந்தான் பொருந்துமா? போராடும் ஈழத்தமிழர்களுக்குப் பொருந்தாதா?

தமிழீழ மக்களின் கோட்பாடும் நியாயமானது, அவர்களின் திறமை போதுமானது, உறுதி குலைக்கப்பட முடியாதது. எனவே, அவர்களின் வெற்றியும் நிச்சயம் என்பதை அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் உணர வேண்டும்.

*நன்றி – மக்கள் களம்*

# அந்த நாள்



நான் இலங்கை தொழில் அமைச்சில் கடைமையாற்றிக் கொண்டிருந்த காலம். சிங்களம் படிக்க மாட்டோம் என்று அரசாங்க எழுது வினைஞர் சங்கம் ஒரு கொள்கை பிரகடனம் செய்தது. அதில் சிங்களம் படிக்காமல் தமது வேலையை இழந்தனர் இருவர், அதில் ஒருவர் குரும்பசிட்டி பத்மநாதன், மற்றவர் நயினாதீவைச் சேர்ந்த குலமணி. இதில் குலமணிக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு நாள் வைக்கப்பட்ட பின் அவருக்கு வேலை இழப்பு கடிதம் நிர்வாக பணிமனையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டது. வேலை இல்லை என்ற குறையுடன்தான் அவருடைய திருமணம் நடைபெற்றது. அந்த திருமணத்திற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திலிருந்து அன்றைய தலைவர் செ. கோடீஸ்வரன், நான், புவனேசன் மற்றும் நான்கு நண்பர்களுடன் நயினா தீவிற்கு பயணமானோம். புங்குடு தீவு சென்று கழுதைபிட்டி துறைமுகத்திலிருந்து நயினாதீவிற்கு மோட்டோர் படகில் பிரயாணமாகிறோம். அந்த படகிலிருந்த ரேடியோவில் மிக துயரமான செய்தி ஒன்று ஒலிபரப்பானது. தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் காலமாகிவிட்டார் என்பதுதான் அந்த செய்தி. திருமணத்திற்கு சென்ற எங்களுக்கு இதை விட கொடுமையான துயரம் இருந்ததாக தெரியவில்லை. திருமணம் முடிந்து வீடு திரும்பினோம். அண்ணாவின் மரண ஊர்வலம் செல்லும் காட்சியைப் பற்றிய வர்ணனை ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது. கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற மரண நிகழ்ச்சி அது (அப்படி ஒரு கூட்டம்). ஜெமினியில் இருந்து மெரினா கடற்கரைக்கு செல்லும் அந்த வர்ணனையை எங்கள் கரம்பனூர் ரேடியோ ஒலிபரப்பாளர் சோ. சிவபாதசுந்தரம் தொகுத்து வழங்கினார். இந்த மாபெரும் நிகழ்வை எங்கள் ஊரைச் சேர்ந்த வர்ணனையாளர் தொகுத்து வழங்கியது இன்றும் பசுமையாக என் நினைவில் உள்ளது.

–பதிப்பாசிரியர்



# நீண்ட நாள் ஆரோக்கியம் பெற அற்புதப் பழம், ஆரஞ்சு !

அரைமணி முன்பாக ஒரு கோப்பை ஆரஞ்சுப் பழச்சாற்றை அருந்தினால் நன்கு பசியெடுக்கும். காரணம் ஆரஞ்சு ஒரு நல்ல பசி ஊக்கி.

நோயாளிகளுக்கும், நீண்ட நால் மலச்சிக்கலால் அவதிப்படுவோருக்கும் ஆரஞ்சு பழம் நல்லது. இது உடனடியாக வயிற்றில் உள்ள செரிக்காத உணவு மற்றும் கழிவுகள் அனைத்தையும் வெளியேற்றி விடும்.

ஆரஞ்சுப் பழத்தைச் சாப்பிட்டதும் அது உடனடியாக இரத்தத்தினால் உறிஞ்சப்படுகிறது. அதனால் உடனடியாக உடலுக்கு வெப்பமும், சக்தியும் கிடைத்துவிடுகின்றன.

### அதிக ஆண்டுகள் வாழ ஒரு கப் சாறு !

நீண்ட நாள் வாழ வேண்டும். ஆரோக்கியமாய் வாழ வேண்டும் என்று விரும்புகிறவர்கள் தினமும் ஆரஞ்சுப் பழச்சாறு அருந்தினால் போதும்.

இப்பழத்தின் வைட்டமின் 'சி'யும், கால்சியமும் உடலில் உள்ள திசுக்களைப் பாதுகாக்கின்றன. பல், எலும்பு போன்றவை உறுதியுடன் இருக்கவும், நோய்க்கிருமிகளை அழிக்கவும் ஆரஞ்சுப்பழம் பயன்படுகிறது. இப்பழச்சாறு பற்சொத்தைகளைத் தடுக்கவல்லது.

இப்பழத்தில் உள்ள 'ஏ', 'பி', போன்ற பிற வைட்டமின்களும், சோடியம், பொட்டாசியம், மங்கனீசியம், காப்பர், சல்ஃபர், குளோரின் போன்றவையும் ஆராக்கியத்தை அபிவிருத்தி செய்யப் பயன்படுகின்றன.

எல்லாவிதமான நோய்களுக்கும், குறிப்பாக இரத்தத்தில் விஷத்தன்மை உள்ளவர்கள் (விஷம் அருந்தியவர்கள்) டைபாயிட், அம்மை நோய்கள், சயரோகம், போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆரஞ்சுச்சாறு அருந்தினால் நல்லது. சிறுநீர் நன்கு பிரிய இது வழி வகுக்கிறது. இதனால் நோயாளிகள் துரிதமாகக் குணமாகி விடுவார்கள். தொற்று நோய்க்கிருமி எதுவும் ஆரஞ்சுப்பழச்சாறு சாப்பிட்டவர்களை எளிதில் அண்டாது.

அதனால்தான் 1994 ஆம் ஆண்டு முதல் பெரும்பாலான நோயாளிகளுக்கு இரண்டு தம்ளர் நிறைய ஆரஞ்சுப் பழச்சாற்றைக் கொடுக்கின்றனர். இதை அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் உறிஞ்சி அருந்த வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. அரைமணி நேரம் வரை இதை இப்படி அருந்த வேண்டும். இச்சாறு உடலில் எந்த இடத்தில் நோய்கிருமிகள் இருந்தாலும் அவற்றை அழித்துவிடுகிறது. இதை ஆதார பூர்வமாக அமெரிக்கர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

### எல்லா நோய்களும் குணமாகும் !

ஜலதோஷம், சளி, ஆஸ்துமா, காசநோய், தொண்டைப் புண் முதலியவை குணமாக ஆரஞ்சுச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேன், ஒரு சிட்டிகை உப்பு சேர்ந்து அருந்தினால் போதும். மிகச் சக்தி வாய்ந்த மருந்தாகும் இது. நுரையீரல்களில் உள்ள கோளாறுகள் அனைத்தையும் குணமாக்கும் சக்தியுடையது இந்த ஆரஞ்சு.

தாய்ப்பால் தர முடியாத நிலையா ?

குழந்தைக்குத் தாய்ப்பால் தர முடியாத தாய்மார்கள் தங்கள் கைக்குழந்தையின் வயதுக்கு ஏற்ப 125 மில்லி வரை ஆரஞ்சுப் பழச்சாறு கொடுத்தால் போதும்.

மருத்துவப் பயன்கள் அதிகம் கொண்ட ஆரஞ்சுப் பழத்தின் தாயகம் சீனாதான். அதன் பிறகு

ஆசியா முழுக்கப் பரவியது. தென்னிந்தியாவில் இந்தப் பழத்தைப் பார்த்த வாஸ்கோடகாமா, 1498ஆம் ஆண்டில் மேற்கத்திய நாடுகளுக்கு எடுத்துச் சென்று, அறிமுகப்படுத்தினார்.

இப்பழத்தின் விதைகளைத் தம் பயணத்தின் போது, தாம் பார்த்த எல்லா நாடுகளிலும் அறிமுகப்படுத்திவிட்டுச் சென்ற பெருமை கொலம்பஸிற்கே உண்டு.

**நெஞ்சுவலி இனி இல்லை !**

ஆரஞ்சுப்பழம், இதயவலி, மார்புவலி முதலிவற்றுக்கு மிகச்சிறந்த மருந்தாகும். ஆரஞ்சுப் பழச்சாறுடன் சிறிது தேன் சேர்த்துச் சாப்பிட்டால் போதும். இரத்தக் குழாய்கள் அடைப்பு இன்றி இதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச் செல்ல வேண்டும். அதற்குத் திரவ வடிவத்தில் உள்ள உணவு மட்டுமல்ல, நல்ல சக்தி தரும் மருந்தும் ஆகும், இதய நோய்களுக்கு மட்டும் கண்டிப்பாக ஆரஞ்சைச் சாறாகவே பருக வேண்டும். சுளையாகச் சாப்பிடக் கூடாது. அப்போதுதான் மிகுந்த வேகத்தில் சாறு இதய நோய்களைக் குணமாக்கும்.

சுளையாகச் சாப்பிடுபவர்கள். அவற்றைச் சாப்பாட்டிற்குப் பிறகே சாப்பிட வேண்டும். அதனால் ஜீரண சக்தி விரைந்து செயல்படும்.

நாக்கு வறட்சி உள்ளவர்கள் இப்பழச்சாற்றை நன்கு அருந்தலாம். ஊட்டச்சத்து நிறைந்த பழம் என்பதால் அதுவே உணவாகவும், மருந்தாகவும் பயன்பட்டுக் காய்ச்சலைக் குணமாக்கிவிடுகிறது.

100 கிராம் ஆரஞ்சுப்பழ்தில் 59 கலோரி இருக்கிறது. ஆனால் பழங்களிலேயே மிக உயர்தரமான கால்சியம் இப்பழத்தில்தான் உள்ளது. இது மூன்று கப் பாலுக்கு இணையானது. ஒரு கப் பழச்சாற்றிலேயே தேவையான கால்சியம் கிடைத்துவிடுவதால் இரவில் நன்கு தூக்கம் ஏற்படுகிறது. 100 கிராம் பழத்தில் வைட்டமிக் 'ஏ' யானது 350 சர்வதேச அலகு இருக்கிறது. இதனால் கண்பார்வையும் நன்கு தெளிவாகிறது.

கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் வாந்தி மயக்கத்தையும் இப்பழச்சாறு கட்டுப்படுத்துகிறது. ஆரஞ்சுப் பழத்தை தினமும் சாப்பிட்டு நீண்ட நாள் ஆரோக்கியமாய் வாழ்வோம். ●





# சுமை குறைந்தால் சுகம் பெருகும்.

மரவேலை செய்து வந்த வடிவேலனுக்கு பெரும்பொருள் சம்பாதிக்கும் ஆசை இருந்தது. அவன் உள்ளூரில் இருக்கும் முருகன் கோவிலுக்கு செல்வதுண்டு. அன்று மாலை கோவிலுக்குச் சென்று முருகா! என்னை மட்டும் ஏன் பணக்காரனாகப் படைக்கவில்லை. உனக்கு என் மீது கருணை இல்லையா என்று வருந்திச் சொன்னான்.

அன்றிரவு கனவில் முருகன் அடியார் ஒருவர் தோன்றினார். அவனை ஒரு பட்டறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு பல மயில்கள் செய்யப்பட்டிருந்தன. இம்மயில்களில் உனக்குப் பிடித்தமானதை எடுத்துக் கொண்டு மலை மீதுள்ள முருகன் கோவிலுக்குச் செல் என்றார். வடிவேலன், வர்ணம் பூசப்பட்ட தோகையுடன் இருந்த அழகு மயிலை எடுக்கச் சென்றான். ஆனால் உலோகத்தால் ஆன அதை அவனால் தூக்க முடியவில்லை. மரத்தால் ஆன மற்றொரு மயில் தூக்குவதற்கு சுலபமாக இருந்தது. அதை தலையில் சுமந்து கொண்டு மலைக்கோயிலுக்குச் சென்றான்.

முருகப் பெருமான் வடிவலனைக் கண்டு சிரித்தார்.

உலோகத்தால் ஆன மயிலை ஏன் கொண்டு வரவில்லை. நீ மர வேலை செய்பவன் என்பதால் மர மயிலை கொண்டு வந்தாயா என்று கேட்டார்.

அதை தூக்க முடியவில்லை என்றும், மர மயில் எடை குறைவாக இருந்ததால் மலை மேல் ஏறிவர சௌகர்யமாக இருக்குமே என்று அதைத் தூக்கி வந்ததாகவும் வடிலேன் சொன்னான்.

நீ சொல்வது சரிதான். நீ கனமான மயிலை கொண்டு வர நினைத்திருந்தால் நிச்சயம் மலை ஏற முடியாமல் போயிருக்கும். அதுபோலத்தான் உலகில் கோடீஸ்வரராக வாழ வேண்டுமென்றால் பொறுப்புகளும் அதிகமாகும். அதுமட்டுமில்லாமல் பல வழிகளில் பாவங்களைச் செய்ய வாய்ப்புகள் ஏற்பட்டு விடும். நீ உன் நிலையிலிருந்தே முன்னேறுவதற்கான வழியைப் பார். இருக்கும் நிலையிலேயே நிம்மதியைத் தேடு. இப்போது வாழ்கின்ற வாழ்க்கையை ரசிக்கக் கற்றுக் கொள். சுமையைக் குறைத்தால் சுகம் பெறுவாய் என்று கூறிவிட்டு மறைந்தார்.

கனவிலிருந்து விழித்த வடிவேலன் தன் அறிவுக் கண்களைத் திறந்த முருகப் பெருமான் சொன்ன பாதையில் நடக்க உறுதியெடுத்தான்.

# பச்சை வயல் கனவு

தாமரைச் செல்வி

அத்தியாயம் 11

பரந்தனுக்கும் கிளிநொச்சிக்கும் நடுவே கண்டிவீதியின் அருகே வேலாயுதத்திற்கு குடியிருக்க அரை ஏக்கர் காணி கிடைத்துவிட்டது. மூன்று வருடங்கள் காத்திருந்த பின்னர்தான் இந்தக்காணி கிடைத்திருந்தது. இன்ன இலக்க காணி உனக்கு என்று கூட்டிப்போய்க் காட்டினார்கள். இந்த மூன்று வருடங்களிலும் மேலும் குத்தகைக்கு வயல் எடுத்து செய்திருந்தார்கள்.

இப்போது சிவத்திற்கும் வயல் செய்வதில் ஈடுபாடு வந்துவிட்டது. நெல்லுக்கும் புல்லுக்கும் வித்தியாசம் தெரிந்தது. ஏர் பிடித்து உழும் லாவகம் படிந்தது. கதிர் அறுக்கவும் சூடு மிதிக்கவும் இயல்பாய் முடிந்தது. மண்வெட்டி பிடித்ததில் தோள்களில் உரம் ஏறிற்று.

வேலாயுதத்திற்கு காணி கொடுத்த பிறகு குமரபுரம் கிராம விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கர் வீட்டுக்காணியும் மூன்று ஏக்கர் வயல்காணியும் கொடுக்கப்படும் என்று அறிவித்தபோது சிவம் தனக்கு அதில் வேண்டும் என்று பதிந்து கொண்டான்.

''நீயும் வயல்காணி எடுக்கலாம் அண்ணை வீட்டுக்காணி மட்டும் எடுத்து என்ன செய்யப்போறாய்?'' என்று கேட்டான் சிவம்.

''இல்லையடா எப்பவும் தெருக்கரைக்காணிக்கு மதிப்புக்கூடத்தானே. இந்தக்காணிதான் எனக்கு நல்லது. ஒரு பக்கம் கல்வீடு கட்டி இருக்கலாம். கொஞ்சகாலம் பொறுத்து மற்றப்பக்கத்தில் ஒரு மில் போடப் போறன்''.

''மில்லோ''

''இங்கயிருந்து நெல்லுக்குத்த சனங்கள் ஆனையிறவுக்குப் போகவேண்டியிருக்கு. இங்க மில் போட்டால் நல்ல உழைப்பு இருக்கும். வயல்மட்டும் செய்யிறதோட நிற்கக்கூடாது. வயல் செய்து உழைக்கிற காசை மில், கட்டடம், காணி என சொத்துக்களாய் மாத்த வேணும். மண் எங்களுக்கு விளைஞ்சு தந்தால் எல்லாச்செல்வமும் எங்களிட்ட வந்தது மாதிரித்தான். இங்க றங்கூன் மணியத்தார், பினாக்கர், பொன்னபம்பல வாத்தியார் எண்டு இருக்கினம். அவையள் மாதிரி பெரிய ஆட்களாய் வரவேணும்''.

வேலாயுதம் சொல்வதை சிவம் பிரமிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

''பூநகரி ரோட்டில பரந்தன் சந்திக்குக்கிட்டவாய் கொஞ்ச வயல்காணி வாங்க வேணும்.''

அவன் நினைத்தால் அதை செய்து முடிப்பான் என்று சிவத்துக்குத் தெரியும்.

வேலாயுதத்திற்குக் கிடைத்த அரை ஏக்கர் காணியையும் காடு வெட்டி எரித்து துப்புரவு செய்தார்கள். மரியக்கண்டுவும் அவர்களுடன் நிண்டு முழுநாளும் உழைத்தான். காணிக்கு முன்புறம் பிரதான வீதி. பின்புறம் ரயில் ஓடும் தண்டவாளப்பாதை. பரந்தன் சந்தியிலிருந்து நடந்து போகின்ற அளவு தூரத்தில்தான் காணி இருந்தது. காணி துப்புரவாக்கி முடிந்ததும் இரண்டு அறை ஒரு விறாந்தை என்று வீடு எழும்பியது.

அந்த வருடம் சூடடித்து முடிய முதல் தடவையாய் சங்கங்கள் லொறிகளில் நெல் ஏற்றிச் சென்றன. தெருக்களில் இப்போது மனித நடமாட்டமும் அதிகரித்தது. வேலாயுதம் அந்தத்தடவை ''போர்ட்பிறிவெற்'' கார் வாங்கினான். கார் ஓடுவதற்குத் தான் பழகும்போதே சிவத்தையும் பழகவைத்தான். இருவருமாய் காரில் போய் கனகம் மச்சாளையும் இரண்டு வயது பாலசந்திரனையும் கூட்டி வந்தார்கள்.

மழை லேசாகத் தூறிக் கொண்டிருந்த ஆவணி மாதக்கடைசியில் புதுவீட்டுக்கு குடிவந்தார்கள். சிவம் வயல் வீட்டிலேயே இருந்து கொண்டான். நேரம் கிடைக்கும்போது அங்கு போனால் நல்ல சாப்பாடு கிடைக்கும். ஒடியல்புட்டும் குரக்கன்புட்டும் சாப்பிட முடிந்தது. வேலாயுதம் வேறு காணிகள் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு இந்தக் காணியை சிவத்தையே செய்யச்சொல்லிக் கொடுத்தான். வயல் செலவுக்கு காசும் கொடுத்தான். அடுத்த வருடம் வேலாயுதம் உழவு இயந்திரம் வாங்கினான்.

தனக்குத் தருவதாகச் சொல்லப் பட்ட குமரபுரக்காணி இன்னும் கொடுக்கப்படாதது பற்றி சிவத்துக்கு மிகவும் கவலையாக இருந்தது. டி.ஆர்.ஓ வைப்பார்த்துக் கேட்கலாம் என்றாலும் அவர் எப்போது கிளிநொச்சி வருகிறார், போகிறார் என்று தெரியாமல் இருந்தது. யாழ்ப்பாணத்திலோ பளையிலோ இருப்பதாகச் சொன்னார்கள். விதானையார்களுக்கும் விபரம் தெரியவில்லை.

''குமரபுரத்திட்டத்தில தரப்போற வயல் காணியள் நெல் செய்கைக்கு நல்லதோ எண்டு ஆராயிறத்துக்கு மண் எடுத்து கொழும்புக்கு அனுப்பி யிருக்கினமாம். வாறமாதம் கொழும்பில யிருந்து ஆட்கள் பார்க்க வருவினமாம். நல்ல மண் எண்டு அவை தீர்மானிச்சால் கெதியில காணியளை குடுப்பினம்'' என்று விபரம் சொன்னார்.

இம்முறை உழவியந்திரத்தால் சூடடித்தார்கள். மிக வேகமாயும் இலகுவாயும் வேலைகள் நடந்தன. உழவும் இப்படியே. கிடாமாடுகளுடன் இந்த நாலைந்து வருடங்கள் பட்டபாடு நினைவுக்கு வந்தது.

அந்தத்தடவை நெல்விற்ற கையுடன் ஊருக்குப் போய்வரவேணும் என்று நினைத்துக் கொண்டான். தலை மூட்டையாய் உடுப்புகள் கொண்டு வந்து விற்கும் வியாபாரி முகமது காக்கா அன்று அவர்கள் காணிக்கும் வந்திருந்தார். முதன்முதல் தான் சொந்தமாய் வயல் செய்ததை நினைத்து எல்லோருக்கும் உடுப்பு வாங்கினான். குடிசை வாசலில் மூட்டையைப் பிரித்துக்காட்ட அதிலிருந்து ஆச்சிக்கு ஒரு சீலை. அப்புவுக்கும், சின்னையனுக்கும் கரை போட்ட நாலுமுழ வேட்டி. அன்னத்துக்கு சரிகை போட்ட பட்டுச்சீலை, அன்னத்தின் குழந்தைக்குப் பஞ்சுச் சட்டை எல்லாம் எடுத்தான். முகமது காக்கா சொன்ன அளவு நெல்லை அளந்து கொடுத்தான்.

அண்ணனிடம் சொல்லிக் கொண்டு வண்டில் கட்டிக் கொண்டு ஊருக்குப்போனான்.

அப்பு காலில் வாதம் ஏற்பட்டு இப்போது தோட்டத்தறைக்குப் போவதில்லை. வேலாயுதம் அவர்களுக்கு குறைவைக்காமல் நெல்லும் காசும் அனுப்பி வைப்பதால் அவர்களின் சீவியம் நடந்து கொண்டிருந்தது. சின்னையன் வண்டில் ஓடி உழைப்பது போதாமலே இருந்தது.

அவனைக் கண்டதும் அன்னத்தின் மூன்று வயதுக் குழந்தை கணேசு ஓடி வந்து மாமா என்று கட்டிக் கொண்டது. வாரித்தூக்கிக் கொண்டான். அப்பு நன்றாய் தளர்ந்து விட்டார். தலைவாசலில் பாய்விரித்துப்படுத்திருந்தார்.

ஆச்சி அவனைப் பார்த்து,

''என்ன மோனை மெலிஞ்சு கறுத்துப் போனாய்'' என்றாள் கவலையாக.

''சும்மாயிரணை. சொக்கு வைச்சிருக்கு. மீசை தடிச்சிருக்கு. வண்டி வைச்சிருக்கு. நீ மெலிஞ்சு போனான் எண்டு சொல்லுறாய்'' அன்னம் சிரிப்போடு சொன்னாள். தான் கொண்டு வந்த உடுப்புக்களை எடுத்து எல்லோருக்கும் கொடுத்தான்.

''சிவலையும் வெள்ளையும் மேய்ச்சலுக்கு தரவைக்குப் போட்டுதுகள். இவர் பொழுது பட சாய்ச்சுக் கொண்டுவருவார்'' என்றாள் அன்னம்.

''நான் போய்ப் பார்த்துக் கொண்டு வாறன்''.

''சரி நீ போ. நான் தண்ணி அள்ள புளி வெட்டைக்கு வரவேணும்''.

சிவம் வேட்டியை மடிச்சுக் கட்டிக் கொண்டு தரவைக்குப் போனான்.

வெயிலின் சூடு இறங்கிவிட்ட நேரம் மஞ்சள் வெயில் எங்கும் பரவியிருந்தது. தரவைவெளியில் பல மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சிவலையையும் வெள்ளையையும் பார்த்து தடவிவிட்டான்.

மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த நடராசுவைப் பார்த்துவிட்டு

''பள்ளிக்கூடம் போறியோ. இல்லை மாடு தான் மேய்ச்சுக்கொண்டிருக்கிறியோ'' என்று கேட்டான்.

''பள்ளிக்கூடம் போகவேண்டாம் எண்டு அப்பு சொல்லிப்போட்டுது. போன மாரிக்கு கறவை மாடு வேண்டினாங்கள். இப்ப பால் கறந்து குடுக்கிறனாங்கள். நான்தான் பால் குடுக்கப்போறது''.

நடராசு இப்போது காற்சட்டை போட்டிருந்தான். இடுப்பில் நாடா கட்டியிருந்தான். பதின்மூன்று வயதுக்கு இன்னும் மெலிந்த தோற்றத்தில் இருந்தான்.

''அண்ணை! கிளித்தட்டு மறிக்கப் போகேலையே.''

''மாடுகளைப் பாத்திட்டு போகப்போறன்.''

''உங்கட விளையாட்டுத்தான் திறம் அண்ணை.''

சிவம் அவனைப் பார்த்துச் சிரித்தான்.

''இண்டைக்கு விளையாடுவம் என்ன.''

தரவைக்கரையோடு நாலைந்து பெண்கள் இடுப்பில் குடங்களுடன் நல்ல தண்ணீர் அள்ள புளிவெட்டைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

''என்ன சிவத்தான்... எப்ப வந்தது...''

பார்வதி அக்காள் அவனைப் பார்த்துவிட்டு கேட்டாள்.

''இண்டைக்குத்தான்.''

அந்தப் பெண்களுக்குள் ஒரு பெண் மட்டும் புதியவளாக இருந்தாள். மஞ்சள் நிறத்தில் கறுப்புக்கரை போட்ட நெசவு சீலை கட்டியிருந்தாள். தலையை இழுத்து இறுக்கிப் பின்னியிருந்தாள்.

இதுவரை பார்த்திராத பெண்.

இவன் யோசித்துக் கொண்டிருந்த போதே அவர்கள் நடந்து போய்விட்டார்கள். அந்தப் பெண் யார் என்று நடராசுவைக் கேட்கலாமா என்று முதலில் யோசித்தான். வேண்டாம் உவன் போய் சிவம் அண்ணை விசாரிச்சவர் என்று யாரிடமாவது சொல்லிவிடக்கூடும்.

அவன் புளிவெட்டைக்குப் போனபோது நடராசுவும் கூடவே வந்தான். சண்முகமும், தியாகனும் தங்கள் தங்கள் மச்சாள்மாரைத் திருமணம் செய்திருந்தார்கள். ஆனாலும் விளையாடுவதை விடவில்லை. புளி வெட்டையில் புழுதி பறந்தது. அவனைக் கண்டதும் ஆரவாரமாக வரவேற்றார்கள்.

"வாடாப்பா நீயும் வந்து விளையாடு."

அவனும் விளையாட கோட்டில் கால் வைத்தபோது சற்று தூரத்தில் நல்ல தண்ணீர் கிணற்றருகே அன்னம் நின்று அந்தப் பெண்ணுடன் கதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. இறங்கடா சிவம். நீயும் அந்தக் கோட்டில நில்லு."

விளையாட்டுத் தொடங்கியது... அடிக்கடி பார்வை கிணற்றடிப்பக்கம் பாய்ந்தது. அன்னம் ஏதோ சொல்ல அந்தப் பெண் வாய் பொத்திச் சிரித்துக் கொண்டிருந்தாள். என்ன மலர்ச்சியான முகம்..

அன்னம் தண்ணீர்க்குடத்துடன் இந்தப்பக்கம் வர அந்தப் பெண் மற்றப் பெண்களுடன் மறு பக்கமாய் போனாள்.

இவள் ஆராய் இருக்கும்.. இந்தப் பக்கம் முந்தி ஒரு நாளும் பாக்கேலையே.. யோசித்துப் பார்த்தான்.

"சிவம் விட்டிடாதையடா... ஐயோ என்னடா பழத்தை விட்டுட்டாய். எங்கையடா வாய் பார்த்துக் கொண்டு நிக்கிறாய்."

சண்முகம் பெரிதாய்க் கத்தினான். அவன் தன்னை உலுக்கிக் கொண்டான். மனதுக்குள் வெட்கமாய் இருந்தது.

"இனி வா பாப்பம்."

முழுக்கவனத்தையும் விளையாட்டில் பதித்தான். விளையாடி முடிந்து தரவைக்குப்போய் சின்னையனுடன் சேர்ந்து மாடுகளை சாய்த்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

இரவு எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் அன்னத்திடம் மெதுவாய்க் கேட்டான்.

"கிணத்தடியில கதைச்சுக் கொண்டிருந்தாய் ஆரடி அது".

அன்னம் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள்.

"இல்ல ஒருநாளும் பாக்காத ஆளாக் கிடக்கு அதுதான்."

"அது பாருவதி அக்காளின்ர சொந்தக்காரப் பெட்டை வந்து நிக்குதாம். ஏன் கேட்கிறாய்."

"சும்மா தான்"

சிறிது நேரம் பொறுத்துக் கேட்டான்.

"மெய்யேடி என்ன பேராம்"

"ஆருக்கு?"

"அது தான் நீ கதைச்சியே அந்தப் பெட்டைக்கு"

"பேரை ஏன் கேட்கிறாய்"

"எனக்கென்னத்துக்கு பேர் சும்மா கேட்டனான்."

அன்னம் அவன் முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு "பராசக்தி" என்றாள்.

மெதுவாய் அவன் எழும்பி வந்து பாய் விரித்து படுத்துக் கொண்டான்.

இடுப்பில் குடத்துடன் அந்தப் பெண் நடந்து போனதுதான் கண்ணுக்குள் நின்றது.

மறுநாள் மாலை தரவை வெளியிலே போய் நின்றான். மற்றைய பெண்களோடு அவள் போகும் போதும் வரும்போதும் பார்த்துக் கொண்டு நின்றான்.

சின்ன முகத்தில் மூக்குத்தி மின்ன மெல்லிய தோற்றத்தில் இருந்தாள். காற்றில் பறக்கும் சேலைத் தலைப்பை இழுத்து இடுப்பில் செருகிக்கொண்டே நடந்தாள். அவன் மனதுக்குள் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அன்னத்துடனும் எதுவும் கதைக்கமுடியவில்லை. நாலாம் நாள் மனமில்லாமல் கிளிநொச்சிக்குக் கிளம்பினான்.

அடுத்த விதைப்பு நேரத்தில் சிவத்துக்கு குமரபுரத்தில் காணி கிடைத்தது. கிளிநொச்சியில் நடந்த காணிக்கச்சேரியில் யாழ்ப்பாணத்திலிருந்து டி.ஆர்.ஓ முருகேசம்பிள்ளை வந்து இந்தக் காணிகளைப் பகிர்ந்து கொடுத்தார். காணி உத்தியோகத்தார்கள், சுற்றுவட்டார விதானைமார் எல்லோரும் நின்றிருந்தார்கள். விதானை யாரும் காணி உத்தியோகத்தரும் வந்திருந்தார்கள்.

பரந்தன் சந்தியிலிருந்து மேற்காகப் போகும் பூநகரி வீதியில் வலது கைபக்கம் திரும்பும் வீதியில் குமரபுரம் அமைந்திருந்தது. ஒவ்வொரு ஏக்கர் வீட்டுக் காணிக்கும் மூன்று ஏக்கர் வயல் காணியும் கொடுக்கப்பட்டது.

வீட்டுக் காணிக்குரிய ஒவ்வொரு ஏக்கர் முடிந்ததும் தொடர்ந்து வயல்காணிகள் கிராமத்தைச் சுற்றியிருந்தன. குமரபுரத்தின் நடுப்பகுதியில் அவனுக்குரியது என்று வீட்டுக் காணி இலக்கம் எழுதி பதிந்து தந்தார்கள். கிராம எல்லையில் மூன்று ஏக்கர் வயல் காணியும் பதிந்து தந்தார்கள்.

அன்றும் மழை மெலிதாய் தூறிக் கொண்டிருந்தது.

சிவம் தனக்குக் கிடைத்த வீட்டுக் காணியை ஒற்றையடி பாதையில் நின்றபடி பார்த்தான்.


பாலை, முதுரை, விண்ணாங்கு, வினாத்தி போன்ற மரங்களுடனும் அடர்த்தியான பற்றைகளுடனும் பெரியகாடு போல் இருந்தது.


எனக்குச் சொந்தமான மண் இது.

இனிமேல் எனது இருப்பிடம் இதுதான். மனம் சிலிர்த்துக் கொண்டிருந்தது. அந்தக் காடு அவனைப் பயமுறுத்தவில்லை.

காடு இப்போது வசீகரமாக தெரிந்தது.

(தொடரும்)


இன்முக உபசரிப்புடன்
புடவைகள் வாங்க
சிறந்த இடம்
ADSHAIYA SILKS
311, Ley Street
Ilford
Tel : 208 514 4565


Euro Travels-ன்
மற்றுமொரு சேவை
லண்டனில் இருந்து சென்னைக்கு
போகிறவர்களுக்கு
விமான நிலையத்துக்கு
வாகன வசதி
தங்கும் வசதி
தமிழ் நாட்டை சுற்றி
பார்க்கும் வசதி
நல்ல முறையில் ஏற்பாடு
செய்ய தொடர்பு கொள்ளவும்
London
Euro Travels & Tours Ltd
சிறந்த வாகன வசதியும் சிறந்த தங்குமிடமும்
ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்
Chennai
ARS Tours
சுற்றுலா துறையில் 40 வருட அனுபவம்
வேல்ஸ் விமான நிலையம்
பெர்மிங்ஹாம் திருப்பதி கோயில்
போய்வர 17, 8 இருக்கைகள்
கொண்ட வாகனம் ஒழுங்கு
செய்து தரப்படும்
தமிழில் தொடர்பு கொள்ள
தி. அருள்தாஸ்



மேன்மை கொள்

# சைவ நீதி



சிவாய நம

புலம் பெயர்ந்த லண்டன் மக்களின் ஆன்மீக அறிவும் சைவ வழிபாடும் சைவத்துக்கு ஏற்ற வகையில் அமையவில்லை. இதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஒரு அமைப்பு தேவையாக உள்ளது. சைவ பெருமக்கள் பேரவை எனும் ஒரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் சிவ வழிபாட்டை முன்னிருந்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். சிறு தெய்வ வழிபாடுகள் தோன்றி சிவ வழிபாட்டை சிதைத்து விட்டது கவலைக்குரிய விடயம். சிவ வழிபாட்டின் தத்துவம் திருமுறை ஓதுதல், தேவாரம் படித்தல். இவற்றை பரப்பும் நோக்கத்துடனும், சைவ சித்தாந்த வகுப்புகளை நடத்தவும் ஒரு அமைப்பை ஏற்படுத்த தமிழர் தகவல் விரும்புகிறது. இந்த அமைப்பில் உறுப்பினராக சேவை செய்ய விரும்புபவர்கள் முற்றிலும் சிவ வழிபாட்டை ஆதரிக்கிறவராக இருக்க வேண்டும். ஆகவே நீங்கள் விரும்பினால் இந்த அமைப்பில் சேருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சைவ பெருமக்கள் பேரவை
லண்டன்



## திருச்சிற்றம்பலம்

1. பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத ஊரர் திருத்தாள் போற்றி
[ நால்வர் துதி]

2. பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே
[விநாயகர் துதி]

3. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே
[தொல்வினைகள் தொலைய]

4. மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே
[உடல் பிணி நீங்க]

5. பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குற நீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீ வினையே
[பிள்ளைப் பேறு பெற]

6. உன்னிஇருபோதும் அடியேனும் அடியார்தம் இடர்ஒல்க அருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல்நிழல் இருந்த துணைவன் தன் இடமாம்
கன்னியரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பியரு மங்கலம் மிக
மின்னியனும் துண்ணிடை நன் மங்கையர் இயற்றுபதி வேதிகுடியே
[திருமணம் கைகூட]

7. இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே
[செல்வம் பெருக]

8. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே
[ நிலையான நல்துணை]

9. நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ்ஞான சம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எல்லாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே.
[ நிலையான நல்துணை]

10. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச் சிவாயே.
[ நிலையான நல்துணை]

11. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே
[திருக்குறுந்தொகை]

12. நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.
[திருக்குறுந்தொகை]

13. பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவு இலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீரா நோய் தீர்த்து அருளவல்லான்தன்னைத்
திரிபுரங்கள் தீ எழத் திண் சிலை கைக் கொண்ட
பேராணைப் புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.
[திருத்தாண்டகம்]

14. மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றாலும் பிறந்தேன் இனிப் பிற
வாத தன்மை வ ந்தெய்தினே
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க் கறை
யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே.
[கல்வி பெற]

15. நானேயோர் தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கும் அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே
[திருவாசகம்]

16. பன்நெடுங்காலம் பணிசெய்து பழையோர் தாம்பலர்
ஏம்பலித் திருக்க
என்நெடுங் கோயில் நெஞ்சுவீற்றிருந்த எளிமையை
என்றும் நான் மறக்கேன்
மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடகசாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை இராச
ராசேச்சரத் திவர்க்கே
[திருவிசைப்பா]

17. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று செய்தவன்
பண்ணிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே
[திருப்பல்லாண்டு]

18. சிவசிவ என்கிலர் தீ வினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிட தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே
[திருமந்திரம்]

19. கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவத்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே
[காரைக்கால் அம்மையார்]

20. உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்
[பெரியபுராணம்]

21. வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்
[உலக வாழ்த்து]

**சைவத்தை வளர்ப்போம் திருமுறை ஓதுவோம்**

# 8 ஆம் தேதி பிறந்தவர்களின் பலன்கள்

கே.பி.வித்யாதரன்

முழுமையாக சனி பகவானின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் தனக்கென வாழாப் பெருந் தகையர்கள். ஆறு தனக்காக ஓடுவதில்லை. கனிகள் மரத்துக்காகப் பழுப்பதில்லை. அதுபோல நீங்கள் உங்களுக்காக வாழ்ந்ததில்லை. பூமியைப்போல பொறுமை காத்தாலும், எப்போதும் எதிரிகளை இரண்டு சுற்று ஓடவிட்டு மூன்றாவது சுற்றில் அடக்கிவிடுவீர்கள். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்என்பதைப்போல விடாமுயற்சியால் விட்டதைப் பிடிப்பீர்கள். ஜென்ம எதிரியாக இருந்தாலும் நெருக்கடி நேரத்தில் முன் நின்று உதவுவீர்கள். ஆழ்கடலைப்போல அமைதியாக இருக்கும் நீங்கள் பெரிய விஷயங்களை பிரமாதமாக முடிப்பீர்கள். ஆனால், உப்புக்கும் பிரயோஜன மில்லாத விஷயங்களுக்கெல்லாம் புலம்புவீர்கள்.

அமைச்சரே உங்களுக்கு நெருங்கியவராக இருந்தாலும், அவருடைய காரோட்டியிடம்தான் கதை பேசுவீர்கள். போட்டி, பந்தயம், வாக்குவாதம் என்று எது வந்தாலும் உங்கள் முறைக்கு காத்திருப்பீர்கள். வரட்டும் பார்க்கலாம் என்கிற மனோபாவம் உங்களிடத்தில் இருக்கும். எல்லா விஷயங்களும் உங்களுக்குத் தெரிந்திருந் தாலும் அதைச் செயல்படுத்தும்போது தொடக்கத்தில் தடுமாறுவீர்கள். அதீத வேகம் என்பது உங்களிடத்தில் எப்போதும் இல்லாத ஒன்று. ஆனாலும் திடீரென்று உங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். ஏனெனில் சனிபகவானின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர் நீங்கள். பழைய விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் அலாதி ஆர்வம் இருக்கும்.

பலாப்பழம் போன்று பார்வைக்கு நீங்கள் கரடுமுரடாக இருந்தாலும், பழகிய பின்னர்தான் நீங்கள் தேன்சுளை என்பது தெரியவரும். முதல் பார்வையில் உங்களைப் புரிந்து கொள்வது கடினம். ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டியில் படித்தாலும் வட்டார மொழியை மறக்கமாட்டீர்கள். குளத்தில் குதித்து குளித்ததையும், ஓடையில் நீந்தியதையும், திருடித் தின்ற மாங்காயையும், தலைவாழை இலைபோட்டு சாப்பிட்டதையும் நினைத்து நினைத்து ஏங்குவீர்கள். சிலருக்கு உதவப்போய் சில அவமானங்களை சந்திப்பதுண்டு. இதெல்லாம் வெளியில் சொன்னா வெட்கக்கேடு என்று தனக்குள்ளே விஷயங்களை பூட்டி வைத்துக் கொள்வீர்கள். உங்களுக்குள் எப்போதுமே ஒரு ரகசிய உலகம் உண்டு. அதனாலேயே உங்களை அழுத்தக்காரன் என்று பலர் சொல்வார்கள்.

நகைக்கடை வைத்திருந்தாலும் நான்கு முழவேட்டி அணிந்து கொண்டு, வெறும் நாலுகிராம் மோதிரத்தோடுதான் இருப்பீர்கள். ''நம்ம கையில என்ன இருக்கு... எல்லாம் கொடுக்கறது. தலையில் என்ன எழுதியிருக்கோ அதுதானே நடக்கும்'' என்று விதிக்கு விளக்கம் கூறுவீர்கள்.

கல்யாணம், காதுகுத்து என்று எந்த விழாவாக இருந்தாலும் கடைசி வரிசையில் உட்காருவீர்கள். எல்லா விஷயங்களிலும் பகட்டு இல்லாமல் மிகச் சாதாரணமான நபராக இருப்பதையே விரும்புவீர்கள். வலக்கை செய்வது இடக்கைக்கு தெரியாமல் பார்த்துக் கொள்வீர்கள். சின்ன வயதில் நான் பட்ட கஷ்டங்கள் தன்னைச் சுற்றியிருப்பவர்கள் படக்கூடாது என்று உறுதியாக இருப்பீர்கள்.

ஏதாவதொரு பழக்கத்திற்கு அடிமையாவீர்கள். தத்துவப்பாடல்களை விரும்பிக் கேட்பீர்கள். உடல் நலத்தில் அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டீர்கள். மரத்தடி என்று கூட பார்க்காமல் தூங்கி விடும் எளிமையானவர் நீங்கள். அநாவசியமாக கோபப்பட மாட்டீர்கள்.

படிப்பில் கவனம் செலுத்தினாலும் தாய்மொழியைவிட அன்னிய மொழியில்தான் அதிக மதிப்பெண் எடுப்பீர்கள். விலங்கியல், மண்ணியல், ஆர்க்கியாலஜி, நினைவுச் சின்னங்களை பாதுகாத்தல், டீசல் மெக்கானிக்ஸ், பிரின்டிங், தோல், தொழிற்சாலை, கேட்டரிங் டெக்னாலஜி போன்றவை சார்ந்த படிப்புகள் உங்களுக்கு ஏற்றவையாகயாகும்.

இரக்கப்பட்டு காதலிப்பீர்கள். திருமணம் செய்து கொள்வீர்கள். வாழ்க்கைத் துணையை கண்கலங்காமல் பார்த்துக் கொள்வீர்கள். வீட்டிற்குத்

தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஒரு வருடத்திற்கு மொத்தமாக வாங்கிப் போட்டு விடுவீர்கள். மனைவியை மட்டும் நேசிக்காமல் மாமனார், மாமியார் என்று எல்லோரையும் கவனித்துக் கொள்வீர்கள். பிள்ளைகள் மீது எல்லையில்லா பாசம் காட்டுவீர்கள்.

எலக்ட்ரானிக் பொருட்களை விரும்புவீர்கள். நவீனமாக யோசித்தாலும் வீடு கட்டும்போது முகப்புச் சுவரில் பாறாங்கற்களை பதித்து பழமையில் புதுமையை காட்டுவீர்கள். கடல் கடந்து வேலைக்குப் போனாலும் தாய், தந்தையரை முடிந்தவரை அழைத்துப் போக விரும்புவீர்கள். பூர்வீகச் சொத்தை சகோதரர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள். கேட்டால், 'அவனை நினைச்சாதான் கவலையா இருக்கு' என்பீர்கள். இரக்கம் உங்களின் ஆதார சொத்து.

கார் ஸ்பேர் பார்ட்ஸ், பெரிய நிறுவனங்களுக்கு அட்டைப்பெட்டி சப்ளை செய்தல், சமையலறை சாதனங்கள், மரச்சாமான்கள், உணவகம், உரக்கம்பெனி, சிமென்ட், ஜல்லி கற்கள், செருப்புக்கடை, பாத்திரக்கடை, பிரின்டிங் பிரஸ், பில்டிங் கான்ட்ராக்ட் போன்ற தொழில்களில் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம். அலுவலகத்தில் எல்லோருடைய வேலையையும் இழுத்துப்போட்டு செய்வீர்கள். ஆனால் உங்கள் வேலையை தாமதாக முடிப்பீர்கள்.

பொதுவாக உங்களுக்கு சரும நோய்களும், காதுவலி, கண்களில் நீர் வடிதல், ஹிரண்யா போன்றவையும் வந்து சிகிச்சை மூலம் குணமாகும்.

கோயில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். பொதுவாக கடவுளிடம் சண்டை போடுபவர்கள் இந்த எண்ணில் பிறந்தவர்கள் அதிகமுண்டு. 'ஏன் இப்படியிருக்கு உலகம்.... உன்னால மாத்த முடியாதா' என்றெல்லாம் பேசுவீர்கள். பொதுவாக எந்த மாதமானாலும் 5, 6 தேதிகள் உங்களுக்கு ராசியானது. நிறங்களில் சில்வர் கிரே, வெளிர் நீலம் எப்போதும் அமைதியைக் கொடுக்கும். எந்தக் காரியம் தொடங்கினாலும் தென்மேற்கு திசையை நோக்கித் தொடங்க வெற்றி நிச்சயம். நீலக்கல் (சபையர் ப்ளூ) அணிய அதிர்ஷ்டக் காற்று உங்கள் பக்கம் திரும்பும்.

பூரண சனிபகவானின் ஆதிக்கத்தில் பிறந்திருந்தாலும், உங்களுக்கு திருமால் மீது மாறாத பக்தியிருக்கும். சிவாம்சத்தின் சாரமாக சனிபகவான் விளங்கினாலும் பெருமாளை வழிபடுவதை விரும்புவீர்கள். அதுமட்டுமல்லாது கடல் என்பது எட்டாம் எண்ணுக்குரிய சனிபகவானின் ஆதிக்கத்திற்குட்பட்டது. பாற்கடல் பரந்தாமனான மகா விஷ்ணு சயனக் கோலத்தில் கிடந்து சகல பிரபஞ்சத்தையும் ஆள்கிறான். அவன் கிடப்பதே கடலில்தான். எனவே சயனக்கோலத்தில் மகாவிஷ்ணு அரங்கனாக சேவை சாதிக்கும் கோயில்கள் அனைத்தும் உங்களுக்கு ஏற்றவையாகும். அதில் தானாக ஆவிர்பவித்த ஸ்ரீரங்கம் ரங்கநாதனை தரிசிக்க, உங்கள் வாழ்க்கை பெருங்கடல் போல பரந்து விரியும். சந்தோஷ அலைகள் உங்கள் உள்ளத்தை நிறைக்கும். ●

## 30.09.2008 நவராத்திரி பூஜை ஆரம்பம்.



உலகெங்கும் வியாபித்திருப்பவள் அம்பிகை. அவளே துர்க்கையாக, மகாலட்சுமியாக, சரஸ்வதியாக இருக்கிறாள். இந்த அகிலம் போற்றும் நாயகிக்குத்தான் ஒன்பது நாட்கள் திருவிழா. வண்ண கொலு பொம்மைகள் கூட, அம்பிகை, அந்த பல ரூபங்களில் காட்சி தருகிறார் என்பதையே உணர்த்துகின்றன. முதல் மூன்று நாட்கள் பராசக்தியை துர்க்கையாக வழிபட்டு, வீரம், சக்தியினைப் பெறுவதும், அடுத்த மூன்று நாட்கள் லட்சுமியாக வழிபட்டு செல்வங்களைப் பெறுவதும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதியாக வழிபட்டு ஞானத்தைப் பெறுவதும் அவரவர் சௌகரியம் போல என்றாகிவிட்டது. வழக்கமாக மகாலாய அமாவாசைக்கு அடுத்தநாளான பிரதமையில் நவராத்திரி கொலு வைப்பது என்று விழா ஆரம்பிக்கும். இந்த ஆண்டு 28.09.2008 அன்று மதியம் துவங்கும் அமாவாசை 29.09.2008 அன்று மதியம் 2 மணிவரை நீடிக்கிறது. பிறகு பிரதமை திதி ஆரம்பிக்கிறது. ஆகவே அடுத்த நாள் 30.09.2008 அன்று நவராத்திரி விசேஷங்கள் ஆரம்பம் என்கிறது பஞ்சாங்கம்.

# பயணக் கட்டுரை - 5



ஆறுபடை வீடுகளில் இரண்டு படைவீடுகளைப் பற்றி சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம். மதுரை மீனாட்சியை தரிசிக்கும் முன் மதுரையைப் பற்றிய சில செய்திகள்:

17வது நூற்றாண்டைச் சேர்ந்த திருமலை நாயக்க மன்னரால் 1636ஆம் ஆண்டு கட்டப்பட்டது திருமலை நாயக்கர் மஹால். மதுரையில் இது மிகவும் பிரபலமானது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் இருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மதுரையில் முன்பு இது நீதிமன்ற வளாகமாக இருந்தது. இப்போது பார்வையாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் கட்டிட அமைப்பு மிகவும் பிரசித்திப் பெற்றது. மண், கல், முட்டை, சர்க்கரை போன்ற பொருட்களை சேர்த்து வடிவமைக்கப்பட்டு மிகவும் அலங்காரமாக அமைக்கப்பட்டுள்ளது. பிரமாண்டமான தூண் வேலைப்பாடு இப்போது பார்த்தாலும் பிரமிக்க வைக்கும். மகாராணி தங்குமிடம் எந்த நேரமும் குளிராக இருக்கும். இதற்கான காரணம் அந்த மண்டபத்துக்கு கீழே நீர்த்தடாகம் ஒன்று இருப்பதாக சொல்கிறார்கள். இந்த திருமலை நாயக்கர் மஹாலைப் பற்றிய ஒரு கதை ஒன்று உண்டு. மஹாலை கட்டிமுடித்த உடன் மன்னர் ஒரு பகிரங்க அறிவிப்பு கொடுத்திருந்தார். இந்த மாளிகைக்குள் வந்து தனது மனைவியின் முத்து மாலையை திருடுபவர்களுக்கு ஒரு கிராமத்தையே பரிசாகக் கொடுப்பேன் என்று அறிவித்திருந்தார். கள்ளன் ஒருவன் உடும்பை எறிந்து அதன் மூலம் கயிறு கட்டி ஏறி ஒரு துவாரம் போட்டு மஹாராணியின் முத்து மாலையை கவர்ந்து அந்த கிராமத்தை பரிசாகப் பெற்றான். அந்த கிராமம்தான் திறமையான கள்ளர்கள் வசிக்குமிடம். அவன் போட்ட துவாரம் இப்போதும் இருக்கிறது. இந்த மஹாலை கட்டுவதற்கு மதுரை தெப்பக்குளத்தில் இருந்து மண் எடுக்கப்பட்டது. அந்த இடம்தான் இப்போது மதுரையில் பெரிய தெப்பக்குளமாக காட்சியளிக்கிறது.

இந்த இடம் தற்சமயம் மிகவும் பரபரப்பான இடமாக மாறிவிட்டது. தெப்பக்குளத்திற்கு முன்புறம்தான் மருதுபாண்டியரின் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

மதுரையில் இருந்து 40 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் வைகை அணை மதுரைக்கு செல்லும் அனைவரும் பார்க்க வேண்டிய ஒரு இடமாகும். இது சுற்றுலா தலமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 67ஆம் ஆண்டே இந்த வைகை அணை மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)






ஓரறிவுப் பயிர்களிடமும் அன்பு செலுத்திய இன்னொரு தீவிர அகிம்சாவாதி. தென்னாடு பெற்ற பேறு. வாடியப் பயிரைக் கண்டே வாடிய வெள்ளை மனசுக்காரர். ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும் என்ற இணக்கமான உணர்வை வெளிப்படுத்திய இறைச்செல்வர் ராமலிங்க அடிகளார். அவர் தந்த வாழ்க்கை தத்துவங்களை நம் நடைமுறையில் புகுத்தி அன்னாரை நினைத்து வாழ்வாங்கு வாழ்வோம்.




யமுனா ராஜேந்திரன் அவர்களின் ஆறு நூல்கள் விமர்சன நிகழ்வு 28.09.20008 அன்று நடைபெற்றது.

சீர் வளர் சீர் பேரூர் ஆதீனம் சாந்தலிங்க சுவாமிகளின் 85ஆம் ஆண்டு நாண்மங்கல விழாவை அவருடை சீடர்கள் 26.09.2008 அன்று ஆதீனத்தில் கொண்டாடினார்கள்.



சிவனது புகழைக் கேட்பதே காதுகளுக்கு அணிகலன்.

சிவாலயத்தை வலம் வருவதே கால்களுக்கு, சிலம்பும், கொலுசும் ஆகும்.



### துர்க்கையைப் பற்றிய செய்தி

மகிஷாசுரன் கொடுமையை ஒழிப்பதற்காக தேவர்கள் தங்களிடமிருந்த முழு சக்தியையும் கொடுத்த உருவாக்கிய ஆண்மை உள்ள ஒரு சக்திதான் துர்க்கை. துர்க்கையின் தோற்றம் தேவர்களின் ஆற்றல் மட்டுமின்றி அவரவர்களின் ஆயுதங்களும் கிடைக்கப்பெற்றது. அந்த அரக்கனை அழித்த நன்றிக்காக மூன்று நாட்கள் நவராத்திரி விழா. இதைவிட கொடியேற்றி பிரமோற்சவம் செய்யும் விழா வேறு எங்கும் இல்லை. ஆனால் லண்டனிலும் இலங்கையிலும் துர்க்கைக்கு கொடியேற்றி தேரோட்டுகிறார்கள்.



# படித்ததில் பிடித்தது

செல்வத்தை சேர்ப்பதிலும் துன்பம்; சேர்த்ததை காப்பதிலும் துன்பம்; சேர்த்தது ஒரு நாளில் மறையும் போதும் துன்பம்; செல்வம் என்பதே என்றும் துன்பம் தருவதுதான் என்று மகாபாரதம் அறிவுறுத்துகிறது. இதற்குச் சரியான சான்றாக புத்த ஜாதகக் கதை ஒன்று உண்டு. காசியில் அந்தணன் ஒருவன் இருந்தான். சில குறிப்பிட்ட கிரகங்கள் ஒன்று சேரும்போது வானத்தைப் பார்த்து குறிப்பிட்ட வார்த்தைகளை உச்சரித்தால் நவரத்தினங்களான வைடூரியம், மரகதம், தங்கம், வெள்ளி, முத்து, பவழம், கோமேதகம், மாணிக்கம், வைரம் ஆகியன மழையாகப் பொழியும். வேதபம் என்னும் வித்தையை அவன் அறிந்திருந்தான்.

அந்தணனும் சீடனும் ஒருநாள் காட்டுவழியில் நடந்தபோது திருடர்கள் வழிமறித்தனர். இருவரிடமும் ஒன்றும் இல்லாததால், அந்தணனைப் பிடித்து வைத்துக் கொண்டு, சீடனை பணத்துடன் வந்து குருவை விடுவித்துச் செல்லும்படி கட்டளையிட்டனர். சீடன் சென்றதும் அந்தணன் வானத்தைப் பார்த்தான். குறிப்பிட்ட கிரகங்கள் கூடியிருந்தன. உங்களுக்குப்பணம்தானே வேணும்? இப்போது நவரத்தின மழையையே பொழியச் செய்கிறேன். எடுத்துக் கொண்டு என்னை விட்டு விடுங்கள் என்று வேதப வித்தையை பிரயோகித்தான் அந்தணன். மறுநிமிடம், நவரத்தினங்கள் விண்ணிலிருந்து விழுந்தன. திருடர்கள் மகிழ்ச்சியுடன் அந்த விலைமதிப்பற்ற மணிகளை மூட்டை கட்டியபோது, வேறொரு திருடர் கூட்டம் அங்கு திரண்டு வந்து சுற்றி வளைத்தது. உங்களிடம் இருக்கும் நவரத்தின மூட்டையை கொடுத்துவிடுங்கள் என்று புதிதாக வந்து வழிமறித்த திருடர் தலைவன் கேட்டான்.

இந்த அந்தணரைக் கேளுங்கள். எவ்வளவு வேண்டுமானாலும் வானத்திலிருந்து வரவழைத்துக் கொடுப்பார் என்று அவர்கள் கூறினர். அந்தணன் வானத்தைப் பார்த்தான். கிரகங்கள் விலகிவிட்டன. இப்போது என்னால் இயலாது என்றான். கோபத்தில் திருடர் கூட்டம் அந்தணனைக் கொன்றது. நவரத்தினங்களை உடைமையாக்கிக் கொள்ள இரண்டு திருடர் கூட்டமும் ஒன்றோடொன்று மோதியதில் இருவர் மட்டும் உயிர் பிழைத்தனர்.

இருவருக்கும் பசியெடுத்தது. ஒருவன் நவரத்தின மூட்டையை பாதுகாப்பது என்றும் மற்றவன் உணவு தேடி வருவது என்றும் முடிவானது. உணவில் விஷம் கலந்துவிட ஒருவனும் வாளால் வெட்டிவிட மற்றவனும் மனதில் சதி செய்தனர். உணவோடு வந்தவனை வெட்டிக் கொன்று, தன் பசி தீர விஷம் கலந்த உணவை உண்டவனும் உயிர் துறந்தான். செல்வம் சீரழிவையேத் தரும் என்கிறது இந்தக் கதை.

தமிழருவி மணியன்.

ஸ்ரீரங்கம் கோபுரத்தை வரைய புஷ்கரணி பக்கம் போனேன். கோபுரத்தில் சூரிய வெளிச்சம் நேரடியாக படுகிற கோணம் அங்கிருந்துதான் கிடைத்தது. ஆனால் கோயில் பிரகாரத்திற்கு அருகிலேயே நின்று வரைய வேண்டி இருந்தது. கோயில் அர்ச்சகர் என்னிடம் வந்தார். என் குலம் கோத்திரங்களை விசாரித்தார். என் பேச்சு, நடை, உடை பாவனைகளை வைத்து பிராமணர் இல்லை என்று தெரிந்ததும் அவரின் முகம் போன போக்கே சரியில்லை. முறையான அனுமதி வாங்காமல் வரையக்கூடாது என்று கடிந்து கூறினார். நான் ஓவியக்கல்லூரி மாணவன். படம் வரைவதைத் தவிர வேறொன்றும் செய்யப்போவது இல்லை. உள்ளே உட்கார்ந்து வரைவதென்றால் அனுமதி கேட்டிருப்பேன். வெளியே உட்கார்ந்து வரைவதற்கு யாரிடம் அனுமதி பெறுவது? மாணவன் என்று சொன்னபிறகும் நீங்கள் கோபப்படுவது நியாயமில்லை என்று பணிவாக சொன்னேன். ஓ, நியாயதர்மம் வேறு பேசுறீயா, இரு வர்றேன் என்று உள்ளே போனவர் வேறு சில அர்ச்சகர்களுடன் வந்து என்னை அடித்துவிரட்டாத குறைதான். முடிந்தவரை போராடிப் பார்த்துவிட்டு இயலாமையோடு திரும்பி வேறு இடத்திற்கு போய் அவர்களுக்கு தெரியாமல் படத்தை வரைந்து முடித்தேன். பெரியார் மீது அப்போதுதான் எனக்குப் பெரிய மரியாதை வந்தது. அவர் ஏன் பிராமணர்களை வெறுத்தார் என்பதன் அர்த்தம் எனக்கு அனுபவமாக விளங்கியது. அந்தக் கோயிலையும் ஆண்டவனையும் அவர்கள் அனுமதியின்றி யாரும் நினைக்கவும் கூடாது என்று கருதுகிற அந்த அர்ச்சகரின் போக்கும் என்னை கடுமையாக பாதித்தது. படிப்பறிவில்லாத சாதாரண கிராமத்து பாமர மக்கள், எனக்குப் படம் வரைய இடம் தந்து உணவு தந்து உபசரித்து அனுப்பிய எத்தனையோ அனுபவங்கள் இருக்கிறது. மெத்தப்படித்து தமிழகத்தின் முக்கிய கோயிலில் அர்ச்சகராக இருக்கும் ஒருவர் தீண்டாமை நோக்கத்தோடு என்னிடம் நடந்துகொண்டது எனக்கு புதிய அனுபவமாக இருந்தது.



-திரைப்பட நடிகர் சிவகுமார் அவர்களின் டைரியிலிருந்து



Tooting-ல் தமிழருக்கான முதல் கடை
118
TEL: 020 8682 3777/ FAX: 020 8682 3342
Prime FOOD & WINE
NEWSPAPERS & MAGAZINES - OFF LICENCE - GROCERY
ASIAN & SRI LANKAN GROCERIES - FRUITS & VEGETABLES
118, Tooting High Street, London SW 17 ORR
Tel : 020 8682 3777
நம்மவரின் வசதிக்கேற்ப எமது
கடையை விஸ்தரித்துள்ளோம்.
உங்களுக்கு வேண்டிய
சகல தெரிவுகளும் எங்கள்
புதிய காட்சியறையில் உள்ளன.




இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


நம்பிக்கையை கைவிடாதே!
அதுதான் வெற்றியின் முதல்படி
-அண்ணா
Tooting Diamonds-ஐ
Mithus Jewellery-யுடன்
இணைத்துள்ளோம்
Mithus
Jewellers
322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792


Painfree Clinic
NHS அழைப்பிற்காக காத்திருந்து அலுத்து விட்டதா ?
கை, கால், கழுத்து, முதுகு வலியுடன் நெடுநாள் அவஸ்த்தையா ?
மொழி பிரச்சினையால் உங்கள் வலியை முழுமையாக உணர்த்த முடியவில்லையா ?
நமக்காக ஒன்று அருகில் இருந்தால் நன்று என நீங்கள் நினைப்பது எங்களுக்கு கெட்டது, . . .
அதனால் Bromley இல் ஒரு புதிய Physiotherapy சிகிசை அறை (வீட்டுச் சூழலில்)
மருத்துவமனை செல்கிறோம் என்ற எண்ணம் தோன்றா வண்ணம் முழுவதும் வீட்டுச் சூழலிலே !
உடனே முன்பதிவு செய்யுங்கள் நலம் பெறுங்கள் தொடர்புகளுக்கு:
07903501336
07794424147